# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 110 பங்குனி 02ஆம் நாள் வெள்ளிக்கிழமை 16 மார்ச் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## சட்டவரைவில் கையொப்பமிட வேண்டாம்

கொழும்பு, மார்ச் 16
நாடாளுமன்றத்தில் கடந்த 7 ஆம் திகதி நிறைவேற்றப் பட்ட பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து சகலரையும் பாதுகாக்கும் பன்னாட்டுச் சமவாயச் சட்ட வரைவில் சபாநாயகர் கருஜயசூரிய கையொப்பமிடக்கூடாது என்று கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புக்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.
(விரிவு பக். 12)

## தைரொயிட் புற்றுநோய்க்கு தெல்லிப்பழையில் சிகிச்சை

தைரொயிட் புற்றுநோயால் பாதிக்கப்பட்டோருக்கான சிகிச்சை வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இதற்கான சிகிச்சைகள் நாட்டில் இதுவரை மகரகம மற்றும் குருநாகல் மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு வந்தன.
தற்போது தெல்லிப்பழையில் ஒருநாளைக்கு சுமார் 6 நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்க முடியும் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது. (விரிவு பக். 12)

### யாழ்ப்பாண மாவட்ட

# உள்ளூராட்சி சபைகளின் முதல் அமர்வுக்கான திகதி அறிவிப்பு

### யாழ். மாநகர சபை 26ஆம் திகதி

யாழ்ப்பாணம், மார்ச் 16
யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சபைகளில், உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் முதலாவது அமர்வு நடத்தவேண்டிய நிலையில் 16 சபைகள் உள்ளன. இவற்றின் முதலாவது அமர்வு ஆரம்பமாகும் திகதிகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சனால் >> 24

## தரம் 1, 2 க்கு ஆங்கிலப் பாடம்

தரம் 1, 2 மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
இதுவரை தரம் 3 இல் இருந்தே ஆங்கிலப் பாடம் கற்பிக்கப்பட்டு வந்தது.
தரம் 1, 2 க்கான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று நடந்தது.
(விரிவு - பக். 02)

## 9 ஆம் திகதியிட்ட அரசிதழிலேயே பெயர்கள் வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 16
உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கிய அரசிதழ் 9ஆம் திகதியிடப்பட்டே வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் கடந்த 9ஆம் திகதி அரசிதழில் வெளியாகும் >> 06

## வடக்கில் நான்கு சபைகள் 20ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் முதலாவது சபை அமர்வு ஆரம்பிக்கப்படாத சபைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.
யாழ்ப்பாணத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபை, கிளிநொச்சியில் பூநகரி >> 23

## மருதங்கேணி அறப்போர் ஓராண்டைக் கடந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 16
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் முன்னெடுக்கப்பட்டுவரும் அறவழிப் போராட்டம் நேற்றுடன் ஒரு வருடத்தைக் கடந்தது. நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
இறுதிக்கட்டப் போரின்போதும் அதற்குப் பின்னரும் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட >> 06

## உறுப்பினர்களுக்கான கடிதம் அவசரமாக அனுப்பிவைப்பு

### உள்ளூராட்சித் திணைக்களம் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16
உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு முதலாவது சபை அமர்வுக்குரிய கடிதங்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
இந்தப் பணிகளை உள்ளூராட்சித் திணைக்களத்தினர் இரவிரவாக நேற்று முன்னெடுத்தனர். >> 24

## முகநூலுக்கும் தடை நீக்கம்

### மைத்திரியின் உத்தரவை செயற்படுத்த 1 1/2 மணிநேரம் சென்றது



கொழும்பு, மார்ச் 16
மூன்று நாள்களுக்கு தற்காலிக முடக்கம் என்று கூறி இடைநிறுத்தப்பட்ட முகநூல், 7 நாள்களின் பின்னர் நேற்று >> 06

## தமிழ்க் கூட்டமைப்பை தவறியும் ஆதரிக்காதீர்

### தனது உறுப்பினர்களுக்கு ஆனந்தசங்கரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16
உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் ஒருபோதும் >> 06

## சிவாஜிலிங்கம் கைதாகி விசாரணை முன்பிணை இருந்ததால் விடுவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 16
வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் முல்லைத்தீவுப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு, ஒன்றரை மணித்தியாலங்களின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
நீதிமன்று அவருக்கு ஏற்கனவே முன்பிணை >> 24

## சிறுபான்மையினர் விடயத்தில் சட்டம், ஒழுங்கு கேள்விக்குறி!

### கூட்டரசைச் சாடுகிறார் கோடீஸ்வரன் எம்.பி.

அம்பாறை, மார்ச் 16
இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. சிறுபான்மையினரைப் பாதுகாப்பதில் கூட்டரசும் தவறியுள்ளது. >> 06

## இலங்கை அரசுக்குக் கட்டுப்பட இணங்கியது முகநூல் நிர்வாகம்

### தடைநீக்கத்துக்கு இதுவே காரணம்

கொழும்பு, மார்ச் 16
இலங்கை அரசால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை முகநூல் நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.
இதனையடுத்தே, முகநூலை இலங்கையில் பார்வையிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் >> 23

see more news in
newuthayan.com

## மாயமாகியுள்ள மகேந்திரனுக்கு பிடியாணை!

கொழும்பு, மார்ச் 16
மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற் >> 24

## தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவு சரிந்து விட்டது என்பது மாயை

### செயலர் துரைராஜசிங்கம் கூறுகிறார்

மன்னார், மார்ச் 16
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு சரிந்து விட்டது என்பது ஒரு மாயை. இதை விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது" என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கே. துரைராஜசிங்கம் தெரிவித்தார். >> 06



### இலங்கை விவகாரத்தில்

## எல்லை மீறிச் செயற்படுகிறது ஐ.நா. மனித உரிமைகள் சபை

### ஜெனிவாத் தொடரில் சரத் வீரசேகர காரசாரம்

>> 23




உறுதியான வாழ்க்கைப் பயணத்திற்கு
DFCC நிலையான வைப்பை ஆரம்பியுங்கள்

ஒரு வருட நிலையான வைப்பிற்கு 11.5% அதிக வட்டி

சிரேஷ்ட பிரஜைகளுக்கு ஒரு வருட நிலையான வைப்பிற்கு 12% வட்டி

24 மணிநேர அழைப்பு மையம் 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு



மட்டக்களப்பு கோட்டைடி பிள்ளையார் ஆலய வசந்த மண்டபத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. நீதிவான் நீதிமன்ற பதிவாளர் எஸ்.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் ஆலய தலைவர், செயலாளர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந,ரி4)

# மட்டு. மாவட்டத்தை மிரட்டுகிறது டெங்கு

மட்டக்களப்பு, மார்ச் 16

இலங்கையில் இரண்டாவதாக மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.



இவ்வாறு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் கே.கிரிசுதன் தெரிவித்தார்.

மண்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றது. டெங்கு அதிகளவில் காணப்படுகின்றன. அதனை தவிர அம்மை நோய் மற்றும் தொழுநோய் என்பன அண்மைக்காலமாக அதிகரித்துச்செல்லும் நிலையுள்ளது. அவற்றுக்கான தடுப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

டெங்கு தொடரில் இலங்கை முழுவதிலும் அடையாளம் காணப்பட்ட நோயாளர்களில் மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாம் இடத்தில் உள்ளது. முதலாவது இடத்தை கொழும்பு உள்ளது. கொழும்பு மாவட்டத்தில் இந்த ஆண்டில் நேற்று வரையில் 1985பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டில் நேற்று வரையில் 1260பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் மண்முனை வடக்கு பிரதேசத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர். அங்கு 248 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்குத் தொற்றால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு மூன்று உயிரிழப்பு ஏற்பட்டுள்ளன. டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட பகுதிகளில் புகையிடும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இந்த ஆண்டு இதுவரையில் ஆறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு தொழுநோயாளர்கள் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 38பேர் இனங்காணப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டு 14பேர் இனங்காணப்பட்டுள்ளனர்" என்றார். (ந-ரி5)

## கஞ்சாவுடன் ஒருவர் நேற்று கைது

ஹற்றன், மார்ச் 16

ஹற்றன் குடாகமவில் விற்பனைக்காக வைத்திருந்த 63 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் குடாகம பகுதியைச் சேர்ந்தவர் என்றும், இவர் நீண்ட காலமாக மற்றுமொருவருடன் சேர்ந்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்தவர் என்றும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின்போது தெரியவந்தது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந,ரி4)

## புதிய வீட்டுத்திட்டக் கிராமம் மட்டக்களப்பில் விரைவில்

மட்டக்களப்பு, மார்ச் 16

போரால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு ரிதிதென்ன, புனானை ஆகிய பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய புதிய வீட்டுத்திட்ட கிராமத்தை அமைப்பதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதில் சகல வசதிகளையும் கொண்ட 60 வீடுகள், பொதுக் கட்டடங்கள், பாடசாலை, நீர் தாங்கி, மைதானம் மற்றும் அடிப்படைக்கட்டடங்கள் என்பன அமைக்கப்படவுள்ளன.

நிகழ்வு கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறிலங்கா ஹிரா பௌண்டேஷன் தலைவரும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருமான ஹிஸ்புல்லாஹ், கட்டார் ரெட் கிரசன்ட் அமைப்பின் பன்னாட்டு நிவாரண அபிவிருத்தி அமைப்பின் பிரதானி ராஸித் ஸாத் அல் மஹாநதி ஆகியோர் கலந்து கொண்டனர். (ந,ரி4,48)



## ஊழியர்களுக்காக பொது உடற்பயிற்சி நிலையம்

வவுனியா, மார்ச் 16

வவுனியா மாவட்டச்செயலகத்தில் ஊழியர்களுக்காக பொது உடற்பயிற்சி நிலையம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

முதற்தடவையாக இந்த உடற்பயிற்சிநிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்க அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் உடல் நலம் மற்றும் ஆரோக்கியமான திறமையான சேவையின் உயர் மட்டத்தை உயர்த்தவே இந்த உடற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த உடற்பயிற்சிமையம் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சோமரத்ன விதானபத்ரன அவர்கள் விளையாட்டு துறை அமைச்சிடம் கேட்டதற்கிணங்க ரூ 6.5 மில்லியன் நிதியில் அமைக்கப்பட்டது. (ந,ரி4)

## தரம் 1,2 மாணவர்களுக்கும் ஆங்கிலப் பாடம் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 16

தரம் 1, தரம் 2 மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடப் புத்தகத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று மீபே தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்றது. முதற்தடவையாக இந்தப் பாடப் புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இதுவரை ஆங்கிலப் பாடம் தரம் 3 இல் இருந்தே கற்பிக்கப்பட்டது. தற்போது தரம் 1, 2க்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மகரகம தேசிய கல்வியியல் நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. பாடப் புத்தகத்துடன் இறுவட்டும் வழங்கப்படுகின்றது.

இந்தப் பாடத் திட்டத்தில் கதைகள், வரைதல், ஆடல், பாடல்கள், பேசுதல், கதைத்தல் செயற்பாடுகள் அதற்கான உபகரண பாவிப்பு ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. வகுப்பறைச் செயற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அறிமுக நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் அதிதிகளாக கலந்து கொண்டு பாடப் புத்தகங்களை அறிமுகம் செய்தனர்.

நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட கல்வி அமைச்சின் அதிகாரிகள் தேசிய கல்வி நிறுவகத்தின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ந)

## பேருந்து சேவையாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, மார்ச் 16

நீர்கொழும்பு தனியார் பேருந்து சேவையாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சிலாபம் தனியார் பேருந்து சேவையாளர் ஒருவர் நீர்கொழும்பு தனியார் பேருந்து சேவையாளர் ஒருவர் மீது நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

தாக்குதலுக்குள்ளான நபர் நீர் கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந,ரி4)

## மருத்துவமனைக்கு உதவிப் பொருள்கள்



கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு 17.6 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகள் நேற்று வழங்கப்பட்டன.

இதில் 8.6 மில்லியன் ரூபா பெறுமதியான சத்திர சிகிச்சைப் பிரிவுக்கான மருத்துவ உபகரணங்களும், 9 மில்லியன் ரூபா பெறுமதியில் மருத்துவமனைக்கான சுற்று மதில் அமைப்பதற்குமான உதவியும் வழங்கப்பட்டன.

மருத்துவ நிபுணர்களான தனராஜ் மற்றும் நாகேஸ்வரன் ஆகியோர் நேரடியாக தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன. அமைச்சின் செயலாளர் மற்றும் மருத்துவமனை சமூகத்தினர் இவர்களுக்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்தனர்.

மருத்துவ நிபுணர் ப.ஜெயந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர். (ந,ரி4)

## திசைதிருப்புவதற்கான முயற்சியே காணாமற் போனோர் அலுவலகம்

### முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினையை திசைதிருப்புவதற்கான முயற்சியே காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம்.

இவ்வாறு முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசியல் இலாபங்களுக்காக மக்களின் செல்வாக்குடன் நாடாளுமன்றத்துக்கு வந்தவர்கள் காணாமற் போனோர் விடயத்தைக் கண்டுகொள்ளாது இருப்பது மிகவும் மோசமானதாகும்.

தங்கள் பிரச்சினையை பன்னாட்டுக்கு எடுத்துச்செல்லும் வகையிலான மக்களின் போராட்டத்தையும் இவர்கள் முறியடிப்பதற்கு முயற்சிக்கின்றனர். இந்த முயற்சியின் ஒரு அங்கமே தற்போது அமைக்கப்பட்டுள்ள காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம் - என்றார். (ந,ரி4)

## பட்டா தீக்கிரை

திருகோணமலை கந்தளாயில் பட்டாவாகனத்துக்கு அடையாளம் தெரியாதோரால் தீவைக்கப்பட்டது.

இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

புத்தளத்தைச் சேர்ந்தவர் களின் பட்டா வாகனமே தீக்கிரையாக்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந,ரி4)

# அரசியல் விடயத்தில் மாத்திரமே தள்ளி நிற்கின்றனர் முஸ்லிம்கள்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 16

முஸ்லிம்கள் அரசியல் விடயத்தில்தான் தள்ளி நிற்கின்றார்களே தவிர தமிழை வளர்ப்பதில். அவர்கள் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

ஈழத்து தமிழ் கவிதை களஞ்சியத்தின் புதுப்பித்த பதிப்பு நூல் வெளியீட்டு விழா நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நூலில் முஸ்லிம் இளைஞர்களின் கவிதை இடம்பெற்றதைப் பார்த்து தான் மகிழ்வடைகின்றேன். பழையனவற்றை ஏற்ற நாங்கள் புதியனவற்றை ஏற்க மறுக்கின்றோம். கணினிகள் வந்தபோது அவற்றை ஏற்க எமது மனம் விடவில்லை. ஏதோ ஒரு காரணத்தால் சில வருடங்கள் அவற்றை என் வயதினர் பலர் புறக்கணித்தாலு அதைத் தட்டிக் கழிக்க முடியாது என்று கண்டதும் நாங்களும் அதில் ஓரளவு பரிச்சயம் அடைந்தோம். இது மனித சுபாவம் என்றே நினைக்கிறேன்.

செய்யுள் மரபுக் கவிதைகளைப் பாதுகாக்க வேண்டிய கடமை எமக்கு உள்ளது. ஈழத்து தமிழ் கவிதை களஞ்சியம் ஈழத்து இலக்கியத்துக்கு ஒரு அடையாளம் எனவும் ஈழத்து இலக்கிய வரலாற்றை எடுத்துக்கூற இது உறுதுணையாக அமையும்.

தற்போது இளைஞர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிகவும் குறைந்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் இவ்வாறான பெரியளவிலான புத்தகங்கள் முழுமையாக வாசிக்கப்படுவன என்று கொள்ள இயலாத போதும் இன்றைய இலத்திரனியல் செயற்பாடுகளின் கீழ் அரும்பெரும் இலக்கியப் பொக்கிசங்களை இலத்திரனியல் புத்தகங்களாக மாற்றும் பணியை நூலகம் பவுண்டேசன் நிறுவனம் மேற்கொண்டுள்ளமை மகிழ்வுக்குரியது.

இந்த நூலானது விற்பனை நிலையங்களுக்கு வழங்கப்படாமல் பாடசாலை மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உசாத்துணை நூலாகப் பயன்படுத்தவும் வழங்கப்படவுள்ளது. விற்பனை நிலையங்களிலே சில நூல்கள் தூசி காய்கின்றன. மாகாணத்தின் குறித்தொதுக்கப்பட்ட ரூபா 15 லட்சம் நிதியின் மூலம் இந்த நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. பண்பாட்டலுவல்களின் அபார முயற்சிக்கு கிடைத்த பேறாகும் - என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது தொன்மையைத் தேடித் தேடி கொடுக்க வேண்டிய வரலாற்றுக் கடமையில் இருக்கின்றோம். இனவாதத்தின் பேரில் எமத தொன்மைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த நூலானது ஈழத்தின் பண்பாடு, வாழ்க்கை முறை என்பதைக் காட்டுகின்றது. இந்த நூல் வடக்கு மாகாண பாடசாலைகளில் உள்ள சகல நூலகங்களுக்கும் அனுப்பப்படவுள்ளது.

பாடசாலைகளில் உள்ள தமிழ் ஆசிரியர்கள் இதனைப் படித்து மாணவர்களுக்குப் பயன் பெற வைக்க வேண்டும். கணினி உலகத்திலே மாணவர்களிடையேயான வாசிப்புப் பழக்கம் ஆனது குறைந்து விட்டது.

தமிழ் வேலை தருமா?. சம்பளம் தருமா? என்ற கேள்வி எல்லோரிடத்திலும் உண்டு. இந்த நிலை மாற வேண்டும். அது பாடசாலை மாணவர்களிடமிருந்து வர வேண்டும்

தமிழ் ஆசிரியர்கள் எமது பழைமை மற்றும் தொன்மை, இலக்கியங்களைப் பாதுகாத்து தலைநிமிர்ந்து வாழ தமிழ் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது அவர்கள் முன்வர வேண்டும் - என்றார்.

நூலின் முதற் பிரதியை கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் வெளியிட்டு வைக்க முதலமைச்சர் பெற்று கொண்டார்.

ஈழத்து தமிழ்க் கவிதை களஞ்சிய நூலை பேராசிரியர் சண்முகதாஸ் மனோன்மணி தம்பதிகள், பேராசிரியர் சிவலிங்கராஜா, கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீவன் ஆகியோர் தொகுத்திருந்தனர். அவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் அவர்களால் கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்வில் கல்விஅமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கி.மாலினி, மாகாணசபை உறுப்பினர் கஜதீபன்,மாநகரசபை ஆணையாளர் ஜெயசீலன் ,கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் ,ஆசிரியர்கள் , மாணவர்கள், பண்டிதர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ந-111)

## ஆற்று மணல் கடத்தியவர் கைது

மட்டக்களப்பு.மார்ச்.16

மட்டக்களப்பு வெல்லாவெளிப்பகுதியில் சட்டவிரோதமாக ஆற்று மணல் கடத்தியவர் நேற்றுக் காலை கைது செய்யப் பட்டார்.

அந்தப் பகுதியில், வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் ஆற்று மணல் கொண்டு சென்ற உழவு இயந்திரத்தை சோதனையிட்டனர்.

இதன்போதே அனுமதிப் பத்திரம் இல்லாது சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்வது தெரிய வந்துதது. இதனையடுத்து சந்தேக நபரைக் கைது செய்ததோடு ஆற்று மணல் கடத்தப் பயன்படுத்திய உழவு இயந்திரத்தையும் பொலிஸார் கைப்பற்றினர். (ந-ரி2)

## றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் செவிப்புல சாதனங்கள் அன்பளிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தென்னிந்திய றோட்டரி மாவட்டம் 3232 கோவில் நகர் றோட்டரிக் கழகத்தின் அனுசரனையில் கேள்திறன் குறைந்த 119 பயனாளிகளுக்கு செவிப்புல சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிலையத்தில் வைத்திய கலாநிதி என். இந்திரநாத் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரீ.சத்தியமூர்த்தி, றோட்டரி மாவட்டம் 3232வின் முன்னாள் மாவட்ட ஆளுநர் ரேகா ஷெட்டி தம்பதியினர், யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் தலைவர் ஆர். பி. பிரஷாந்தன், யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவரும், உதவி ஆளுநருமான எஸ். அனுராஜ், சிகிச்சை நிலைய தாதியர்கள், பயனாளிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சுமார் 25 பயனாளிகள் செவிப்புல சாதனங்களைப் பெற்றுக் கொண்டனர். ஏனைய பயனாளிகளுக்கு அடையாளம் காணப்பட்டு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை, கிளிநொச்சியில் அமைந்துள்ள இயற்கை மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் "குடில்" பாவனைப் பொருள்கள் உற்பத்தி நிலையத்துக்குச் சென்ற தென்னிந்திய றோட்டரிக் கழகத்தின் பிரதிநிதிகள், "குடில்" உற்பத்திகளில் மகளிருக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, அதனூடாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பான கள ஆய்விலும் ஈடுபட்டனர். (ந)

## முறையிட்டும் கண்டு கொள்ளாத அதிகாரிகள்



மட்டக்களப்பு,மார்ச்.16

அக்கரப்பத்தனை, கல்மதுரை தோட்டக் குடியிருப்புப் பகுதியில் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட மின்கம்பம் அண்மையில் பெய்த கடும் மழையினால் குடியிருப்பு மீது முறிந்து வீழ்ந்தது.

இதனால் அங்கு வாழும் சுமார் 25 குடும்பங்களைச் சேர்ந்த 50 க்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் அச்சத்திலேயே வாழ்கின்றனர்.

மின் கம்பிகளும், வீடுகளின் கூரை மேல் வீழ்ந்து காணப்படுவதன் காரணமாக மின் கம்பங்களை மாற்றித் தருமாறு லிந்துலை மின்சார சபைக்கு அறிவித்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தோட்டத் தலைவர்களிடமும், தோட்ட அதிகாரிகளிடமும் தெரிவித்தபோதும் அவர்கள் இந்தப் பிரச்சினையை கண்டுகொள்ளவில்லையென்றும் தெரிவித்தனர். (ந,ரி2)

## ஆனமடுவ சம்பவம் சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

புத்தளம்,மார்ச்.16

ஆனமடுவ நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது பெற்றோல் குண்டு வீசிய சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்டவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மூவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனமடுவவில் கடந்த 10 ஆம் திகதி ஹோட்டல் ஒன்று தீ வைத்துக்கொளுத்தப் பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் 19 தொடக்கம் 25 வயதுக்கு இடைப்பட்டவர்களே பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந,ரி2)

## கொலைக் குற்றச்சாட்டில் மூவர் கைது

கொழும்பு,மார்ச்.16

நுகேகொடை தலபத்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற கொலை க் குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப் பட்டனர்.

கோட்டே பிரதேசத்தைச் சேர்ந்த 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களே ஹோக்கந்தர பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

திருடப்பட்டதாகக் கருதப்படும் அலைபேசிகள் மற்றும் ஒரு ஜோடி தங்கக் காதணி என்பவற்றை சந்தேகநபர்களிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியதாகத் தெரிவித்தனர்.

கடந்த 3 ஆம் திகதி பெண் ஒருவர், நுகேகொடை தலபத்பிட்டிய பிரதேசத்தில் கொலை செய்யப்பட்டிருந்

## நன்னீர் மீன் வளர்ப்புக்கு மீன் குஞ்சுகள்



நுவரெலியா.மார்ச்.16

நன்னீர் மீன் வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் பொகவந்தலாவ,. காசல்ரீ நீர்த் தேக்கத்தில் ஒரு இலட்சம் மீன் குஞ்சுகள் நேற்று விடப்பட்டன.

நன்னீர் மீன் பிடித் தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க நுவரெலியா நன்னீர்மீன்வளர்ப்புத்திணைக்களத்தினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கபட்டது.

நீர்த் தேக்கத்துக்குப் பாதுகாப்புக் கூடுகள் அமைத்து மீன்குஞ்சுகள் விடப்பட்டன.

இந்த நன்னீர் மீன்வளர்ப்பு மூலம் 45 குடும்பங்கள் பயன் பெறமுடியுமென அதிகாரிகள் தெரிவித்தனர். (ந,ரி2)

## ஹெரோயின் வியாபாரம் குற்றவாளிக்குத் தூக்கு

கொழும்பு,மார்ச்.16

ஹெரோயின் போதைப் பொருளை கைவசம் வைத்திருந்த மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு சாவுத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் கிஹான் குலதுங்க நேற்று முன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

2008 ஆம் ஆண்டு, 14 கிராம் 6 மில்லி கிராம் ஹெரோயினுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

களுபோவில பிரதேசத்தைச் சேர்ந்த நபருக்கே இவ்வாறு சாவுத்தண்டனை வழங்கப் பட்டுள்ளது. (ந,ரி2)

# காரைநகரிலும் இழுவைப் படகு

## அனுமதிக்க வேண்டாம் என்கின்றனர் சுழிபுரம் மீனவர்கள்

யாழ்ப்பாணம் ,மார்ச்.16

காரைநகர் கடற்பரப்பில் இழுவைப்படகுகள் மூலமாக மீன் பிடிப்பதை கண்டித்து சுழிபுரம் கடற்தொழிலாளர்கள் போர்கொடி தூக்கியுள்ளனர். வடக்கில் தடைசெய்யப்பட்ட இழுவைப்படகுகள் மூலமான மீன்பிடிமுறையை காரைநகரில் அனுமதித்தது யார் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வலிமேற்கு பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மீன்பிடி அபிவிருத்தி தொடர்பான ஆராய்வுகள் இடம் பெற்றன. இதன் போதே அந்த மீனவர்களால் இவ்விடயம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. காரைநகரில் உள்ள மீன்பிடித்துறைமுகம் ஒன்றில் பல இழுவைப்படகுகள் தரித்து நின்று அங்கிருந்து மீன்பிடித்தொழிலை ஆரம்பிக்கின்றன. இந்தச் சட்டவிரோதமான மீன்பிடி முறையை காரைநகரில் அனுமதிக்கவேண்டாம். இழுவைப்படகு முறையிலான மீன்பிடியில் ஈடுபடும் பல இழுவைப்படகுகள் காரைநகர் கடற்கரையில் இப்போதும் தரித்திருக்கின்றன. இதனால் உள்ளூர்



கோப்புப் படம்

மீன் வளம் பாதிக்கப்படுவதுடன் உள்ளூர் மீனவர்கள் வருமான இழப்புக்குட்படுகின்றனர் எனவே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்த சுழிபுரம் கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் பிதிநிதி இந்த விடயம் தொடர்பாக வன்மையான கண்டனத்தையும் தெரிவித்தார். (21-64)

## வீதிக்கு பூட்டு

யாழ்ப்பாணம். மார்ச் 16

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நாளை நடைபெறவுள்ள துடுப்பாட்ட போட்டி காரணமாக பழைய பூங்கா வீதியானது கண்டி வீதி சந்தியில் இருந்து சுண்டிக்குளி சந்தி வரையான வாகனப் போக்குவரத்து காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 வரை தடைசெய்யப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் மாற்றுப் பாதைகளை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## சேவைநலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம் ,மார்ச்.16

யாழ்ப்பாணம் வட்டு மத்திய கல்லூரியில் பிரதி அதிபர் மற்றும் பகுதித் தலைவராக கடமையாற்றி ஓய்வு பெற்ற பி. சண்முகம், வி.ராஜகோபாலு ஆகிய இருவருக்குமான சேவைநலன் பாராட்டுவிழா நாளை சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல்.9 மணிக்கு அதிபர் ப.பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (29)

## பழந்தமிழர் ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம்.மார்ச்.16

பழந்தமிழர் இயக்கம் நடாத்தும் "பழந்தமிழரும் பௌத்தமும்" என்ற கருப்பொருளில் பழந்தமிழர் ஆய்வு மாநாடு நாவலர் கலாச்சார மண்டபத்திற்கு முன்பாக வுள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ம.வித்தியாநந்தநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம்.மார்ச்.16

யாழ்ப்பாணம் சுருவில் றோ.க.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுவிழா பாடசாலை மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ந.மயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இளங்கோ கலந்துகொள்ளவுள்ளார்சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஞானசீலன் ,யாழ். போதனா மருத்துவமனை மருத்துவ கலாநிதி வினோதினி சன்முகலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## பல்கலை ஊழியர்களது போராட்டத்துக்கு நிறைவேற்று உத்தியோகத்தர்களும் ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரின் போராட்டத்துக்கு ஆதரவளிப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிறைவேற்று உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் சங்கம் நேற்று அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்களும் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமாக அவர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரை நாம் அவர்களுக்கு ஆதரவளிப்போம். அதுவரை எமது கடமை வரம்புக்கு உட்பட்ட பணிகளை மட்டும் செய்வோம். பல்கலைக்கழக நாளாந்த நடவடிக்கைகள் இடம்பெற ஏதுவாக சம்பந்தப்பட்ட தரப்பினர் தொழிற் சங்கத்துடன் பேசி சுமுகமாக தீர்வை வழங்க வேண்டும் - என்றுள்ளது.

இதுதவிர, ஊழியர் சங்கத்தினர் தமக்கான கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இன்று நிதி அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளனர் என்று ஊழியர் சங்கம் தெரிவித்தது. (4)

நெல்லியடியில்

## தீ காயமடைந்து இளம்பெண் சாவு

யாழ்ப்பாணம். மார்ச் 16

நெல்லியடி.பண்டிதரை பகுதியில் இளம்பெண் தீ காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினமிரவு 12.30 மணி அளவில் வீட்டிலிருந்தவர்களால் மீட்கப்பட்டு அதிகாலை 1.30 மணி அளவில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சிகிச்சை பயனளிக்காது நேற்றுப் பிற்பகல் அவர் உயிரிழந்தார்.

ஜெயபாலு கிருசாஜினி (வயது - 20) என்பவரே உயிரிழந்தார். இவர் நெல்லியடியில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் மகள் என்று தெரிவிக்கப்பட்டது. (4.67)

## பங்குனி உற்சவ பெருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஈவினை மதுரையம்பதி அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி யம்பாள் கோயில் வருடாந்த பங்குனி உற்சவப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. இறுதியாக 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு திருக்கல்யாண உற்சவத்துடன் விழா நிறைவு பெறும் என அறிவித்துள்ளனர்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 40ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாவலர்கலாச்சாரமண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் கோ.நாரேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் ,யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் ,யாழ் மாநகர சபை பிரதி ஆணையாளர் அ.சீராளன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

ஆணையாளரால் வழங்கப்படும். அங்கத்தவர் அனைவரையும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும். கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் செய்யப்பட்ட கணக்காய்வு அறிக்கையையும் சங்க காரியாலயத்தில் பார்வையிடலாம் எனவும் தலைவர் கோ.நரேந்திரன் தெரிவித்துள்ளார்.

## ஆய்வுப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் வெற்றிவேல் சக்திவேல் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட ஆங்கில இலக்கிய ஆய்வுப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார் என கல்லூரி அதிபர் கலாநிதி டி.எஸ். செலமன் தெரிவித்தார்.

வெற்றி பெற்ற ஆசிரியருக்கான பணப்பரிசு,, விருது மற்றும் சான்றிதழ் என்பன கலாச்சார அலுவல்கள் அமைச்சு பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (50)

# மாணவர் நாடாளுமன்ற அமைச்சர்கள் பதவியேற்பு



சாவகச்சேரி மார்ச்.16

நாவற்குழி மகா வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற அமைச்சர்கள் பதவியேற்பும் கன்னி அமர்வு நிகழ்வும் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. வித்தியாலய அதிபரும் மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அவர்கள் கலந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது . (9)

இணைத்தலைவர்கள் முன்னிலையில்

## வலி கிழக்கு, வலி வடக்குப் பிரதேச எல்லைப் பிரச்சினை தீர்க்கப்படும்

நேற்றைய ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

இழுபறி நிலையில் இருந்துவரும் வலி கிழக்கு, வலி வடக்குப் பிரதேச எல்லைப் பிரச்சினையை மாவட்டச் செயலர் முன்னிலையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட இணைத் தலைவர்கள் இரண்டு பிரதேச செயலர்கள் கலந்துகொள்ளும் கலந்துரையாடலில் தீர்க்கவேண்டும்.

சுமூகமான முறையில் தீர்த்து வைப்பதற்கு ஏதுவாக இரண்டு தரப்பினருக்கும் பாதிப்பு எற்படாத வகையில் நில அளவைப் படங்களை அடிப்படையாகக் கொண்டு பேச்சு வார்தை நடத்தித் தீர்த்துக்கொள்வது என்று வலி.கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வலி. கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலக கேட்போர் கூட்டத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

வளலாய் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் நிர்வாகிகள். வலி. வடக்கு பிரதேச செயலகத்தின் கிழக்கு எல்லைக்கும் வலி. கிழக்கு பிரதேச செயலகத்தின் வளலாய் மேற்கு கிராம எல்லைக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள பல ஏக்கர் நிலப்பரப்பே யாருக்குச் சொந்தம் என்று சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த எல்லை ஆக்கிரமிப்பால் 42 குடும்பங்கள் தமது காணியை இழந்துள்ளன. மேய்ச்சல் தரவைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது. வழலாய் மேற்கு காணி தொடர்பான உறுதிகளின் பெயர்கள் தோப்புக்கள் தொடர்பான அடயாளங்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் இணைத் தலைவர்கள் தீர்க்கமான முடிவுக்கு வருவதுடன் இந்தப் பிரச்சினை தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் எற்படக்கூடிய மோதல்களைத் தவிர்க்க வேண்டும் எனக் கோட்டுக்கொண்டனர்.

இணைத்தலைவர்களான நாடாழுமன்ற உறுப்பினர்கள் தர்மலிங்கம் சித்தார்த்தன், இ. அங்கயன் தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாகாண சபை பேரவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம் மாகாண சபை உறுப்பினர்கள் எஸ். சிவனேசன் , அ.பரஞ்சோதி, எஸ். கஜதீபன் மற்றும் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உட்பட்ட பலர் கலந்து கொண்டனர். (4,8,11)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

தென்மராட்சி கிழக்கு பாலாவி கலைவாணி முன்பள்ளி மற்றும் கெற்பேலி சிவசக்தி முன்பள்ளிகளின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கெற்பேலி அ.த.க.பாடசாலை மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மேம்பாட்டுக் குழுத் தலைவர் சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கெற்பேலி அ.த.க.பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (9)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச்.16

யாழ் முகாமையாளர் சம்மேளனமும் வட பிராந்திய இலங்கை பொறியியலாளர் நிறுவகமும் இணைந்து 'சுற்றுச்சூழல் விவசாயம்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த கருத்தரங்குக்கு வளவாளராக மேற்கு சிட்னி பல்கலைக்கழக பேராசிரியர் ஆசி.காந்தராஜா கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி பேசும் பொலிஸார் இன்மையால்

# வடக்கு பொலிஸ் நிலையங்களில் தமிழ் மக்கள் கஷ்டப்படுகின்றனர்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.16



எமது மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறையிடுவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர். அதற்கு தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லாமையே காரணமாகும். இதனால் முறைப்பாடுகள் செய்வதற்கு 4 மணி நேரமாவது பொலிஸ் நிலையங்களில் செலவிடுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் தொடர்பான பிரச்சினைகளில் மக்கள் மற்றும் பொலிஸார் இடையிலான தொடர்புகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் நிகழ்வு மாகாண முதலைமைச்சர் சி .வி விக்னேஸ்வரன் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையே நடைபெற்றது. நேற்று முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது. அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகவியலாளருக்கு தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்திலே மக்களின் பிரச்சினைகளுக்கு பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பிலான கலந்துரையாடல் இன்று(நேற்று ) இடம் பெற்றது. அதிலே மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னரை விட வன்முறைகள் தற்போது குறைவடைத்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு மாகாணத்திலே தமிழ் பொலிஸாரின் தேவைகள் பற்றி நான் கூறி வருகிறேன். அதற்கு எமது தமிழ் இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று கூறினேன். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காரசாரமான தகவல்களை வெளியிட்டு இருந்தார்கள். தற்போது 81 ஆண் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள், 2 பெண் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 83 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். உண்மையில் இது போதாது அதிக எண்ணிக்கையான தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எமக்குத் தேவையாக உள்ளனர்.

நமது ஆலயங்களில் திருவிழா உள்ளிட்ட காலங்களில் அதிக சத்தத்துடன் பாடல்களை போடுகின்றனர். இதனால் வயோதிபர்கள் உட்பட பலர் பாதிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்தன. இதற்கு தீர்வாக அதிக சத்தத்துடன் ஆலயங்களில் பாடல்களை போட்டால் குற்றவியல் கோவை பிரிவு 98 இன்படி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இளைஞர்கள் சாலை விதிகளை மீறி வாகனத்தை செலுத்துகின்றனர். இதனால் விபத்துக்கள் அதிகம் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை கருத்தில் கொண்டு சாரதிகளுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மண் அகழ்வு குறைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் இது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பகுதிகளில் மாடுகள் கள்வு போவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. களவாடிய மாடுகள் இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுகின்றன. ஆகவே மாட்டு இறைச்சி விற்பனையை தடை செய்யுமாறு கோரப்பட்டது. ஆனால் இந்த விடயம் சாத்தியம் இல்லை. மாட்டு இறைச்சி சாப்பிடும் பிரியர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்ற நோக்கில் இந்தத் திட்டம் கைவிடப்பட்டு மாடுகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

தனியார் வீடுகளை பொலிஸார் வைத்திருப்பது உண்மை. இதற்காக அரச காணிகளை பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. காங்கேசன்துறைப் பகுதியில் 50 வீடுகளில் 111 பேர் இருப்பதாக தெரியவருகின்றது. அதனை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. நடேஸ்வர கல்லூரியில் குடிதண்ணீர் கிணறு மற்றும் கட்டடம் ஒன்றை பொலிஸார் ஆக்கிரமிப்புச் செய்துள்ளமை தொடர்பில் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்துள்ளார். பொலிஸாரின் சமையல் சார்ந்த வேலைகளுக்கு அது பயன்பட்டது. அதனை உடனடியாக விடுவிக்குமாறு பொலிஸ் அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது - என்றார்.

இறுதியாக ஊடகவியலாளரால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட தமிழரசுக் கட்சியின் சுதந்திரன் பத்திரிகை தொடர்பில் முதலமைச்சரிடம் கேட்கப்பட்டது. இதற்கு பதிலளித்த முதலமைச்சர், 'மக்களுக்குப் பயனுள்ள எந்த பத்திரிகை என்றாலும் அது வரவேற்கத்தக்கது. சட்டத்துக்கு புறம்பான நடவடிக்கைகளை கொண்டிராத எந்த பத்திரிகை வந்தாலும் பரவாயில்லை' என்றார். (எ-7)

## தேசிய ஆக்கத்திறன் விருது விழா

யாழ்ப்பாணம்.மார்ச்.16

இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லை ஆதின குரு முதல்வர் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்மந்தபரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் யாழ் .மாவட்டச்செயலக அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தின ராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன் கலந்துசிறப்பிக்கவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

சாவகச்சேரி, மார்ச் 16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரம் ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் வழிப்படுத்தலில் மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் துறைசார் நிபுணர்களால் 9 அலகுகளில் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது . (9)

## உதவி பிரதேச செயலர் நியமனம்

அச்சுவேலி, மார்ச் 16

வலி கிழக்கு பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலராக சஞ்சீவன் ராதிகா நியமிக்கப்பட்டு கடந்த வாரம் தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். வலி கிழக்கின் உதவிப் பிரதேச செயலராக கடமையாற்றிய எஸ். பிரேமினி சண்டிலிப்பாய் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டு ள்ளதை அடுத்து கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் பதவி பூர்த்தி செய்யப்படாமல் இருந்து வந்துள்ளது. (11)

## பரிசில்கள் வழுங்கலும் மதிப்பளித்தல் நிகழ்வும்



சாவகச்சேரி, மார்ச் 16

தென்மராட்சி கல்வி வலயத்தால் கடந்த வருடம் நடாத்தப்பட்ட சைவ சமய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும் ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல் நிகழ்வும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, தென்மராட்சி பிரதேச இந்து கலாசார அலுவலர் ம.விஜயகுமார், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பளர் கு.சிவானந்தம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் லலிதாமலர் முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சைவ சமய பாட ஆசிரியர்களின் பக்தி என்னும் வில்லிசையும் நடைபெற்றது. (9)

# மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்த பிரேரணை இன்று நிறைவேற்றப்படுகிறது

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை இன்று நிறைவேற்றப்படவுள்ளது. இந்தப் பிரேரணைக்கு இதுவரை 12 நாடுகள் தமது இணை அனுசரணை வழங்கியுள்ளன. அனைத்து உறுப்புநாடுகளும் பிரேரணைக்கு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது வாக்கெடுப்புக்கு விடுவதா இல்லையா என்பது தொடர்பில் சபைத் தலைவரால் கேள்வி எழுப்பப்படும். அனைத்து நாடுகளும் பிரேரணைக்கு ஆதரவு என்று அறிவிக்கும் பட்சத்தில் பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும். இதேவேளை பிரேரணை நிறைவேற்றப்படும்போது இலங்கையின் சார்பில் பதிலளிக்கும் நோக்கில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி. சில்வா நேற்றிரவு ஜெனிவா சென்றடைந்தார்.

இதுவரை ஐ.நா. மனித உரிமை சபையின் ஒருசில உறுப்பு நாடுகளும் உறுப்புரிமையற்ற சில நாடுகளும் இலங்கை தொடர்பான பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியிருந்தன. அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, இஸ்ரேல், ஜப்பான், மொன்ட்னேகுரோ, நோர்வே, மெஸடோனியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியுள்ளன. இந்தப் பிரேரணையுடன் சம்பந்தப்பட்ட நாடான இலங்கையும் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குகின்றது.

இந்தப் புதிய பிரேரணையானது இலங்கை, 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது.

அதுமட்டுமன்றி நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை இலங்கையில் ஊக்குவித்தல் என்ற தலைப்பின் கீழ் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் 2015 ஆம் ஆண்டின் பிரேரணையை நடைமுறைப்படுத்த எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு வரை கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

நான்கு பரிந்துரைகளைக் கொண்டுள்ள புதிய பிரேரணையானது 2015 ஆம் ஆண்டு பிரேரணையின் 1, 2,19,18 ஆகிய செயற்பாட்டுப் பந்திகளைத் திருத்தம் செய்யும் வகையில் அமைந்துள்ளது. இன்று நிறைவேற்றப்படவுள்ள இலங்கை தொடர்பான புதிய பிரேரணையில்முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களும் நான்கு பரிந்துரைகளும் வருமாறு:

2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் இருபது பரிந்துரைகள்முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் இந்தமுறை பிரேரணையில் நான்கு பரிந்துரைகள் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது 2015 ஆம் ஆண்டு பிரேரணையில் நான்கு பரிந்துரைகளைத் திருத்தும் வகையிலேயே புதிய பிரேரணை நான்கு பரிந்துரைகளை முன்வைத்திருக்கிறது.

**முதலாவது செயற்பாட்டு ப் பந்தி**

2015 ஆம் ஆண்டு பிரேரணையின் கோரிக்கைக்கு அமைய ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பாக 34 ஆவது கூட்டத் தொடரில் முன்வைத்துள்ள பரந்துபட்ட அறிக்கையைப் பாராட்டுகின்றோம். அந்தப் பிரேரணையை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அதில் நிலுவையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

**இரண்டாவது செயற்பாட்டு பந்தி**

2015 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருடனும் அவரது அலுவலகத்துடனும் மேற்கொண்டுவரும் ஆரோக்கியமான ஈடுபாட்டை வரவேற்கின்றோம். அத்துடன் சிறப்பு ஆணையாளர்களுடனான இந்த ஈடுபாட்டையும் வரவேற்கின்றோம். இதேவேளை இலங்கையின் மனித உரிமை உண்மை, நீதி, நல்லிணக்கம், மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்காக இந்த ஈடுபாட்டைத் தொடருமாறு ஊக்குவிக்கின்றோம்.

**மூன்றாவது செயற்பாட்டுப் பந்தி**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மற்றும் தொடர்புபட்ட சிறப்பு ஆணையாளர்கள் இலங்கை அரசுடன் தொடர்ந்து ஆலோசனைகளை நடத்தவேண்டுமென்றும் இலங்கையின் மனித உரிமை, உண்மை, நீதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றோம்.

**நான்காவது செயற்பாட்டு ப் பந்தி**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கையின் பிரேரணையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தொடர் மதிப்பீடுகளை செய்யவேண்டும். இலங்கையின் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மனித உரிமை நிலமை தொடர்பாகவும் மதிப்பீடு செய்யவேண்டும். அதுமட்டுமன்றி இலங்கை ஜெனிவா பிரேரணையை நடைமுறைப்படுத்துகின்றமை தொடர்பாக 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 37ஆவ்து கூட்டத் தொடரில் எழுத்துமூல அறிக்கையையும் 2019 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 40 ஆவது கூட்டத் தொடரில் பரந்துபட்ட விவரமான அறிக்கையையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

இவ்வாறு அம்சங்களுடன் இலங்கை தொடர்பான புதிய பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசின் ஆலோசனையுடன் இந்தப் பிரேரணை தயாரிக்கப் பட்டுள்ளதாக ஜெனிவா த் தகவல்கள் தெரிவித்தன. (4,31)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### மருதங்கேணி...

மற்றும் இராணுவத்தினரால் கடத்தப்பட்ட தமது உறவுகளை மீட்டுத் தர வேண்டும் என்று கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் அறவழிப் போராட்த்தை முன்னெடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இந்தப் போராட்டங்கள் இரவு, பகலாகத் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தின் முன்பாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த வருடம் மார்ச் மாதம் 15ஆம் திகதி தொடர் அறவழிப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களுக்கு இதுவரை எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை.

நேற்று நடத்தப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், சிவில் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

"காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே? இலங்கை அரசே பதில் கூறு! ஐ.நாவே பதில் கூறு!! ஐ.நா. சபையே ஏன் மௌனம்?" என்று இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசம் எழுப்பினர். (ற)

### முகநூலுக்கும்...

முதல் இலங்கையில் செயற்படத் தொடங்கியது. முகநூல் மீதான தடை இன்று வெள்ளிக்கிழமையே நீங்கும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டபோதும், முகநூல் நிறுவனத்தினருடனான சந்திப்பை அடுத்து நேற்று மதியம் நீக்கப்பட்டது.

முகநூல் மீதான தடையை உடனடியாக நீக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று மதியம் 12.30 மணிக்கு பணிப்புரை விடுத்தபோதும், பி.ப. 2 மணிக்கே அது நடைமுறைப்படுத்தப்பட்டது.

கண்டிக் கலவரத்தையடுத்து கடந்த 7ஆம் திகதி நண்பகல் சமூக வலைத் தளங்கள் இலங்கை அரசினால் முடக்கப்பட்டன. இந்தத் தடை மூன்று நாள்களுக்கு மாத்திரமே நீடிக்கும் என்று கூறப்பட்டது. இருப்பினும் மூன்று நாள்கள் கடந்தும் தடை தொடர்ந்தது.

முகநூலில் உள்ள வெறுப்பூட்டும் பேச்சுக்களை நீக்குவதில் தாமதம் ஏற்படுவதாலேயே தடையை நீக்குவதில் தாமதம் ஏற்படுவதாக அரசு அறிவித்தது.

**இந்த நிலையில், நேற்று முன்தினம் அதிகாலையிலிருந்து வைபரும், நேற்று அதிகாலையிலிருந்து வட்ஸ்அப்பும் இயங்க ஆரம்பித்திருந்தன.**

முகநூல் நிறுவனத்தினரின் சந்திப்பைத் தொடர்ந்து நேற்றுப் பிற்பகலிலிருந்து முகநூல் இலங்கையில் செயற்பட ஆரம்பித்தது. (5)

### 09ஆம்...

என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார். இருப்பினும் நேற்று வரையில் அரசிதழ் வெளியாகவில்லை.

ஆனாலும், உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கிய விவரங்கள் தேர்தல்கள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதில், உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கிய அரசிதழ் 9ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

### தமிழ்க்...

ஆதரிக்கக் கூடாது. அதனையும் மீறி யாராவது ஆதரித்தால் கட்சி கடும் நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் வீ.ஆனந்தசங்கரி தனது கட்சியினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற போர்வையில், தமிழ் அரசுக் கட்சி ஏனைய பங்காளிக் கட்சிகளின் குரல்களைச் செவிமடுக்காது தான்தோன்றித்தனமாக, தன்னிச்சையாக செயற்பட்டது. அதனால் தமிழ் அரசுக் கட்சிக்கு மாற்று அணியாக நாம் தேர்தலில் போட்டியிட்டு கணிசமான இடங்களைப் பெற்றுள்ளோம். பல உள்ளூராட்சி சபைகளில் தமிழ் அரசுக் கட்சி தனிப்பெரும்பான்மை பெறாத காரணத்தால் ஏனைய கட்சிகளின் ஆதரவைத் தேடுவதாக ஊடகங்களின் மூலமாகத் தெரிய வந்துள்ளது.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் நாமும், பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்லவும், எந்த நோக்கத்துக்காக எமது அணி உருவாக்கப்பட்டதோ அதன் நோக்கத்தை முன்னெடுத்து செயற்படுத்தவும், அந்தந்த சபைகளில் உள்ள எமது அணியைச் சார்ந்த உறுப்பினர்கள் தமிழ் அரசுக் கட்சியைத் தவிர்த்து ஏனைய கட்சிகளுடன் **இணைந்து சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்றி பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கும்**, மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கும் ஆதரவு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுயநல நோக்கோடு செயற்படும் தமிழ் அரசுக் கட்சிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்த தேர்தலில் 30 சதவீத வாக்குகளே கிடைத்துள்ளன. இதனையும் கருத்திற்கொண்டு எமது உறுப்பினர்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டாம் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கோள்கின்றோம்.

எமது வேண்டுகோளை ஏற்காது செயற்படும் உறுப்பினர்கள் மீது எமது கட்சி கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்றுள்ளது. (5)

### சிறுபான்மையினர்...

கூட்டரசின் சட்டம் ஒழுங்கும் குள்விக்குறியாகவே உள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

பேரினவாதிகளால் தமிழருக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட அநீதிகள் இப்போது முஸ்லிம்களுக்குஎதிராகஅரங்கேற்றப்பட்டுள்ளன. எனவே தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி முறையிலான தீர்வைப் பெறவேண்டும். அதன் மூலமாகவே இரு சமூகங்களினதும் இருப்பு கலை, கலாசார விழுமியங்களைப் பாதுகாக்க முடியும்.

கல்முனை தமிழ் பிரதேச செயலக கலாசார பேரவையின் கலாசார விழா கல்முனை உவேஸ்லி உயர்தரப் பாடசாலையில் நல்லதம்பி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. கல்முனை தமிழ் பிரதேச செயலக செயலாளர் கே.லவநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கோடீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டரசின் சட்டம் ஒழுங்கு கேள்விக் குறியாகவே உள்ளது. வடக்கு -கிழக்கு இணைந்த சமஷ்டி முறையிலான தீர்வை பெறுவதற்கு தமிழர்களுடன் பயணிக்க முஸ்லிம் சமூகம் முன்வரவேண்டும். கல்முனையில் தமிழர்களுக்கான தனித்துவமான பிரதேச செயலகம் முழுமையாக உருவாவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அப்போதுதான் இங்கு தமிழர்களின் தனித்துவத்தையும் தமிழர்களின் அடையாளங்களையும் பாதுகாக்க முடியும். இல்லாவிடில் இங்கு தமிழரின் இருப்புக் கேள்விக்குறியாகும் ஆபத்தும் உள்ளது - என்றார்.

**இந்த நிகழ்வில் முனையம் என்ற மலர் வெளி**யிடப்பட்டது. கல்முனை மேலதிக மாவட்டச் செயலாளர் கே.விமலநாதன், கல்முனை கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மயில்வாகனம் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (4,8,30)

### தமிழ்க் கூட்ட...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுடனான சந்திப்பு மாவட்ட அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியின் செயற்பாடு எப்படி அமைய வேண்டும் என்பது தொடர்பில் பொதுமக்களை மாவட்டந்தோறும் சென்று சந்தித்து வருகின்றோம். பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்று வருகின்றோம். திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் நாங்கள் ஏற்கனவே சந்திப்புக்களை நடத்தி அவர்களுடைய கருத்துக்களை அறிந்திருக்கின்றோம். அதன் தொடர்ச்சியாகவே மன்னாரில் மக்களைச் சந்திக்க வந்தோம். பொதுமக்கள் பலர் வந்து கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்களின் கருத்துக்களை எமது கட்சியின் மக்கள் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறினோம். கட்சியைப் பலமாக முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தச் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளோம்.

மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இன்னும் அதிக அளவு ஒருமித்தவர்களாக உள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஒரு சரிவு ஏற்பட்டுள்ளதை மேலோட்டமாகப் பார்க்கப்பட்டபோதும், அது இந்தத் தேர்தலின் இயல்பு.

இனிவரும் தேர்தல்களிலே தாங்கள் எங்கு நின்றார்களோ அந்த இடத்துக்கு மீண்டும் வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக உழைப்போம் என்ற விடயத்தை தெரிவித்துள்ளனர்.

'தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவு சரிந்து விட்டது என்பது ஒரு மாயை' என்பதை நாங்கள் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

**மக்களினுடைய தொடர்புகளை இன்னும் நெருக்கமாக வைத்துக் கொள்ளக் கூடியவர்களாகவும், தமது பிரசன்னத்தை மக்களின் இடங்களில் அதிகளவில் செலுத்தக்கூடியவர்களாகவும் எங்கள் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் - என்றார்.**

(5,56)

## அட! அப்படியா சங்கதி!!

### அமைச்சரின் பரிசு

சுமார் ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான சொகுசு வாகனமொன்றைத் தனது நெருங்கிய நண்பிக்குப் பரிசளித்திருக்கிறாராம் அமைச்சர் ஒருவர். நண்பியின் பிறந்தநாளையொட்டி இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இந்தத்தகவல் அரச உயர்மட்டம் வரை சென்றுள்ளதால் அரச தலைவரைக் கண்டாலே வளைந்து நெளிந்து வெட்கப்படுகின்றாராம் இந்த அமைச்சர்.

சரி... இந்த அமைச்சர் யார் என்பதை அறியும் ஆவல் உங்களுக்கும் இருக்கும்... முக்கியமான நிகழ்வுகளில் முன்வரிசையில் அமர்ந்திருந்து நித்திரை வழியும் அந்த அமைச்சர்தான் இவர்.

# முதல்வர் விக்னேஸ்வரன் அவரது வேலையைப் பார்த்தாலே போதும்

## எம்.பிக்கள் அவர்களது வேலையை சரியாகவே செய்கின்றனர் என்கிறார் சிவமோகன்



வவுனியா, மார்ச் 16

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட் டுள்ளமை தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சில கருத் துக்களை மாகாண சபையில் வெளியிட்டுள்ளார். அவருக்கு என்று ஒரு மாகாண சபை இருக்கின்றது. அதனைச் சரியாக வழிநடத்திச் சென்றாலே எமக்குப் பேருதவியாக இருக்கும்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பணிகளைச் சீராகவே முன்னெடுக்கின்றனர். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அது உருக்குலைக்கப்பட்டுள்ளது. பேரினவாதிகளும், மதவாதிகளும் இதனை உருக்குலைத்துள்ளனர். கூட்டு அரசு, பேரினவாதிகளுக்கு அஞ்சி அனைத்து விடயங்களையும் தாமதப்படுத்தியது.

உள்ளூராட்சித் தேர்தலில் ராஜபக்சாக்களின் எழுச்சி சிறுபான்மை மக்களுக்குப் பல செய்திகளைக் கூறுகின்றது. இந்தத் தேர்தல் வெற்றியுடன் முஸ்லிம்கள் மீதான வன்முறை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழர்கள் தங்கள் இருப்பைப் பாதுகாக்க ஒரு குடையின் கீழ்த் தேசியத்துக்காக ஒருமித்து நிற்க வேண்டும் என்ற செய்தியைக் கூறியுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சிகள் தாங்களாகவே ஆட்சியமைக்கும் நிலையில் இருக்கின்றன. அதை ஏனைய கட்சிகள் குழப்ப வேண்டிய தேவை இல்லை. இது தாமரை மொட்டுக்கும் பொருந்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பொருந்தும். ஏன் ஏனைய கட்சிகளுக்கும் பொருந்தும். நாம் பங்காளிகளாக ஆட்சியமைக்கா விட்டாலும் புரிந்துணர்வு அடிப்படையில் இணைந்து செயற்படுவோம் என்று நம்புகிறோம்.

வடக்கு மாகாண முதலமைச்சர், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்கக் கூடாது என்று தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பு அரசின் அமைச்சர்களையே அழைக்க வேண்டும் என்று கூறியுள்ளார். கொழும்பு அரசின் அமைச்சர்கள் மாவட்ட அமைச்சர்கள் போன்று செயற்படுகின்றனர். இதனால் எங்கள் மாவட்டம் வெகுவாகவே பாதிக்கப்படுகின்றது. அவர்கள் அதிகாரங்களை வைத்து எல்லாவற்றையும் நடத்துகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் சரியாகவே செயற்படுகின்றனர். நாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்களின் பிரச்சினை களை நேரடியாகத் தீர்க்கக் கூடியதாக உள்ளது. முதலமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்து முற்றிலும் பொருத்தமற்றது - என்றார். (5,110)

## இனவிருத்தியைக் கட்டுப்படுத்தும் மாத்திரை கிடையவே கிடையாது

### இலங்கை மருத்துவ சங்கமும் அறிக்கை வெளியிட்டது

கொழும்பு, மார்ச் 16

இனவிருத்தியைக் கட்டுப்படுத்தும் மாத்திரைகள் என்று எதுவும் கிடையாது. இவ்வாறு இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை மருத்துவ சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மேற்கத்தைய மருத்துவ முறைகளில் மலட்டுத்தன்மையை ஏற்படுத்தக் கூடிய மருந்து மாத்திரைகள் இதுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை. பல்வேறு நோய்களுக்காக உட்கொள்ளும் சில வகை மருந்துகளின் பக்க விளைவாகக் குழந்தைப் பாக்கியம் வரையறுக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உண்டு. இருப்பினும் நேரடியாக மலட்டுத்தன்மையை உருவாக்கும் வகையிலான மருந்து மாத்திரைகள் எதுவும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்றுள்ளது.

அம்பாறை உணவகத்தில் இந்த விவகாரத்தால் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் உலக சுகாதார நிறுவனம், தெளிவுபடுத்தல் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரே இலங்கை மருத்துவ சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (5)

## குற்றவியல் ஆயம் ஒன்றை அமைத்து இலங்கையை அதனிடம் கையளியுங்கள்

### ஜெனிவாவில் க.குமார் கோரிக்கை

இலங்கையில் குற்றவிலக்களிப்புக்கொடுரம்தொடர்கிறது. அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக இலங்கை விடயத்தைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு அல்லது இடைக்காலப் பன்னாட்டுக் குற்றவியல் ஆயம் ஒன்றை அமைத்து அதனிடம் கையளியுங்கள். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொது அமர்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

போர் முடிவுற்ற காலத்திலிருந்து முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடர்ந்து குற்றங்கள் இழைக்கப்பட்டே வருகின்றன. முஸ்லிம் சமூகத்தை நிதி ரீதியில் வெட்டியொதுக்கும் இலக்கோடு இயங்கும் சூத்திரதாரிகள் அதனை ஒப்பேற்றும்வரை எதையும் செய்யாதிருத்தல், அல்லது சிறிதளவே நடவடிக்கையெடுத்தல் என்ற போக்கையே இதுவரை இருந்த அரசுகள் பின்பற்றிவந்துள்ளன.

தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புப் போர் முடிவடைந்த கையோடு முஸ்லிம்கள் ஒழுங்குமுறையாக இலக்குவைக்கப்படுகின்றமையை இலங்கைத் தேசம் தன்னைத் தனித்துச் சிங்கள பௌத்த பேரினவாத நாடாக நிலை மாறும் கொள்கைப்போக்காகவே அர்த்தப்படுத்த முடியும்.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பன்னாட்டு மனிதஉரிமைகள் மனிதாபிமானச் சட்டமீறல்கள் தொடர்பில் உரியமுறையில்கவனம்செலுத்துவதற்கு இந்த (மனித உரிமைகள்) சபை உட்பட பன்னாட்டுச் சமூகம் தவறியமையே மேற்படி பௌத்த சிங்கள பேரினவாத தேசமாகத் தன்னை நிலைமாற்றும் இலங்கையின் செயற்போக்கான துணிச்சலைத் தருகின்றது. இந்தப் பின்புலத்தில் இலங்கை விவகாரத்தைப் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திடம் கையளியுங்கள் அல்லது இடைக்கால பன்னாட்டுக் குற்றவியல் ஆயம் ஒன்றை ஏற்படுத்தி அதற்கு அனுப்புங்கள். இதனிலும்குறைந்த எந்த நடவடிக்கை மூலமும் (இலங்கையில் தொடரும்) குற்ற விலக்களிப்பு முறைமையை நிறுத்தச் செய்ய முடியாது - என்றார். (5)

கேலிச்சித்திரம்




## முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஐக்கியத்துக்கே பாடுபட்டனர்

### தனிநாடு கோரவில்லை என்கிறார் கிழக்கு இராணுவத் தளபதி

மட்டக்களப்பு, மார்ச் 16

இந்த நாட்டு முஸ்லிம் தலைவர்கள் நாட்டைத் துண்டாடக்கேட்கவில்லை. தனி நாடு கேட்கவில்லை. இலங்கையை ஐக்கியத்துடன் கட்டியெழுப்பவே பாடுபட்டனர்.

இவ்வாறு கிழக்கு மாகாண இரணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சன்துஸித பணன்வெல தெரிவித்தார்.

காத்தான்குடி முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண இரணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சன்துஸித பணன்வெல மற்றும் காத்தான்குடி முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளுடனான சந்திப்புக் காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இந்த நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற இன ரீதியாக நாங்கள் கல்வி கற்கும் காலங்களில் கல்வி கற்கவில்லை. நாம் எல்லோரும் ஒரே இனமாகத்தான் பாடசாலைகளில் கல்வி கற்றோம்.

பல்கலைக்கழகத்திலும் எந்தவொரு இன ரீதியான வேறுபாடுகளுமில்லாமலே நாம் கல்வி கற்றோம். இந்த நாட்டின் சுதந்திரத்துக்காக உழைத்த முஸ்லிம் தலைவர்களான டி.பி.ஜாயா, அறிஞர் சித்திலெவ்வை போன்றோர் நாட்டை ஒரு போதும் துண்டாட விரும்பவில்லை. முஸ்லிம் தலைவர்களோ முஸ்லிம்களோ இங்கு தனி நாடு கோரவில்லை. இந்த நாட்டை ஐக்கியத்துடன் ஒற்றுமையாக வளர்த்தெடுக்கவே அவர்கள் பாடுபட்டனர்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் எந்தவொரு பெரிய அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. உணர்ச்சி வசப்பட்ட சிலரால் தூண்டி விடப்பட்ட இளைஞர்கள் கல்வீச்சுக்களில் ஈடுபட்டார்கள். நாங்கள் அவற்றை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தோம். கிழக்கில் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்ட 57 இளைஞர்களைக் கைது செய்தோம். அவர்களின் எதிர்காலம், கல்வி, தொழில் வாய்ப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு நீதிமன்ற சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டாம் என்று பொலிஸ் மா அதிபரிடத்தில் கேட்டுக் கொண்டேன்.

இவ்வாறான சம்பவங்களில் இளைஞர்கள் ஈடுபடக் கூடாது. நாம் கலந்துரையாடல்கள் மூலமே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இது கிழக்கு மாகாண மக்களின் முன் மாதிரியாகும். கடந்த முப்பது ஆண்டு காலப் போரை முடித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தினோம்.

இந்தக் கிழக்கு மாகாணத்தையும் நாம் கட்டியெழுப்ப வேண்டும் - என்றார். (5)

## லசந்த படுகொலை வழக்கு:

# முக்கிய குறிப்புகளை முன்னாள் டி.ஐ.ஜி. பிரசன்னவே அகற்றினார்

கொழும்பு, மார்ச் 16

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் நாள்குறிப்பேடு மற்றும் அவரின் கொலை தொடர்பான பொலிஸ் அறிக்கையிலிருந்த குறிப்பு ஆகியவற்றை முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார அகற்றியுள்ளார் என்று நீதிமன்றத்துக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கல்கிசை நீதிவான் மொஹமட் மிஹையின் முன்னிலையில் நேற்று அறிக்கை சமர்ப்பித்த போதே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான பொலிஸ் அதிகாரி திஸ்ஸ சுகதபாலவிடம் பெற்றுக்கொண்ட வாக்குமூலத்தின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைத்தன எனவும் குற்றப்புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை, கொலையாளி பயணித்தார் எனக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மோட்டார் சைக்கிள் பிரிவின் 7 உத்தியோகத்தர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா மற்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா ஆகியோரிடமும் ஏற்கனவே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றுக்கு அறிவித்தனர்.

லசந்த விக்கிரமதுங்கவின் அலைபேசியின் தகவல்கள் தொடர்பில் குற்ற விசாரணைத் திணைக்களத்திடமிருந்து அறிக்கை ஒன்றைப் பெறுவதற்கு அனுமதி வழங்குமாறும் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை ஏற்ற நீதிவான் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பில் முன்னாள்பிரதிப்பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவிடம் கடந்த 8ஆம் திகதி வாக்குமூலம் பதிவு செய்யச்சிறைச்சாலைக்குச் சென்றபோது அவர் சோர்வடைந்த நிலையில் இருந்ததால் வாக்குமூலம் பெற முடியாமல் போனதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர். (5)

# மகிந்த அணிக்கு கோல்பேஸ் மறுப்பு

### காலியில் அரச எதிர்ப்புக் கூட்டம்

கொழும்பு, மார்ச் 16

மே தினக்கூட்டத்தைக் கோல்பேஸில் நடத்துவதற்கு அனுமதி கோரி கூட்டுஎதிரணியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை கொழும்பு மாநகர சபையால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கோல்பேஸ் வளாகத்தில் புற்தரை வளர்ப்பு உட்பட பராமரிப்புப் பணிகள் இடம்பெற்று வருவதாலேயே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் அரசியல் அழுத்தம் எதுவுமில்லை என்றும், அனைத்துக் கட்சிகளுக்கும் இந்த நடைமுறை பொருந்தும் என்றும் உயர்மட்ட அரச அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மே தினக் கூட்டத்தைக் காலியில் நடத்துவது தொடர்பில் கூட்டு எதிரணி தற்போது பரிசீலித்து வருகின்றது.

நுகேகொடையில் கடந்த 7ஆம் திகதி நடைபெறவிருந்த அரச எதிர்ப்புக் கூட்டத்தை நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு கூட்டு எதிரணி ஒத்தி வைத்தது. இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தையே மே தினக் கூட்டமாகக் கூட்டு எதிரணி நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. (5)

# தேசத்துரோகிகள் 190 பேரையும் தேசிய வீரர்களாக அறிவியுங்கள்

### ஹிஸ்புல்லா நீதி அமைச்சரிடம் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 16

1804ஆம் ஆண்டு பிரித்தானியரால் தேசத்துரோகிகளாக அறிவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 7 முஸ்லிம்கள் உள்ளிட்ட 190 பேரையும் தேசிய வீரர்களாக அறிவிக்குமாறு நீதி அமைச்சர் தலதா அத்துகோரளவிடம் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா வேண்டுகோள் விடுத்தார்.

இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா இந்த விடயம் சம்பந்தமாக ஏற்கனவே முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மற்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்த போதிலும், நீதி அமைச்சர் பதவி மாற்றப்பட்டதால் இந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நீதி அமைச்சர் தலதா அத்துகோரளவின் கவனத்துக்கு மீண்டும் இந்த விடயத்தை இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா கொண்டு சென்றுள்ளார். நேற்றுப் புதன்கிழமை இந்த விடயம் சம்பந்தமாக அமைச்சர் தலதா அத்துகோரளவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் ஹிஸ்புல்லா தெரிவித்தார். (5)

### மைத்திரியின் ஆட்சியில்

# ஜப்பானுடனான உறவு புதிய பரிமாணத்தில்

### அந்த நாட்டு தலைமை அமைச்சரே தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 16

சென் பிரன்ஸிஸ்கோ மாநாட்டில் பலப்படுத்தப்பட்ட ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான நட்புறவு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ்ப் புதிய பரிமாணத்தைப் பெற்றிருப்பதுடன், அது நம்பிக்கையும் பலமும் மிக்க நட்புறவாக மாறியிருப்பதாக ஜப்பானிய தலைமை அமைச்சர் சின்சோ அபே தெரிவித்தார்.

ஜப்பானுக்கு அரசமுறைப் பயணமொன்றை மேற்கொண்டிருக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜப்பானியத் தலைமை அமைச்சர் சின்சோ அபேவினால் நேற்றுமுன்தினம் இராப்போசன விருந்து வழங்கப்பட்டது.

டோக்கியோ நகரில் உள்ள தலைமை அமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே ஜப்பானியத் தலைமை அமைச்சர் மேற்க்ண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான முதலீட்டு மற்றும் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் பலப்படுத்துவதற்குக் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற கலந்துரையாடல்களில் பல்வேறு உடன்பாடுகளுக்கு வர முடிந்திருப்பதாக ஜப்பானியத் தலைமை அமைச்சர் தெரிவித்தார்.

ஜப்பான்நாட்டை இலங்கை தனது நெருங்கிய நண்பராகக் கருதி செயற்பட்டு வருவதுடன், எதிர்காலத்திலும் இந்த உறவுகளை அனைத்துத்துறைகளிலும் மேம்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அரச தலைவர் மைத்திரி தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பை வழங்கும் முக்கிய நாடாக ஜப்பான் இருப்பதாகக் குறிப்பிட்ட அரச தலைவர் மைத்திரி, ஜப்பானிய மக்கள் குறித்து இலங்கை மக்களிடம் மிகுந்த மதிப்பு உள்ளதாகத் தெரிவித்தார். (5)

# கலாநிதியாகிறார் பந்துல குணவர்தன

கொழும்பு, மார்ச் 16

சீனாவின் பீஜிங் பல்கலைக்கழகத்தினால், மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கப்படவுள்ளது.

சீனாவின் பீஜிங் வெளிநாட்டுக் கற்கைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் ஜீ ஆ வென் ஜீயெனின் தலைமையில் கலாநிதிப் பட்டம் வழங்கும் நிகழ்வு, கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார வணிகத் தொடர்புகள் குறித்துப் பந்துல குணவர்தன சமர்ப்பித்த ஆய்வுக்காக இந்தக் கலாநிதிப் பட்டம் வழங்கப்படுகின்றது. (5)

# காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து காக்கும் சட்டவரைவில் கையொப்பமிட வேண்டாம்

### கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புக்கள் சபாநாயகருக்கு அழுத்தம்

கொழும்பு, மார்ச் 16

நாடாளுமன்றத்தில் கடந்த 7 ஆம் திகதி நிறைவேற்றப் பட்ட பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து சகலரையும் பாதுகாக்கும் பன்னாட்டுச் சமவாயச் சட்ட வரைவில் சபாநாயகர் கருஜயசூரிய கையொப்பமிடக்கூடாது என்று கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புக்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இந்த விடயத்தில் சபாநாயகர் தவறிழைத்தால் அது நாட்டுக்குத் துரோகமிழைத்ததாகவே கருதப்படும் என்று சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் அறிவித்துள்ளது.

மேற்படி சட்டவரைவு மீதான விவாதம் கடந்த ஆண்டு ஜூலை 5ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்டது. மீண்டும் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதிக்கு விவாதம் பிற்போடப்பட்டது. பல்வேறு தரப்புகளினதும் எதிர்ப்புகளால் அரசினால் பிற்போடப்பட்ட இந்தச் சட்டவரைவு மீதான விவாதம் கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. கூட்டு எதிரணியின் கடும் எதிர்ப்பையும் மீறி அன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, மேலதிக 37 வாக்குகளால் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது. சட்டவரைவுக்கு ஆதரவாக 53 வாக்குகளும் எதிராக 16 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

எனினும், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் சட்டத்துக்கு முரணான வகையில் குறித்த சட்டவரைவு நிறைவேற்றப்பட்டுள்ள தால் அது சட்டபூர்வமற்றது என்றும், அதில் சபாநாயகர் கையொப்பமிடக்கூடாது என்றும் கூட்டு எதிரணியின் தலைவரான தினேஷ் குணவர்தன கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஆராயப்படும் என்று சபாநாயகர் பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்ட பின்னர் அதில் சபாநாயகர் கையொப்பமிட்டால்தான் அது நடைமுறைக்குவரும். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மேற்படி சட்ட வரைவுக்கு சபாநாயகர் கையொப்பமிடக்கூடாது என்று சபாநாயகருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தச் சட்டவரைவு கடந்த காலத்துக்குத் தாக்கத்தைச் செலுத்தாது என்பதால் தமிழ் மக்களுக்கு எவ்விதத்திலும் அது பயனளிக்காது என்று தமிழர் தரப்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

ரணிலுக்கு எதிரான

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நம்பியிருக்கும் மகிந்த அணி

கொழும்பு, மார்ச் 16

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குக் கூட்டு எதிரணி முடிவு செய்துள்ளது.

கூட்டு எதிரணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்சவும் கலந்து கொண்டார்.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூட்டு எதிரணி திட்டமிட்டிருந்தது.

எனினும், கண்டியில் ஏற்பட்ட கலவரங்களினால், அந்தத் திட்டம் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

## பாலுக்குப் பூனை காவல்

ரஷ்யத் தேர்தலைக் கண்காணிக்க நாமல் ராஜபக்சவுக்கு அழைப்பாம்

கொழும்பு, மார்ச் 16

ரஷ்யாவில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலைக் கண்காணிக்க, மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் நாளை மறுதினம் 18ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலைச் சுதந்திரமான கண்காணிப்பாளராகக் கண்காணிப்பதற்கு வருமாறு நாமல் ராஜபக்சவுக்கு ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை ஏற்று, நாமல் ராஜபக்ச ரஷ்யாவுக்கு நேற்றுப் புறப்பட்டார். (5)

## வெற்றி மிதப்போடு மாகாண சபை தேர்தலை இலக்கு வைக்கிறார் மகிந்த

கொழும்பு, மார்ச் 16



உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்த தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி பெரும்பாலான சபைகளில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இந்த வெற்றிச்சூட்டுடன், மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைக்கத் தொடங்கியுள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச. இது தொடர்பில் மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாவது:

ஒத்திவைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே எமது அடுத்த கட்டப் பணியாகும்.

2017ஆம் ஆண்டு காலாவதியான வட மத்திய மாகாண சபை, சப்ரகமுவ, கிழக்கு மாகாண சபை என்பவற்றுக்கு ஆறு மாதங்கள் கடந்தும் இதுவரை தேர்தல் நடாத்தப்படவில்லை.

இந்த மூன்று சபைகளுக்கும் மேலதிகமாக வடக்கு, வடமேல், மத்திய ஆகிய சபைகளின் ஆட்சிக் காலமும் இன்னும் ஒரு சில மாதங்களில் நிறைவடையவுள்ளன. இந்தத் தேர்தல்களைத் தாமதிக்காமல் மக்களின் ஜனநாயக உரிமையைப் பெற்றுக் கொடுக்குமாறு அரசிடம் கேட்கின்றோம்.

அரசு மக்களின் பிரச்சினைகளை மறக்கடிக்க நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும் மக்களிடம் உள்ள பிரச்சினையை அரசால் மறக்கடிக்கச் செய்ய முடியாது - என்றார். (5)

# எல்லை வகுப்பு சிக்கலில் தடைதாண்டவேண்டும்

அது நடந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்தலாம் என்கிறார் அமைச்சர் பைசர்



கொழும்பு, மார்ச் 16

மாகாணசபை எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவாக நடத்தத் தயாராக இருப்பதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 21 ஆம் திகதி இது தொடர்பான நாடாளுமன்ற விவாதமும் வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது. எல்லை நிர்ணயம் தொடர்பில் மேன்முறையீடு செய்ய எந்தக் குழுவும் அமைக்கப்படாது. நாடாளுமன்றத்திலேயே தேவையான திருத்தங்களைச் செய்ய முடியும். எல்லை நிர்ணய அறிக்கையை நாடாளுமன்றத்தில் கையளிப்பது மட்டுமே எனது பொறுப்பு. அதன் பின்னரான சகல நடவடிக்கைகளும் நாடாளுமன்றத்தினூடாகவே முன்னெடுக்கப்படும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் எல்லை நிர்ணய அறிக்கை நிறைவேறாவிட்டால் தலைமை அமைச்சர் தலைமையிலான குழுவில் இது பற்றி ஆராயப்பட்டு அடுத்த கட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

உள்ளூராட்சித் தேர்தல் கலப்பு முறையில் நடத்தப்பட்ட நிலையில் மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்த வேண்டும் என்று சில கட்சிகள் கோரியுள்ளன. உள்ளூராட்சித் தேர்தலில் சில குறைபாடுகள் இருந்தாலும் மாகாணசபைத்தேர்தலைப் பழைய முறையில் நடத்திப் பின்னோக்கிச் செல்வது உகந்ததல்ல. சுதந்திரக் கட்சி பழைய முறையில் செல்வதைவிரும்பினாலும் புதிய முறையே உகந்தது என்ற நிலைப்பாட்டிலே இருக்கிறேன். சிறு மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் பழைய முறையில் தேர்தலை நடத்துமாறு கோரியுள்ளன. சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகள் தேசிய ரீதியில் சிந்திக்க வேண்டும்.

மூன்று மாகாண சபைகள் ஆளுநரின் கீழ் செயற்படுகின்றன. எல்லை நிர்ணய அறிக்கை நிறைவேற்றப்பட்டுத் தேர்தல் நடைபெறும் வரை தொடர்ந்து அவை ஆளுநரின் கீழேயே செயற்படும்.

எல்லை நிர்ணயத்தில் கலப்பு மற்றும் விகிதாசார வீதங்கள் 50 இற்கு 50 ஆகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. அனைத்துத் திருத்தங்களும் செய்யும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது. உள்ளூராட்சித் தேர்தலைப் போன்று அமைச்சருக்கு அதிகாரம் கிடையாது - என்றார். (5)

## குற்றம் புரிந்தபின் தப்பிக்கும் வழியை வன்முறையாளர்கள் அறிந்துள்ளனர்

அவை தொடர இதுவும் காரணம் என்கிறார் ராப்

கொழும்பு, மார்ச் 16



குற்றங்களைப் புரிந்துவிட்டுத் தப்பித்துக் கொள்வதற்கான வழிகளை வன்முறையாளர்கள் அறிந்துள்ளனர். இலங்கையில் தொடர்ந்து செல்லும் கலவரத்துக்கு இதுவும் காரணம். இவ்வாறு அமெரிக்கன் முன்னாள் போர்க்குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இடம்பெற்றுவரும் பக்க அமர்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் குற்றங்களைப் புரிந்த பலர் தண்டனைகளில் இருந்து தப்பிக் கொள்ளும் நிலமை அதிகம் உள்ளது. அரசியற் செல்வாக்கு உள்ளவர்கள், பாதுகாப்பு மற்றும் பொலிஸ் அதிகாரிகள் போன்றோர் பெரிய அளவில் மனித உரிமைக் குற்றங்களில் ஈடுபடுகின்ற போதும், அவர்களுக்கு சட்ட ரீதியான தண்டனை வழங்கப்படுவதில்லை. இதன் விளைவுகளாலே முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாதத் தாக்குதல்கள் உள்ளிட்ட பல வன்முறைகள் இடம்பெற்றன.

குற்றங்களைப் புரிந்துவிட்டுத் தப்பிக் கொள்வதற்கான வழிகள் இருக்கின்றன என்பதை வன்முறையாளர்கள் அறிந்திருக்கின்றனர். இந்த நிலமையை மாற்றுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், தண்டனை வழங்கப்படாமை மிகப் பெரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் - என்றார். (5)

## புலிகளுக்கு நிதி சேகரித்தோருக்கு சுவிஸில் சிக்கல்

வழக்குத் தீர்ப்பு ஜூன் 14

கொழும்பு, மார்ச் 16

சுவிட்சர்லாந்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்தார்கள் என்றுகுற்றஞ்சுமத்தப்பட்டுள்ள 13 தமிழர்களுக்கும் எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று முன்தினத்துடன் முடிவடைந்துள்ளது. வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதி அறிவிக்கப்படும்.

1999ஆம் ஆண்டுக்கும், 2009ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக 15 மில்லியன் சுவிஸ் பிராங் நிதியைச் சேகரித்து, பயங்கரவாதச் செயற்பாடுகளுக்குதுணை போனார்கள் என்று சுவிஸ், ஜேர்மனி, இலங்கையைச் சேர்ந்த 13 பேருக்கு எதிராகச் சுவிஸ் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தொடர்ந்திருந்தது.

பெலின்சோனா கூட்டாட்சி குற்றவியல் நீதிமன்றத்தில் கடந்த 8 வாரங்களாக நடந்து வந்த இந்த வழக்கு நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது. வழக்கின் தீர்ப்பு ஜூன் 14ஆம் திகதி அறிவிக்கப்படும்.

இந்த வழக்கிற்கு 3.79 சுவிஸ் பிராங் (4 மில்லியன் டொலர்) செலவு ஏற்பட்டுள்ளதாகவும், தமது கட்சிக்காரரான பிரதிவாதிகள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், இந்தச் செலவுத் தொகையை அவர்கள் செலுத்த நேரிடும் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சட்டவாளரான ஜீன் பியரே கர்பாடே தெரிவித்தார். (5)

## கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை

லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் 2பேர் கைது

இலஞ்சம்பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் மகரகம ஆயுள் வேதத் திணைக்களத்தின் அதிகாரிகள் இருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுள்வேத உற்பத்தி நிறுவனத்தின் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்காகச் சந்தேகநபர்களால் மூன்று இலட்சம் ரூபா இலஞ்சமாகக் கோரப்பட்டுள்ளது. அந்தத் தொகை இரண்டரை இலட்சமாகக்குறைக்கப்பட்டு, அதன் முதற் கட்டமாக 50 ஆயிரம் ரூபா இலஞ்சத்தைப் பெற்றுக் கொள்ளும் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (5)

## நீரிழிவு நோயாளருக்கு 'இனிப்பு' கொடுக்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, மார்ச் 16

நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்தும் உபகரணங்கள் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதால், அவற்றுக்கான விலைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீரிழிவு நோயாளர்களின் இரத்தத்தில் காணப்படும் சீனியின் அளவைப் பரீட்சிக்கும் குளுக்கோஸ் ஸ்ரிப் மற்றும் குளுக்கோஸ் இயந்திரம் ஆகியவற்றின் விலைகள் ஒழுங்கு படுத்தப்படவுள்ளது. ஸ்ரிப் 25 அடங்கிய பக்கெட் ஆயிரத்து 500 ரூபாவுக்கு அதிகமான



விலையில்சந்தையில்விற்பனைசெய்யப்படுகின்றது. இதற்கான இயந்திரம் 2 ஆயிரத்து 500 ரூபாவிருந்து பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. இவற்றை மிகக் குறைந்த விலையில், நீரிழிவுநோயாளர்களுக்குப்பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (5)

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 07.07.1925 — இறப்பு 11.03.2018

### திருமதி செல்லம்மா (ராசக்கா) தம்பையா

யாழ்.வேலணை வடக்கு. சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும். கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா (ராசக்கா) தம்பையா 11.03.2018 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்தாபிள்ளை - செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும், புலந்திரன், வாசவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வாசுகி, யாழினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற கணேசபிள்ளை, அன்னலட்சுமி, வேதநாயகி, மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, அன்னம்மா, நீலாம்பிகை, வைத்திலிங்கம், சிவராசா மற்றும் லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான கண்ணம்மா, சற்குரு ஆகியோரின் அன்புச்சகலியும், பவித்திரா, சசிக்கா, சுபாங்கி, கனிஷ்கா ஆகியோரின் ஆசை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல.63, பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல் குடும்பத்தினர்.**

(CS/14725)(11,17)

**+417 630 90062, +447 944 036 307, +94212227542, +94764737836**

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி செல்லம்மா (ராசக்கா) தம்பையா

பிறப்பு 07.07.1925 — இறப்பு 11.03.2018

**விழிநீர் சொரிந்து அஞ்சலிக்கின்றோம்**

பொன்னையா மயில்வாகனம் குடும்பத்தினர்

சிவகுரு தவராசா குடும்பத்தினர்

பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

**சோளாவத்தை, வேலணை வடக்கு, வேலணை -05**

(CS/14765)(11)



### அருளம்பலம் சந்திரகுமார்

(இளைப்பாறிய வங்கி ஊழியர் HNB)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சந்திரகுமார் (இளைப்பாறிய வங்கி ஊழியர் HNB) 13.03.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற அருளம்பலம் - புவனேஸ்வரிதம்பதியரின் அன்புமகனும், நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தியாகராசா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேந்திரன், ராஜேஸ்வரி, பத்மநாதன், சந்திரேஸ்வரி, சண்முகநாதன், திலகேஸ்வரி, வசந்தராஜன், சூரியகுமார், கனகாம்பிகை, ஞானாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், கீர்த்திகா, தக் ஷனா, திலக் ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபனின் பாசமிகு மாமனும், நித்தியானந்தன், சிவானந்தன், சுந்தரமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இல.125, பாடசாலை வீதி, பண்டாரிக்குளம் வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சாணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல. 125, பாடசாலை வீதி, பண்டாரிக்குளம், வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**075 5656663**

(cs14355)(13,17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 08.02.1974 — இறப்பு 14.03.2018

### சாமி ரவிசங்கர் (சங்கர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா தோணிக்கல் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கர் என அழைக்கப்படும் சாமி ரவிசங்கர் 14.03.2018 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாமி - சந்தானம் தம்பதிகளின் அன்பு மகனும், முத்துச்சாமி - விஜயா தம்பதிகளின் அன்பு மருமகனும், பிறேமாவின் அன்புக் கணவரும், யதுர்ஷன், கஜானிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாரதி, ஸ்ரீதேவி ஆகியோரின் சகோதரரும், திலக்ஷன், காருண்யன், நதிக்கா, நிதிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோணிக்கல், வவுனியா.**

**தகவல்: K.பிரபாகரன் (மைத்துனர்)**

(00292)(11,17)

**0775141448**



'வடக்கின் நடன நட்சத்திரம் யார்' எனும் தொனிப்பொருளில் குமுழமுனை கலைவாணி கலாமன்றத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் உடுவில் குபேரதா கலை மன்றம் நடத்திய, 6 முதல் 60 வயது வரையான ஆண், பெண் இருபாலரும் பங்குபற்றக்கூடிய நடன நிகழ்வு முல்லைத்தீவு - சிலாவத்தைப் பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நடனப் பொட்டில் பங்கு கொண்ட சிறுமியரின் நடனக் காட்சி இது. (21)

## வடக்கு மாகாண தொழிற்றுறை திணைக்களத்தின் பணிப்பாளராக ஸ்ரீ மோகனன் நியமனம்

அச்சுவேலி மார்ச் 16

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் பணிப்பாளராக கனகராசா ஸ்ரீ மோகனன் நிய மிக்கப் பட்டுள்ளார்.

கரவெட்டி பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த ஸ்ரீ மோக னன் பதவி உயர்வுடன் மாகாண தொழிற்றுறைத்திணைக்களபணிப்பாளராக நியமிக்கப்பட்டு ள்ளார். அவர் தனது பதவிப் பொறுப்புக்களை கடந்தவாரம் ஏற்றுக்கொண்டுள்ளார். (எ-11)

### ப.நோ.கூ சங்கம், எரிபொருள் நிரப்பு நிலையத்தை நடத்த

# பச்சிலைப்பள்ளியைத் தொடர்ந்து பருத்தித்துறையிலும் அனுமதி மறுப்பு

## தனியாருக்கு தாரைவார்க்கும் சதியில் பல தரப்புகள்

**யாழ்ப்பாணம், மார்ச், 16**

**கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளியைத் தொடர்ந்து பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்தை இயக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

பருத்தித்துறை துறைமுகத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டு தற்போது இயங்காதிருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்தை மீள இயக்குவதற்கே தடை விதிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமத்தை தனியாருக்கு வழங்கும் முயற்சிகள் இடம் பெறுகின்றன என்று அந்தச் சங்கத்தினர் குற்றஞ்சாட்டினர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமத்தை தனியாருக்கு வழங்கினால் சங்கத்தை நம்பியுள்ள 60க்கும் மேற்பட்ட ஊழியர்களுடைய வாழ்வாதாரம் இழக்கப்படுவதோடு சங்கம் மேலும் நலிவுற்று இல்லாதொழியும் நிலை ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

போர்க்காலத்தில் வடக்கில் மக்களின் முதுகெலும்பாக இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் இன்று நலிவடைந்து சங்கங்களின் பணியாளர்களுக்கு வேதனம் வழங்குவதற்கே முடியாத நிலையில் உள்ளன.

அந்தக் கூட்டுறவுச் சங்கங்களால் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான அனுமதிகளை மறுத்து தனியாருக்கு வழங்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

போருக்கு முன்னர் பச்சிளைப்பள்ளி ப.நோ.கூ. சங்கத்தின் நகரின் மத்தியில் ஓர் எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்கியது. அதற்கு எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் அனுமதியும் பெறப்பட்டிருந்தது. இருப்பினும் போரின் பின்னர் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினை நடத்த எரிபொருள் கூட்டுத்தாபனம் அனுமதி மறுத்து விட்டது. அதற்கான காரணம் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ள நிலம் சங்கத்துக்கு சொந்தமானது அல்ல என்பதே என்று கூட்டுத்தாபனம் கூறியது. இதனால் பெரும் நிதி நெருக்கடியின் மத்தியில் இயக்கச்சிப் பகுதியில் 5 பரப்புக் காணியை விலை கொடுத்துக் கொள்வனவு செய்து அதன் உறுதியுடன் அனுமதி கோரப்பட்டது. அதன் போது கொழும்பில் உள்ள காணி ஆணையாளரிடம் அது தனியார் காணி என உறுதிப்படுத்தல் பெற்றுத்தருமாறு கோரப்பட்டது. நீண்ட அலைச்சலின் பின்னர் அந்த அனுமதியும் பெறப்பட்டது. அதன்பின்னரும் அனுமதி தரப்படாத நிலையில் மீண்டும் தொடர்புகொண்டவேளையில் அது அரச நிலம் அல்ல என பிரதேச செயலாளரிடம் கடிதம் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. பிரதேச செயலாளரின் சிபாரிசுக் கடிதம் பெற்று வழங்கியும் இதுவரை அங்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தை இயங்கச் செய்வதற்கான அனுமதி கிடைக்கப் பெறவில்லை. கூட்டுறவுச் சங்கத்தினரின் கடும் அலைச்சலின் பின்னர் கூட அனுமதி மறுக்கப்பட்டது. அதே நிலையே தற்போது பருத்தித்துறைக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தக்கு அருகில் அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு 1978ஆம் ஆண்டு முதல் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமே முகவராக தொழிற்பட்டது.

கடற்தொழிலாளர்கள், விவசாயிகள், மக்கள் என அனைவருக்கும் அது சிறந்த சேவையாற்றியது. 1984ஆம் ஆண்டு பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் பாராட்டையும் பெற்றது. 1984ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசமாக அந்தப் பிரதேசம் அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்கவில்லை. தற்போது அதை தனியாருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகிறது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது தொடர்பில் சங்கத்தினர் தெரிவித்ததாவது: "அந்த இடம் விடுவிக்கப்பட்டு மக்கள் சென்றதன் பின்னர் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை மீளப் பெற்றுத் தந்து இயங்கச் செய்யுமாறு அரச தலைவர், தலைமை அமைச்சர், திணைக்களம் சார்ந்தவர்களுக்கு பல முறை கோரிக்கை விடுத்தோம். அதை அடுத்து அந்த எரிபொருள் நிரப்பு நிலையம் மீளப் பெற்றுத் தரப்படும் என்றும், தவறும் பட்சத்தில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைக்க அனுமதி தரப்படும் என்றும் மின்சக்தி எரிபொருள் அமைச்சரால் உறுதியளிக்கப்பட்டது.

அத்துடன் பெற்றோலியக் கூட்டு த்தாபனத்தாலும் கடிதம் வழங்கப்பட்டது. அபிவிருத்திக் கூட்டங்களிலும் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் தற்போது பெற்றோல் நிரப்பு நிலையத்தின் உரிமத்தை தனியாருக்கு வழங்கியுள்ளனர் என்று அறிகிறோம்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது தொடர்பான வெகுசனப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்" என்றனர். (எ-21)

### தேசிய நீர்வாழ் உயிரின செய்கை அபிவிருத்தி அதிகாரசபையால்

# வடக்கு குளங்களில் நடப்பு ஆண்டில் பல இலட்சம் மீன்கள் விடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் மார்ச் 16

தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தால் நன்னீர் மீன்பிடியாளர்களின் நன்மைகருதி இந்த ஆண்டு பல இலட்சம் மீன்கள் குளங்களில் விடப்பட்டுள்ளன என்று தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு மாவட்டங்களின் உத்தியோகத்தர் க.நிதிலன் தெரிவித்தார்.




இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதிகளில் நன்னீர் மீன்கள் மட்டுமன்றி இறால்களும் விடப்பட்டுள்ளன. தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு ஆகிய மாவட்டங்களில் பணிகள் இடம்பெறுகின்றன. நன்னீர் மீன்பிடியாளர்கள் எதிர்வரும் யூன் மாதம் அளவில் தற்போது விடப்படும் மீன் குஞ்சுகளின் போதிய உற்பத்தியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாவட்டங்களில் வளர்ப்பு முறையிலான மீன் உற்பத்தியினை அதிகரிக்கும் செயற்பாடுகளை அதிகரிக்கும் நோக்கில் குறித்த திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் குறித்த மாவட்டங்களில் உள்ள குளங்கள் மற்றும் செய்கையாக அமைக்கப்பட்ட வளர்ப்புக்கான நீர்நிலைகளின் நீர்மட்டங்களுக்கு ஏற்றவாறு மீன் குஞ்சுகளை இருப்பு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளம், வன்னேரிகுளம், புதுமுறிப்புக் குளம், தெளிகரைக் குளம், மணியன்குளம், றாமனாதகுளம் மற்றும் பாலங்குளம் ஆகியவற்றில் 9 இலட்சத்து 37 ஆயிரத்து 500 மீன் குஞ்சுகளும் 6 இலட்சம் இறால் குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தயன் கட்டுக்குளம், வவுனிக்குளம் , உடையார்கட்டுக்குளம், மருதமடுகுளம், தென்னியன்குளம், அம்பலபெருமாள்குளம் கற்சிலைமடுகுளம் தற்சடம்பன்குளம் வெளிவயல்குளம், தவசிகுளம், குடிதாங்கிக்குளம், பெரியகருவேப்பகுளம், நீராவியடி குளம், காஞ்சிரமோட்டைகுளம் என்பவற்றோடு ஆராச்சியமுறிப்புக் குளம் என்பவற்றில் 9 இலட்சம் மீன் குஞ்சுகளும் 12 இலட்சம் இறால் குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன.

இதேபோன்று யாழ்ப்பாணம் மருதங்கேணிப் பகுதியில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மீன்குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன.

இவ்வாறு விடப்பட்ட மீன்குஞ்சுகள் மற்றும் இறால் என்பவற்றில் அதிகமானவை சிறிய அளவில் முதலைகளுக்கும் இரையாகக்கூடும். இருப்பினும் விடப்படும் மீன்கள் இனப்பெருக்கத்தின் மூலமும் அதிகரிக்கும் என்பதனால் மீன்பிடியாளர்கள் நன்மை அடைய முடியும். இதனைவிட எமது 2018க்கான நிதி ஒதுக்கீடுடன் எதிர்வரும் மாதம்களில் இறால் மற்றும் மீன் குஞ்சுகளை அதிகளவு இருப்பு செய்யவும் தீர்மானித்துள்ளோம்-என்றார். (105)



# போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்.மார்ச்.16

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கான நடமாடும் சேவை முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அண்மையில் நடைபெற்றது. இதில் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான சக்கர நாற்காலிகள், மூக்கு கண்ணாடிகள், காது கேட்கும் கருவிகள், வெள்ளை பிரம்புகள் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 2ஆயிரத்து 550 பேர் பயன்பெற்றனர். (எ-7)

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட

# கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் இடமாற்றம்

அச்சுவேலி மார்ச் 16
வடக்கு மாகாண வலயக் கல்வி அலுவலகங்களில் கடமையாற்றி வந்த இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த ஒன்பது அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த 2ஆம் திகதி தொடக்கம் தமது புதிய கடமை நிலையங்களில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுவருகின்றனர்.

வருடாந்த இடமாற்றத்தின் நிமித்தம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்றங்கள் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு பின்தள்ளிப் போடப்பட்டிருந்தன. தேர்தல் முடிவடைந்ததை அடுத்து கடந்த 2ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

என்.கந்ததாசன் தென்மராட்சி கல்வி வலயத்தில் இருந்து வடக்கு மாகாண கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும் (கல்வி அபிவிருத்தி), ஜி.ஆதவன் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இருந்து வலிகாமம் கல்வி வலயம் கல்வி நிர்வாகம் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், எஸ்.மாணிக்கராசா யாழ்ப்பாண கல்வி வலயம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அபிவிருத்தியில் இருந்து பிரதிக் கல்விப் (நிர்வாகம்) பணிப்பாளராகவும், ரி.பால்ராஜ் மடு கல்வி வலயத்தில் இருந்து யாழ்ப்பாண கல்வி வலயம் அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும், எஸ்.தர்மிகா துணுக்காய் கல்வி வலயத்தில் இருந்து யாழ்ப்பாண கல்வி வலயம் முகாமைத்துவம் பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும், கே.ராதிகா வடமராட்சி கல்வி வலய இணைப்பில் இருந்து வடமராட்சி கல்வி வலயம் அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும், ஆர்.ஹம்சத்தணி துணுக்காய் கல்வி வலயத்தில் இருந்து வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கும், எஸ்.சரவணபவன் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இருந்து யாழ்ப்பாண கல்வி வலயம் கணிதம் உதவிக் கல்விப்பணிப்பாளராகவும் கே.விக்கினரூபன் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் இருந்து வலிகாமம் கல்வி வலயம் கணிதம் உதவிக் கல்விப்பணிப்பாளராகவும் இடமாற்ற நியமனம் பெற்றுள்ளனர். (எ-11)

முதன் முறையாக வடக்கு மாகாணத்துக்கான

# தைரொயிட் புற்றுநோய் சிகிச்சை தெல்லிப்பழை மருத்துவமனையில்

யாழ்ப்பாணம்.மார்ச்.16
**தைரொயிட் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான சிகிச்சை வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஆதார மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மருத்துமனையின் நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.**



இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

இளைஞர் யுவதிகள் அதிகளவில் இந்த தைரொயிட் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். 30 வயதுக்கு குறைந்தவர்கள் பெரும்பாலும் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். கழுத்தில் உள்ள தைரோயிட் சுரப்பியை மையப்படுத்தி இந்த புற்றுநோய் நிலைமை உருவாகும். இதற்கான சிகிச்சைகள் நாட்டில் இதுவரை மகரகம மற்றும் குருநாகல் மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு வந்தன.

தற்போது தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் இந்த சிகிச்சை முறை கடந்த ஒரு மாதகாலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நோயாளி ஒருவருக்கு நான்கு மணித்தியாலங்கள் குறைந்தளவு கதிர் வீச்சு உடைய பிரத்தியேகமான அறையில் இந்த சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. ஆகவே நாள் ஒன்றுக்கு 6 நோயாளர்கள் வரைக்கும் சிகிச்சை வழங்க முடியும். இந்த சிகிச்சை முறை மூலம் தைரொயிட் புற்றுநோயை 90 வீதம் வரையில் குணமடையச் செய்ய முடியும். குறைந்தளவு கதிர் வீச்சுடன் கூடிய சிகிச்சை தற்போது வழங்ககூடியதாகவுள்ளது. கடந்த வருடம் இந்த சிகிச்சை முறைக்கான அனுமதிகள் கிடைத்திருந்தாலும், இதற்கான பிரத்தியேக அறை மற்றும் மருந்து என்பன தற்போது கிடைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது கைகூடியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

வருடத்தில் ரூ.12 மில்லியன் உழைப்போர் மீது

# வரி விதிப்பது தொடர்பான மதிப்பீடுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.மார்ச்.16
வடக்கு மாகாணத்தில் வருடம் ஒன்றுக்கு 12 மில்லியன் ரூபா வரையில் வியாபாரத்தினை மேற்கொள்ளும் நபர்களின் காலாண்டு வரி அறவிடுதல் தொடர்பான ஆரம்ப கட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பிரதிப் பிரதம செயலரின் நிதிப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது.

வரி என்பது மக்களின் தேவைகளை முழுமை செய்யும் நிதி மூலமாகும். வடக்கு மாகாணத்தில் மொத்த் மற்றும் சில்லறை வியாபாரங்களை மேற்கொள்ளுபவர்கள் வருடாந்த வரி செலுத்துவது அவசியம். ஆனால் இந்த வரி வருடாந்தம் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட அளவு பணத்துக்கு அமைவாக அறவிடப்பட்டு வருகின்றது. மாகாணத்தின் வருமானத்தை உயர்த்துவதற்கு வரி அறவிடப்படுவது அவசியம்.

இதனைக்கருத்தில்கொண்டு வடக்கு மாகாணத்தில் காலாண்டுக்கு ரூபா 30 இலட்சத்துக்கு குறைவானதும் ரூபா 2 பில்லியனுக்கு அதிகரிக்கப்படாததுமான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரிகளிடம் இருந்து வரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மாகாணத்தில் இவ்வாறு எத்தனை பேர் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்பது தொடர்பில் தற்போது ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பின்னர் இதற்கான நியதிச் சட்ட வரைவுகள் தயாரித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

உடையார்கட்டுக் குளத்தை நம்பியிருக்கும்

# விவசாயிகளைப் பெரிதும் பாதித்த இராணுவத்தினரின் பயிர்ச்செய்கை

முல்லைத்தீவு, மார்ச், 16
பயிர்ச் செய்கையில் இராணுவம் ஈடுபட்டுள்ளதால் புதுக்குடியிருப்பு உடையார் கட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உடையார் கட்டுக் குளத்தை நம்பி பயிர்ச் செய்கையில் ஈடுபடும் அவர்கள் இந்த முறை சிறுபோகத்திலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்டது உடையார் கட்டுக் கிராமம். இந்தக் கிராமத்தில் உள்ள உடையார் கட்டுக் குளத்தை நம்பி அங்குள்ள 2ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் முன்னெடுக்கப்படும். காலபோக நெற் பயிர்ச் செய்கை தவிந்த ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கு இந்தக் குளமே விவசாயிகளின் பொக்கிசமாக இருந்தது. கடந்த போர்க்காலத்தின் பின்னர் உடையார் கட்டுப் பகுதியில் நிலை கொண்ட படையினர் படிப்படியாகத் தங்களுடைய இருப்பை அங்கு பலப்படுத்திக் கொண்டனர். பண்ணை ஒன்றை அமைத்து பயிர்ச் செய்கையிலும் ஈடுபடுகின்றனர்.

அந்தப் பண்ணைக்கு உடையார் கட்டுக் குளத்தில் இருந்து நீரைப் பெறுகின்றனர். தற்போது அவர்கள் 4 இஞ்சி கொண்ட பம் கொண்ட மூன்று இயந்திரங்களை அந்தக் குளத்தில் பூட்டி தங்களுடைய பயிர்களுக்கு காலை மாலை என்று நீர் இறைக்கின்றனர். இதனால் அந்தக் குளத்து நீர் வெகுவாக வற்றுகிறது. விவசாயிகள் தங்களுடைய பயிர்களுக்கு நீர் இன்றி தவிக்கின்றனர்.

இது தொடர்பாக பிரதேச மக்கள் தெரிவித்ததாவது: "இனிவரும் காலங்களில் ஆமிதான் எங்களுக்குச் சாப்பாடு தரும் என்று நினைக்கிறம். இந்த தோட்டம் துறவுகளை நாங்கள் கைவிட்டு அவர்களிட்ட கூலிக்கு மாரடிக்கிற நிலதான் வரும். அவங்கள் எல்லாத்தையும் உறுஞ்சிறாங்கள். இந்தக் குளத்தில (உடையார்கட்டுக் குளம்) தண்ணி எடுக்கிறாங்கள். கொஞ்சம் கொஞ்சமா குறைச்சு இன்டைக்கு அரை ஏக்கர் தான் சிறுபோகம் செய்யலாம் என்றும் சொல்லியாச்சு. ஒன்றரை மாதத்தில இரண்டு அடி தண்ணி வத்திப் போச்சு. ஆரிட்ட சொல்லி என்ன நடக்கப்போகுது" என்றனர்.

இந்தப் பிரச்சினை அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டது. இத்தற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் குளத்து நீர் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியாது என்றும் குளத்தில் இருந்து நீர் இறைக்கும் இயந்திரம் முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். இந்த விடயத்தில் படையினர் உடனடியாக நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டு குளத்தில் நீர் இறைப்பதை நிறுத்துமாறு இணைத் தலைவரால் பணிக்கப்பட்டது. எனினும் அது அகற்றப்படவில்லை என்று விவசாயிகள் நேற்று தெரிவித்தனர். (எ-21)

சுகாதார அமைச்சில் வட மாகாணத்துக்கான

# ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை நியமிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்.மார்ச்.16
கொழும்பு சுகாதார அமைச்சில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் வேலைகளை ஒருங்கிணைக்கும் தமிழ்மொழி பேசும் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பல்வேறு தேவைகளை கொழும்பு அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. அமைச்சின் பல்வேறு பிரிவுகளின் ஊடாக இந்தத் தேவைகள் முழுமை செய்யப்படுகின்றன.

மாகாண அமைச்சின் கோரிக்கைகளை கொழும்பு அமைச்சின் ஊடாக செயற்ப டுத்துவதற்கு ஒரு இணைப்பாளர் அவசியம். இது தொடர்பில் உத்தியோகத்தர் ஒருவரை இணைப்பாளராக நியமிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

அதன்படி மாகாண அமைச்சின் கருமங்களை கொழும்பு சுகாதார அமைச்சில் இருந்து மேற்கொள்ளுவதற்கு தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-7)

# வட்டியில்லா கடனுக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 16
மாணவர்களுக்கான வட்டியில்லா கடன் வசதிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு ஜி.சி.ஈ உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு உயர்கல்வி அமைச்சு கடனுதவித்திட்டம் ஒன்றினை உருவாக்கியுள்ளது. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி மூன்று பாடங்களில் சித்தியடைந்து பொதுப்பரீட்சையில் 30 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் இந்தக் கடனைப் பெற்று தமது உயர்கல்வியினை தொடர முடியும்.

ஒவ்வொரு மாணவர்களுக்கும் ரூபா எட்டு இலட்சம் வரை கடனுதவியாக வழங்கப்படும். அரசு அல்லாத உயர்கல்வி நிறுவனங்களில் இந்தக் கடனுதவி மூலம் கல்வியைத் தொடர முடியும்.

கடனுதவிக்கான விண்ணப்பங்களை www.studentloans.mohe.gov.lk என்ற இணையதளத்தின் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். விண்ணப்பத்துக்கான இறுதித் திகதி எதிர்வரும் 20ஆம் திகதிவரை நீடிக்கப்பட் டுள்ளது என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (114)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

மாத்தறை, மார்ச் 16

மாத்தறை வெலிகம பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.
இந்த விபத்து நேற்று அதிகாலை நடந்தது.
சிற்றூர்தியும் பாரவூர்தியும் மோதுண்டதாலேயே விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்தில் சிற்றூர்தியில் பயணித்த ரத்மலானை மற்றும் கல்கிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.
இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணை களைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரஈ5)

# பாரவூர்தியும் உந்துருளியும் மோதி விபத்து : ஒருவர் சாவு

கொழும்பு, மார்ச் 16

கொடதெனியாவ ஏகல பிரதான வீதியில் பாரவூர்தியுடன், உந்துருளி மோதுண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று நடந்தது.
விபத்தில் படுகாயமடைந்த நிலையில் தம்மெதெனிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபின் இளைஞர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.
கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரீ5)

# கசிப்பு தயாரித்தவர் கைது

கொழும்பு, மார்ச் 16

மாரவில, தெமடபிடிய, தம்மிகாமவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
சதுப்பு நிலத்தில் எவரும் கண்டுபிடிக்க முடியாதவாறு நூதனமுறை கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தின் பல பகுதிகளுக்கும், அநுராதபுரம், கண்டி உட்பட நாட்டின் பல பிரதேசங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.
சுற்றிவளைப்பின்போது 60 கசிப்பு போத்தல்கள் உட்பட கசிப்பு தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் பலவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.
சந்தேகநபர் நேற்று மாரவில நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். மேலதிக விசாரணைகளை மாரவில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரீ5)



மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திலுள்ள கோடைமேடு எனும் கிராமத்தில் கணவன் இல்லாத நிலையில் 4 பிள்ளைகளுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்ணுக்கு அகிம்சா எனும் சமூக தொண்டு நிறுவனம் வாழ்வாதாரத்துக்காக 40 ஆயிரம் ரூபாவை நேற்று வழங்கியது.
அகிம்சா நிறுவனத்தின் தொண்டர்கள், அதன் ஆலோசகரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவருமான த.வசந்தராசா உள்ளிட்ட பலர் கலந்து அதில் கொண்டனர். (ந-ரீ5)

# கடை உடைத்த இருவருக்கு மறியல்

திருகோணமலை,மார்ச்.15

திருகோணமலை, கந்தளாயில் கடையொன்றின் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்திய குற்ற ச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
கந்தளாய் மற்றும் மட்டக்களப்பைச்சேர்ந்த 29,31வயதுடையவர்களே விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.
இருவரையும் இம்மாதம் 19 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க உத்தரவிட்டார்.
சந்தேகநபர்கள் இருவரும் கடந்த 11 ஆம் திகதி இரவு முச்சக்கர வண்டியில்சென்று கந்தளாய் நகர் புட வைக் கடை ஒன்றுக்கு கற்களை எறிந்து கண்ணாடிகளை உடைத்துச் சேதமாக்கிவிட்டுச் சென்றனர். சி.சி.டிவி காணொலிகள் மூலம் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ரீ2)

# மாணவருடனான அணுகுமுறையில் மாற்றம் அவசியம்

## வடக்குகல்வி அமைச்சர்சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 16

மாணவர்களிடம் என்ன திறமை இருக்கின்றது என்பதை நாம் முதலில் கண்டறிய வேண்டும். அதை முன்னேற்றுவதற்கு நாம் உற்சாகம் வழங்க வேண்டும். மாணவர்களிடம் குறை காண்பதை விடுத்து நிறைகளைத் தேடி அந்த நிறைகளை ஆசிரியர்கள் அங்கீகரிக்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் க.சர்வேஸ்வரன்.
நிகழ்வொன்றில் அண்மையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்தாவது:
மாணவர்கள் தொடர்பான எங்களுடைய அணுகுமுறையில் மாற்றம் வேண்டும். நாம் மாணவர்களின் ஆற்றலை அங்கீகரிக்கும்போது ஆசிரியர், மாணவர் உறவு நெருக்கமடையும். அவர்களுக்கு அங்கீகாரம் வழங்காவிட்டால் தாழ்வு மனப்பான்மை ஏற்படும். அது அவர்களைப் பல வழிகளில் பாதிக்கும்.
இந்த நாட்டுக்குத் தேவையான, எமது இனத்துக்குத் தேவையான, எமது சமூகத்துக்குத் தேவையான அத்தனை ஆற்றல்களையும், வல்லுநர்களையும் உருவாக்குகின்ற பொறுப்பு உங்களிடம் இருக்கிறது. இது மிகவும் பொறுப்புவாய்ந்த பணி. அதை அனைத்து ஆசிரியர்களும் புரிந்து செயற்படவேண்டும்.
வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 10 பாடசாலைகள் உள்ளன. தற்போதுள்ள நவீன தொழிநுட்ப வசதிகள் காரணமாக மாணவர்கள் புத்தக வாசிப்புக்களை கைவிடாமல் இருக்க ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். அனைத்துப் பாடசாலைகளும் இத்தகைய மாற்றத்தினூடாக முன்னே வரவேண்டும். அதனூடாகத்தான் எங்களுடைய சமூகம் வலிமை பெறும். அவ்வாறு வலிமை பெற்ற சமூகத்தால்தான் எங்களுடைய எதிர்கால சமூகம் இந்த நாட்டிலே கௌரவமாக தலை நிமிர்ந்து உரிமைகளோடு வாழமுடியும். என்றார். (ந-112)



# யாழ்ப்பாணம் போதனாவில் மின் உயர்த்தி திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். போதனா மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட மின் உயர்த்தி நோயாளிகளின் பாவனைக்காக கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
மருத்துவமனை கிளினிக் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட மின் உயர்த்தியே (லிப்ற்) நோயாளிகளின்பாவனைக்காகதிறக்கப்பட்டது.
மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிகிச்சைக்கு வந்த நோயாளி ஒருவரால் மின்தூக்கி திறந்து வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
தற்போது புதிதாக மின் உயர்த்தி அமைக்கப்பட்டு நோயாளரின் பாவனைக்கு வந்துள்ளதால் நடக்க முடியாத நிலையில் இருக்கும் நோயாளிகள் தாமாகவே மாடியில் உள்ள சிகிச்சை நிலையங்களுக்குச் சென்று சிகிச்சை பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ரீ5)

# போதைப் பொருள் வைத்திருந்தவர் கைது

கொழும்பு, மார்ச் 16

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.
கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இவரிடமிருந்து 18 லட்சம் பெறுமதியான 150 கிராமும் 600 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.
இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரீ5)

# கடைகளில் தீ விபத்து

கொழும்பு, மார்ச் 16

திஸ்ஸமகாராமவிலுள்ள கடை ஒன்றில் நேற்று தீ விபத்து நடந்துள்ளது.
நிறப்பூச்சு கடை ஒன்றில் ஏற்பட்ட தீ பின்னர் அருகில் இருந்த இரண்டு கடைகளுக்கு பரவியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பிரதேசவாசிகளுடன் வீரவில கடற்படை தீயணைப்பு படையினரும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (ந-ரீ5)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 16

சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி ஒன்றை கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில்நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இவர் மதுகம உதும்கமவில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.
பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டதுடன் சந்தேக நபரிடம் இருந்து துப்பாக்கி ஒன்றும் அதற்குரிய ரவைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
வலால்விட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார். (ந-ரீ5)

# சட்டவிரோதமாக மது வைத்திருந்தவர் கைது


அம்பாறை,மார்ச் 16

அம்பாறையில் சட்டவிரோதமான முறையில் மதுபான போத்தல்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.
சந்தேகநபரை எதிர்வரும் 24 ஆம் திகதி அம்பாறை நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டது.
வெளிநாட்டவர் ஒருவர் நடத்திய விடுதியில் மதுவரித் திணைக்களத்தினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட சோதனையின் போதே மதுபான போத்தல்களுடன் கைது செய்யப்பட்டார். (ந-ரீ4)

# மன்னார் ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று

மன்னார், மார்ச் 16

மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கே.கே.மஸ்தான் ஆகியோர் தலைமையில் நேற்று மன்னார் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
கடந்த வருடம் இடம் பெற்ற மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.
அதனைத் தொடந்து கல்வி, மீன்பிடி, சுகாதாரம், விவசயம், கமத்தொழில், போக்குவரத்து, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற செயற்பாடுகள், இலங்கை போக்குவரத்து சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மன்னார் பிரதேச சபை, மன்னார் நகர சபை, அரச கால்நடை, இலங்கை மின்சார சபை, தொழிற்துறை திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் செயற்பாடுகள் அந்தந்த திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டன.
மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து கிராம அலுவலகர்கள், கிராம மட்ட தலைவர்கள் அபிவிருத்திக் குழு இணைத்தலைவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.
மன்னார் பிரதேச செயலாளர் மரியதாசன் பரமதாசனின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற குறித்த ஒருங்கிணைப்புக்



குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன், வடமாகாண சபை உறுப்பினர்களான அலிக்கான் சரீப், எஸ்.எம்.ஏ.நியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-ரீ5,56)

# ஹாக்கிங் என்னும் அசாத்திய மனிதன்

உலகப்புகழ்பெற்றஇயற்பியல்விஞ்ஞானியும்,'உலகின்நிகழ்காலத் தூண்', 'உலகின் மூளை' எனவும் வர்ணிக்கப்பட்ட ஸ்ரீபன் ஹாக்கிங்பிரிட்டனில்தனது 76ஆவது வயதில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவர்தனதுவாழ்வில்சந்தித்த மிகமுக்கியமானதருணாங்களில் வெகுசிலவற்றின் ஒளிப்படங்கள் இங்கு தரப்படுகின்றன.



அண்டவெளிபற்றி ஆய்வுகளை முன்னெடுத்து வருபவரான மிகப்பெரும் விஞ்ஞானி ஜோன் எல்ஸ் – ஹாக்கிங் இடையிலான சந்திப்பு 2009ஆம் ஆண்டு நடைபெற்றது.




மைக்ரொ சொப்ட் நிறுவுனரும் உலகின் மிகப்பெரும் பணக்காரருமான பில் கேஸ் – ஸ்ரீபன் ஹாக்கிங் இடையிலான சந்திப்பு கேம்பிரிட்ஜ் பல்கலையில் 1997ஆம் ஆண்டு நடைபெற்றது.



தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா – ஸ்ரீபன் ஹாக்கிங் இடையிலான சந்திப்பு ஜோகன்ஸ்பார்கில் 2008ஆம் ஆண்டு நடைபெற்றது.



அமெரிக்க அரசின் உயர் விருது 2009ஆம் ஆண்டு அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமாவால் ஹாக்கிங்கிற்கு வழங்கப்பட்டது.




லண்டனில் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலக விண்வெளி ஆராய்ச்சி மாநாட்டில் உரையாற்றுகிறார் ஹாக்கிங். (ம)





## பதவியேற்றார் மெர்க்கல்

பெர்லின், மார்ச் 16

ஜெர்மனியின் அதிபராக ஏஞ்சலா மெர்க்கல் நேற்றுப்பதவியேற்றுக்கொண்டார். தொடர்ந்து நான்காவது முறையாக அவர் பதவியேற்றார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் அதிபர் தேர்தல் நடைபெற்றது.

இதில் கிறிஸ்டியன் ஜனநாயக யூனியன் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஏஞ்சலா மெர்க்கல்லுக்கும், சமூக ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த மார்டின் சூல்ச்சுக்கும் கடும் போட்டி நிலவியது. 33 வீதமான வாக்குகள் பெற்று மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் மெர்க்கல். சூல்ஸூக்கு 20 சதவீத வாக்குகள் கிடைத்தன.

ஜேர்மனின் அதிபரைத் தெரிவுசெய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மெர்கலுக்கு ஆரதரவாக 364 உறுப்பினர்கள் வாக்களித்தனர். பெரும்பான்மை கிடைத்ததை அடுத்து நேற்று பதவியைப்பொறுப்பேற்றுக் கொண்டார் மெர்க்கல்.

"நான் வேலையைத் தொடங்குவதற்கான காலை வந்துவிட்டது என்பதை அனைவரும் உணர்வீர்கள். ஜெர்மனிக்கான புதிய மாற்றம். ஜெர்மனிக்கான புதிய ஒற்றுமை ஆகியவற்றை நோக்கிப்பயணிப்போம்" என்று மெர்க்கல் உரையாற்றினார். (ம)

## சபாநாயகருக்கே இந்த நிலையா?



நாடாளுமன்றத்தில் ஏதேனும் கூச்சல் குழப்பங்களால் அதன் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்வதுண்டு. சபாநாயகர் வெளிநடப்புச் செய்தார் என்று எவராவது கேள்விப்பட்டதுண்டா?. அது பாகிஸ்தானில் நடந்துள்ளது. பாகிஸ்தான் வரலாற்றில் முதல் தடவையாக பதிவாகியுள்ளது இந்தச் சம்பவம்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் சபாநாயகராக பதவிவகிக்கிறார் அயாஸ் சாதிக். நேற்றுமுன்தினம் அவர் வழக்கம் போல சபையை நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது உள்துறை தொடர்பாக உறுப்பினர்கள் கவனவீர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தனர். ஆனால் அதற்கு பதில் வழங்க வேண்டிய அந்தத் துறையின் அமைச்சர் அசன் இக்பால் சபையில் இல்லை. இது சபாநாயகர் அயாஸ் சாதிக்குக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. அவர், "எந்தநிலையிலும் நாடாளுமன்றத்தினை அவமதிப்பதை நான் ஏற்றுக்கொள்ளவே மாட்டேன். எனவே நான் சபை நடவடிக்கைகளில் இருந்து வெளிநடப்புச் செய்கிறேன்" எனக் கூறிவிட்டு வெளியேறினார். தொடர்ந்து துணைச்சபாநாயகர் முர்டாசா ஜாவத் அப்பாஸ் சபையை வழி நடத்திச் சென்றார். (ம)

## அமெ. -

வொஷிங்டன், மா
அமெரிக்கா - மெ
அமைக்கப்பட்
சுவரை பார்வை
அதிபர் டொனால்
மெக்சிக்கோவில்
றும் லட்சக் கண

# ரஷ்யத் தூ அதிகாரிக வெளியேறு பிரிட்டன்

உளவாளிக்கு நஞ்சூட்டப்பட
மேலும் வலுப்பெற்றது முறு



லண்டன், மார்ச் 16

பிரிட்டனுக்குச் சார்பாகச் செயற்பட்ட ரஷ்யாவின் முன்னாள்
விவகாரத்தில் ரஷ்யாவே குற்றவாளி என்று தொடர்ந்து வல
நாட்டில் பணியாற்றும் ரஷ்யத் தூதரக அதிகாரிகள் 23 பேரை

ரஷ்யாவின் இராணுவ உளவுப்பிரிவில் பணியாற்றியவர் செர்ஜய் ஸ்கிர்போல். அவருக்கு தற்போது வயது 66. இவர் சில ரஷ்ய உளவாளிகளை இங்கிலாந்து உளவுத்துறையிடம் காட்டிக் கொடுத்தார் என்று 2004ஆம் ஆண்டு ரஷ்யாவால் கைதுசெய்யப்பட்டு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். அவரை 2010ஆம் ஆண்டு மீட்டு அடைக்கலம் கொடுத்தது பிரிட்டன். சாலிஸ்பரி நகரில் அவர் வசித்துவந்தார். கடந்த 4ஆம் திகதி 33 வயதான தனது மகள் யூலியானாவுடன் மயங்கிய நிலையில் அவர் மீட்கப்பட்டார். மருத்துவ பரிசோதனையில் ஸ்கிர்போலின் உடலிலும் அவ

ரின் மகளது உடலிலும் விச
செலுத்தப்பட்டமை கண்டுபிடி
கப்பட்டது. இதன் பின்னணியி
ரஷ்யாவே உள்ளது என்று தி
வட்டமாகத் தெரிவித்தது பிரி
டன். அமெரிக்காவும் பிரிட்டனின்
பக்கம் நின்றது. எனினும் இந்த
குற்றச்சாட்டுக்களை ரஷ்யா
தொடர்ந்து மறுத்து வந்தது. இ
தப்பின்னணியில் தன்னிடத்தில்
பணியாற்றும் ரஷ்ய தூதரக அ
காரிகள் 23 பேரை வெளியேறு
படி உத்தரவிட்டது பிரிட்டன்
ரஷ்ய அயலுறவுத்துறை அமை
சர் செர்கெய், பிரிட்டனுக்கு வ
வேண்டும் என்று ஏற்கனவே
விட்டிருந்த அழைப்பையு
திரும்பப் பெறுகிறோம் என்று
பிரிட்டன் தெரிவித்தது. (ம

## …மெ. - மெக்சிக்கோ எல்லைச்சுவரை பார்வையிட்டார் அதிபர் ட்ரம்ப்

…ஷிங்டன், மார்ச்16
…ரிக்கா - மெக்சிக்கோ இடையே …மைக்கப்பட்டுவரும் எல்லைச் …ரை பார்வையிட்டார் அமெரிக்க …ர் டொனால்ட்ட்ரம்ப்.
…சிக்கோவில்இருந்துஆண்டுதோ …லட்சக் கணக்கானோர் சட்டவி ரோதமாக அமெரிக்காவில் குடியேறு கின்றனர். இதைத்தடுக்கஎல்லையில் மிகஉயரமானதடுப்புச்சுவர்எழுப்பப் படும்என்று அறிவித்தார்ட்ரம்ப்.
கடந்த2016ஆம்ஆண்டுநடைபெற்ற அமெரிக்கஅதிபருக்கானதேர்தல்பரப் புரைக்கூட்டத்தில்உரையாற்றுகையி லேயேஅவர்இவ்வாறுதெரிவித்திருந் தார். இதற்கான நிதி ஒதுக்கப்பட்டு எல் லைச்சுவர் அமைக்கும் பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் நேரில் சென்று கட் டுமானப் பணிகளைப் பார்வையிட் டார்.
“மெக்சிகோ எல்லையில் மிக உயர மாக தடுப்புச் சுவர் எழுப்பப்படும். இந் தச் சுவரின்மூலம் சட்டவிரோதமான குடியேற்றங்களை 99 சதவீதம் குறைக்கலாம்”என்றுட்ரம்ப்தெரிவித் தார். (ம)



அமெரிக்க - மெக்சிக்கோ எல்லையில் அமைக்கப்பட்டுவரும் மிகப்பெரும் தடுப்புச் சுவரை பார்வையி டுவதற்காக ட்ரம்ப்சென்றிருந்த போது, அவரின் வருகைக்கும், எல்லையில் சுவர் எழுப்பப்படுவதற்கும் எதிர்ப்புத்தெரிவித்துசிலர்போராட்டங்களில்ஈடுபட்டனர். அதுதொடர்பானஒளிப்படங்களைபன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

## …தூதரக …ரிகளை …பறுமாறு …ன் கெடு

…ப்பட்ட விவகாரத்தில் …முறுகல் நிலை



…ன் முன்னாள் உளவாளிக்கு நஞ்சூட்டப்பட்ட …தாடர்ந்து வலியுறுத்திவரும்பிரிட்டன், தனது …23 பேரை வெளியேறுமாறு உத்தரவிட்டது.

…திலும் விசம் …கண்டுபிடிக் …ன்னணியில் …என்று திட்ட …வித்தது பிரிட் …பிரிட்டனின் …னும்இந்தக் …ள ரஷ்யா …வந்தது. இந் …ன்னிடத்தில் …தூதரக அதி …வெளியேறும் …பிரிட்டன். …றைஅமைச் …னுக்கு வர …ஏற்கனவே …ழைப்பையும் …ம் என்றும் …து. (ம)

> ரஷ்ய அயலுறவுத் துறை அமைச்சர் செர்கெய், பிரிட்டனுக்கு வரவேண்டும் என்று ஏற்கனவே விட்டிருந்த அழைப்பையும் திரும்பப் பெறுகிறோம் என்றும் பிரிட்டன் தெரிவித்தது.

## நவாஸ்ஷெரீப்பின் வீட்டுக்கு அருகில் குண்டு வெடிப்பு

இஸ்லாமபாத், மார்ச்16
பாகிஸ்தானின் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் ஷெரீப்பின் வீட்டுக்கு அகே நேற்று அதிகாலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 7 பேர் உயிரிழந்தனர்.
லாகூரில் உள்ள அவரது இல்லத்துக்கு அருகிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 7 பேர் உயிரிழந்தனர். அவர்களின் மூவர் பொலிஸார். நேற்று மாலை வரை எந்த அமைப்பும் இந்தத் தாக்குதலுக்கு பொறுப் பேற்கவில்லை. (ம)





## மனவலிமை மிக்க பூனைதான்!

ஒரு பூனையின் உடலை மூன்று கம்பிகள் உடலின் ஒரு முனையால்துழைத்துக்கொண்டுமறுமுனையால்வெளியில் வந்தால் அந்தப் பூனை உயிருடன் இருக்கச் சாத்தியம் உள் ளதா? அது சாத்தியமாகியிருக்கிறது பிரிட்டனில்.
லண்டனில்‘ஜிஞ்சர்’என்றபூனைமாடியிலிருந்துதாவிக்குதிக் கும்போது கம்பி வேலியில் விழுந்துவிட்டது. மூன்று கம்பிகள் பூனையின்உடலைத்துளைத்துக்கொண்டுமேலேவந்துவிட் டன. எனினும் அசையாமல் படுத்திருந்தது பூனை. அந்த வழியே வந்தவர்கள் பூனைக்கு உதவுவதற்காகக் களத்தில் இறங்கினர். மீட்புக் குழுவொன்று வந்து பூனையை மீட்டு, மருத்துவமனையில் சேர்த்தது.
“சாதாரணமாக மூன்று கம்பிகள் குத்தினால் பூனை உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை. ஆனால் இந்தப் பூனையைத் துளைத்த கம்பிகள் உடலுக்குள் இருந்த எந்த உறுப்பையும் பாதிக்கவில்லைஎன்பதால்உயிர்பிழைத்திருக்கிறது. மிகவும் ஆச்சரியமான விசயம் இது. கம்பியில்சொருகியிருந்தபோதும் எடுத்தபோதும்சிகிச்சையின்போதும்ஜிஞ்சர்அழவே இல்லை என்பது இன்னொரு ஆச்சரியம். இந்த மன தைரியத்தால் பூனைவேகமாகத்தேறிவருகிறது”என்கிறார்மீட்புக்குழுவைச் சேர்த ப்ரூஸ்டர். (ம)

## பலஸ்தீன தலைமை அமைச்சர் ரமி காசாவில் இலக்குவைக்கப்பட்டார்!

சாசா, மார்ச்16
பலஸ்தீன தலைமை அமைச்சர் ரமி ஹம்தல்லாவை இலக்குவைத்து காசாவில் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தொழிற்சாலையொன்றைத் திறந்து வைப்பதற்காகச் சென்ற இடத்தி லேயேஅவரின்வாகனத்தொடரணியை இலக்குவைத்துகார்குண்டுவெ டிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ரமி ஹம்தல்லா பயணித்த காருக்கு இலேசான சேதங்கள் ஏற்பட்டுள்ள போதிலும்அவருக்குகாயம்ஏதும்ஏற்படவில்லைஎன்றுதெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)



## போத்தலுக்குள் குழந்தைகள்; பேரதிர்ச்சி ஜப்பானில்

டோக்கியோ, மார்ச்16
ஜப்பானில் வீடொன்று புதுப்பிக்கும் பணியின் போது, நான்கு கண்ணாடிப் போத்தல்களுக் குள் குழந்தைகளின் சடலங்கள் அடைக்கப் பட்டு அவைபுதைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
டோக்கியோ நகரில் உள்ள மருத்துவர் ஒருவ ரின்வீட்டிலேயேசடலங்களுடன்கூடிய இந்தப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தொப்புள் கொடியுடன் குழந்தைகளின் சடலங்கள் இருந் தன. வேதிப்பொருள் பயன்படுத்தி குழந்தை களின் உடல்கள் பாதுகாக்கப்பட்டு வந்தமை தெரியவந்துள்ளது.
குழந்தைகள் எவருடையவை? இதன் பின்ன ணியில் யார் உள்ளனர்? என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (ம)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தண்ணீரைப் பாதுகாக்க சட்டங்கள் மிக அவசியம்

யாழ்ப்பாணக்குடாநாடு உள்ளிட்ட வடக்குமாகாணத்தில், தண்ணீர்ப் பாவனையை நெறிப்படுத்துவதற்கான சட்டங்கள் எவையும் இல்லாமல் இருப்பது குறித்த கவலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தண்ணீர் விரயம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கும், நீர் நிலைகளுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கும் உரிய சட்ட ஏற்பாடுகள் இல்லாததால், தாம் இதுவிடயத்தில் கையறு நிலையிலேயே இருக்கின்றோம் என்று தெரிவித்திருக்கின்றனர் வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அதிகாரிகள்.

இயற்கையான நதிகளோ, பெரும் அணைக்கட்டுக்களோ இல்லாத சமதரையான, வறண்ட பகுதி வடக்கு. இங்கு தண்ணீருக்கு எப்போதும் பிரச்சினை உண்டு. வேறு மாவட்டங்களில் இருந்து இங்கு தண்ணீரைக் கொண்டு வருவதிலும் அரசியல் மற்றும் பிரதேச வேறுபாடுகள் முக்கிய காரணிகளாக இருப்பதால் நிலத்தடி நீரை மட்டுமே நம்பியிருக்கவேண்டிய நிலமை வடக்குக்கு உண்டு. அதிலும் யாழ்ப்பாணம் குடிதண்ணீருக்கும் ஏனைய தேவைகளுக்கும் நிலத்தடி நீரில் மட்டுமே தங்கியிருக்கிறது.

வடக்கில் உள்ள 5 மாவட்டங்களிலும் அதிகளவு மக்களைக் கொண்டதாக யாழ். மாவட்டமே விளங்குகின்றது. ஏனைய நான்கு மாவட்டங்களிலும் உள்ள மக்களின் மொத்த எண்ணிக்கையைவிட யாழ். மாவட்டத்திலுள்ள மக்களின் எண்ணிக்கை அதிகம். எதிர்காலத்தில் இது இன்னும் அதிகரிக்கும். எனவே அதிகரிக்கப்போகும் தண்ணீர்த் தேவையை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக வேண்டியது அவசியம். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கோடை காலங்களிலும் அதிலும் அதிக வறட்சிக் காலங்களில் ஏனைய மாவட்டங்களிலும் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கவே செய்கின்றது. வன்னியில் சில பல பெரிய குளங்கள் இருந்தாலும், வறட்சிக் காலங்களில் பல கிராமங்களில் தண்ணீரைப் பெறுவது இயலாத காரியமாகவே இருந்து வருகின்றது.

இவற்றுக்கெல்லாம் முறையற்ற நீர் முகாமைத்துவம் காரணம் என்பது ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. வடக்கின் தண்ணீர்ப்பிரச்சினை, குறிப்பாக யாழ். மாவட்டத்தின் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பது குறித்து 30 வருடங்களுக்கும் மேலான காலமாகப் பேசப்பட்டு வருகின்றது. பல திட்டங்கள் ஆராயப்பட்டுள்ளன. ஆனால் போர்ச் சூழல் காரணமாக அவற்றில் எவையும் செயற்படுத்தப் படவில்லை. கடந்த சில வருடங்களாகத்தான் அந்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிலத்தடித் தண்ணீரைப் பாதுகாக்காமலும், எதிர்காலத்திற்காக அதனைச் சேகரித்து வைக்காமலும், புதிய நீர் ஆதாரங்களை உருவாக்காமலும் எதிர்காலத் தண்ணீர்த் தேவையை வடக்கால் பூர்த்தி செய்ய முடியாது என்பதுடன், இருக்கின்ற நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தத் தெரியாமல் வீண்விரயம் செய்யும் எமது போக்கு கட்டுப்படுத்தப்பட்டால் மட்டுமே, இந்த விடயத்தில் குறிப்பி டத்தக்க அளவு அடைவையாவது பெறமுடியும்.

அதற்காகவே தண்ணீர்ப் பாவனை தொடர்பில் இறுக்கமான சட்டங்களையும், நியதிச் சட்டங்களையும் இயற்றவேண்டும் என்று அதிகாரிகள் வலியுறுத்துகிறனர். அது சரியானதும் பொருத்தமானதுமானதும்கூட. தனது முதலாவது பதவிக் காலம் முடிவடையும் நிலையில் உள்ள வடக்கு மாகாண சபை, இது விடயத்தில் அதிக அக்கறை எடுக்கவேண்டியது அவசியம். தண்ணீர்ப் பாவனை தொடர்பில் நியதிச்சட்டங்களை உருவாக்கி நீர் முகாமைத்துவத்தை வடக்கில் சிறப்புறக் கையாள்வதற்கு ஏற்ற சூழலை அது உருவாக்கவேண்டும். மூன்றாவது உலகப் போர் ஒன்று மூழுமாக இருந்தால், அது தண்ணீருக்காவே உருவாகும் என்று எதிர்வுகூறப்படும் நிலையில், தண்ணீருக்கான விளிம்புநிலை மக்களைப் பிரதிநித்துவப்படுத்தும் வடக்கு மாகாண சபை அது விடயத்தில் அதிக அக்கறை எடுக்கவேண்டியது அவசியம்.

நிலமை அப்படி இருந்தாலும், தேவையான நியதிச்சட்டங்களை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்துவதில் வடக்கு மாகாண சபையின் செயல் வேகம் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. ஒரு முன்னாள் நீதியரசர் தலைமையில் அமைந்த இந்தச் சபை நிதியதிச்சட்ட விவகாரத்தில் ஏனைய மாகாண சபைகளுக்கு முன்னுதாரணமாக இருக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பு இருந்ததுண்டு. எல்லாவற்றையும் பொய்யாக்கும் வகையில் மாகாண சபையை இயக்குவதற்குத் தேவையான 7 நியதிச்சட்டங்களை (நிதி அறிக்கைகளைத் தவிர்த்து) மட்டுமே நிறைவேற்றியிருக்கிறது வடக்கு.

ஒரு மாகாண சபை திறம்பட இயங்குவதற்கு, மாகாண சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட 34 விடயங்கள் தொடர்பிலும், குறைந்தபட்சம் 300 நியதிச்சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது வடக்கு மாகாண சபை எதையுமே செய்யவில்லை என்றுதான் கூறவேண்டும்.

இது பற்றிக் கடந்த காலங்களில் பல்வேறு கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டபோதும்கூட, இந்தவிடயத்தில் முன்னேற வடக்கு மாகாண சபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எஞ்சியிருக்கும் 6 மாத காலப்பகுதியிலாவது விரைந்து பல நியதிச் சட்டங்களை அது உருவாக்கக்கூடும் என்று எதிர்பார்த்தால், அதுபற்றிய எந்தத் திட்டமும் சிந்தனையும் இல்லாமல் சபை கூடிக் கலைவதைப் பார்க்கையில் இவர்களிடமிருந்து தண்ணீருக்கான ஒரு நியதிச்சட்டம் கிடைக்குமா என்கிற ஏக்கமே எஞ்சி நிற்கின்றது.

# சிறுபான்மையினர் ஒன்றுபடும்போது நியாயம் கிடைக்கவே செய்யும்

சேரலாதன்

முஸ்லிம் மக்களுக்கெதிரான அண்மைய மோசமான வன்செயல்கள் இந்தநாட்டில் சிறுபான்மை இனத்தவர் எந்த அளவுக்குப் பலவீனமான நிலையில் உள்ளனர் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டன.





அரசும், அரசியல்வாதிகளும் என்னதான் சமாதானம் கூறினாலும், இனவாதிகளின் கரங்கள் இங்கு தங்குதடையின்றிச் செயற்படமுடிந்ததுடன், நினைத்ததையெல்லாம் செய்து முடிக்கின்ற ஆற்றலையும் பெற்றுவிட்டுள்ளன. இனவாதம் என்பது தானாகவே தலைதூக்கக் கூடிய ஒன்றல்ல. இனவாதிகள் தகுந்த சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அதனை ஏனையோரின் மனங்களில் விதைத்தனர். கொடிய பாம்புக்கு பாலூட்டி வளர்ப்பது போன்று இனவாதமும் அவர்களால் சீராட்டி வளர்க்கப்பட்டு வருகின்றது.

### நாட்டின் பெரும்பான்மையினர் என்பதால் அவர்களது செயற்பாடுகள் யாவும் சரியானவை ஆகிவிடாது

பெரும்பான்மையினத்தவர்கள் இந்தநாட்டின் மொத்தச் சனத்தொகையில் 70 வீதத்துக்கும் மேலாக வாழ்கின்றார்கள் என்பதற்காக, அவர்கள் செய்வதையெல்லாம் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்க முடியாது. ஆனால் இந்த நாட்டில் இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. அதிக கல்வியறிவு அற்றவரான டி. எஸ். சேனநாயக்க, கல்வி அறிவு உடையவர்களைவிடச் சிறப்பாகத் திட்டம் போட்டு கிழக்கு மாகாணத்தை சிங்களமயமாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெற்றார். அவருக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த கல்வி அறிவு உடையவரான பண்டாரநாயக்க, சிங்களத்துக்கு மட்டுமே இந்த நாட்டில் இடமுண்டு என இனவாதம் பேசினார். அதில் வெற்றியும் கண்டார். இனக்கலவரத்துக்கு ஆரம்பப்புள்ளியாகத் திகழ்ந்தவரும் இந்தப் பண்டார நாயக்கவேதான். பின்னர் ஆட்சிக்கு வந்த கடைத்தெடுத்த இனவாதியான ஜே. ஆர். ஜெயவர்த்தன, 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்று போர் அறிவித்து தமிழர்களின் அழிவுக்கு வழிகோலினார். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் தத்தமது அரசியல் இருப்புக்காக இனவாதத்தையே தமது முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தினர். இதனால் சிறுபான்மையின மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பாக இவர்களில் எவரும் இம்மியளவும் கவலைப்படவில்லை.

நாட்டில் நிலவுகின்ற இனங்களுக்கு இடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முழு மனதுடன் செயற்பட்டால் மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் தீர்வைக் காணமுடியும். ஆனால் உரியவர்கள் அவ்வாறு சிந்திப்பதாகத் தெரியவில்லை. மாறாக சிறுபான்மை இனங்களின் இனப்பரம்பலைச் சீர் குலைப்பதற்கான முயற்சிகளிலேயே அவர்கள் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். இதனால் சிறுபான்மை மக்கள் தமது எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையை இழந்து வருகின்றனர்.

### இந்தியாவுக்கும் மதவாதம் தலைவலியான ஒன்றே

இந்தியாவில்கூட, மதவாதம் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அந்த நாட்டில் முஸ்லிம்கள், இந்துக்களுடன் ஒப்பிடுகையில் சிறுபான்மையினராக உள்ளபோதிலும், இந்துக்களுக்கு அடுத்த நிலையில் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். பல இந்திய மாநிலங்களிலும், மத்தியிலும் ஆட்சியமைவதைத் தீர்மானிக்கின்ற சக்தியாகவும் இவர்களே உள்ளனர்.

ஆனாலும் பெரும்பான்மை இந்துக்களுடன் முஸ்லிம் மக்கள் ஐக்கியமாக வாழ்வதாகத் தெரியவில்லை. மோதல்களுக்கும் அங்கு குறைவேயில்லை. காஷ்மீர்பிரச்சினை தீர்க்கப்படும் வரையில் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்வார்களென எதிர்பார்க்க முடியாது.

இதைவிட, பாகிஸ்தானின் ஆதரவு பெற்ற பயங்கரவாத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களது வன்செயல்கள் இந்தியாவில் தொடரும் வரையில் அங்கு அமைதியை எதிர்பார்க்க முடியாது.

அழகான இலங்கைத் திருநாடு இனவாதச் செயல்களால் அடிக்கடி எரிந்து கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. இன்று உலகின் முன்னால் தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலையும் அதற்கு ஏற்பட்டுள்ளது. இந்தத் தடவை, ஐ. நா மனித உரிமைகள் சபையின் கூட்டம் இந்தநாட்டைப் பொறுத்தவரையில் நெருப்பாற்றைக் கடப்பதற்கு ஒப்பானதாகவே அமைந்துவிட்டது. இனிவரும் காலங்கள் இதைவிட மோசமானதாகவே அமையப்போகின்றது.

### சிறுபான்மை இனத்தவர்கள் முதலில் தமக்குள் ஒன்றுபட்டாக வேண்டும்

இதேவேளை, சிறுபான்மை இனத்தவர்களுக்கும் பொறுப்புக்கள் சில உள்ளதை நாம் மறந்துவிடக் கூடாது. முதலில் இவர்கள் தமக்குள் ஐக்கியத்தைப் பேணுவதற்குப் பழகிக்கொள்ளவேண்டும். இவர்கள் தமக்குள் முரண்பாடுகளை வளர்த்துக்கொண்டு பிறரிடம் எந்த வகையிலும் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது. வடக்கும், கிழக்கும் இணைந்திருந்தால் தமிழரும், முஸ்லிம்களும் பாதுகாப்பாக இருக்கமுடியுமெனத் தமிழர்கள் நினைக்கின்றனர். ஆனால் இவை இணைக்கப்பட்டால் தமக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடுமென முஸ்லிம் தரப்பினர் எண்ணுகின்றனர்.

ஆனால் சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக எதிர்காலத்தில் இந்த இரண்டு தரப்பினருமே மோசமாகப் பாதிக்கப்படப் போகின்றனர். இனவாதிகள், தாம் எடுத்துவைக்கின்ற ஒவ்வொரு அடிகளையும், மிகக் கவனமாகவே எடுத்துவைக்கின்றனர். அவர்களுக்குப் பலமான பின்புலமும் உள்ளதால் தாம் நினைத்ததை அவர்களால் படிப்படியாகச் சாதிக்க முடிகின்றது.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பதற்கு ஏற்ப தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்களானால் எதிரிகளுக்கு அச்சம் ஏற்படவே செய்யும். முஸ்லிம்களும், தமிழர்களும் கேட்பதற்கு எவருமில்லாத அநாதைகள் அல்ல. அவர்களுக்கு ஆதரவானவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இதை மனதில் கொண்டு தமிழ், முஸ்லிம் மக்கள் இனவாத சக்திகளுக்கெதிராக ஒன்று திரண்டு அகிம்சை வழியில் போராடும் போது நிச்சயம் நியாயம் கிடைக்கவே செய்யும்.



# மாற்றம் காணுமா வட பகுதி?



தம்பித்துரை

“கிழக்குமாகாணத்தில்மூவின மக்களும் செறிந்து வாழ்கின்றனர். அங்கு சென்று பார்க்கும்போதுஇதுஎன்ன லண்டனா?, சவூதி அரேபியாவா? என்று ஆச்சரியம்ஏற்படுகின்றது. போருக்குப்பின் குறுகியகாலத்தில்பெரியஅபிவிருத்திமாற்றங்கள் கிழக்கில் ஏற்பட்டுள்ளன.”

இது யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்ஈ.சரவணபவன்,நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது தெரிவித்த கருத்துக்கள்.

கிழக்கு மாகாணம் ஒன்றும் நாம் சென்று வராதபகுதியோஎமதுதலைவர்கள், எமது அரசஅதிகாரிகள் சென்றுவராத பகுதியோ அல்ல. பல தலைவர்களும் அரச அதிகாரிகளும் பலதடவை சென்று வந்திருப்பர். ஆனால் அவர்கள் வெறுமனே “சென்று திரும்பியவர்கள்” மட்டும் தான்.

### கிழக்கு மாகாணம் கணிசமான அபிவிருத்தி கண்டுள்ளது

அங்கு இடம்பெற்றுள்ள பல அபிவிருத்திச் செயற்பாடுகள், முன்னேற்றகரமானநடவடிக்கைகள் மற்றும் வடக்குமாகாண மக்களுக்கும்பயன்தரவல்லஅவதானங்களை கண்டு, விவரிக்கக்கேட்டு, ஆராய்ந்து பார்த்து மனதிருத்திக் கொண்டு வருபவர்கள் ஒருசிலரே. அவர்களுள் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், தாம்அவதானித்தஅபிவிருத்திச் செயற்பாடுகளை வடக்கிலும், நடைமுறைப்படுத்த அவாக்கொண்டுள்ளமையையேஅவரதுமேற்கண்டஉரைவெளிப்படுத்தியுள்ளதாகக் கொள்ள இயலும். அண்மையில் கிழக்கில் முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராக பெரும்பான்மை இனத்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் தொடர்பான ஒளிப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தமையைக் காணநேர்ந்தபோதுகூட, அங்குள்ள வீதிகள் மிக அழகான முறையில் பராமரிக்கப் பட்டுவருவதை ஊகிக்கக்கூடியதாக இருந்தது. இலங்கை சுதந்திரம் பெற்று70 வருடங்களைக் கடந்து விட்டுள்ள இந்த வேளையிலும் கூட, எமது வடக்கு மாகாணத்தில்அபிவிருத்திவிடயத்தில், நாட்டின் ஒன்பது மாகாணங்களுடன் ஒப்பிட்டால் இறுதி இடத்திலேயே அது நிற்கின்றது. முப்பது வருடகால அகிம்சைப் போராட்டத்திலும், 30 வருடகால ஆயுதப் போராட்டத்திலும் நாம் இழந்தவை உயிர்களும், உடமைகளும், உரிமைகளும் மட்டுமல்ல; எமது பகுதிகளது அபிவிருத்திகளையும் தான்.

நாட்டின் அரசை நிர்வகித்தவர்கள், பாரபட்சமாக நடந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களைப்புறக்கணித்துஏனையபகுதிகளில் பொருளாதாரரீதியாகவும், கலை, கலாசார ரீதியாகவும் மிகப்பெரும் அபிவிருத்திகளை வலுப்படுத்தினர். தொழிற்றுறைகள், வீதிகள், கட்டடங்கள் என சகல வழிகளிலும்நவீனத்துவத்துடன்பிறமாகாணங்கள் முன்னேற்றமடைந்தன.

### வடக்கின் அபிவிருத்தி ஆமை வேகத்திலேயே

போரைக் காரணம் காட்டி, வடக்குக் கிழக்கில் அபிவிருத்திச் செயற்பாடுகள் புறக்கணிக்கப்பட்டாலும்,கிழக்குமாகாணம்குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டு வந்தது. போர் முடிவடைந்த பின்னரான கடந்த ஒன்பதாண்டுகள் காலப்பகுதியிலும், கிழக்கு மாகாணம் அபிவிருத்தி விடயத்தில் வெகுவான முன்னேற்றம் கண்டுள்ளது. வடக்கிலும், வீதிகள் கடந்த ஆட்சியின்போது விரைவான மாற்றம் கண்டதென்னமோ உண்மைதான். அத்துடன் புகையிரதப்போக்குவரத்தும்ஆரம்பிக்கப் பட்டமை குறிப்பி டத்தக்கது. எனினும் நீண்டகால புறக்கணிப் புக்குப் பின்னர் அதிதுரிதமாக பல துறை களிலும் முன்னேற்றமடைந்திருக்க வேண்டிய வடக்கு மாகாணம்அபிவிருத்திவிடயத்தில்ஆமை வேகத்திலேயே நகர்கிறது. உலக வங்கி உட்பட உலக நாடுகள் பலவும் இலங்கைக்கு, குறிப்பாக வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் பல உதவிகளை, நிதிமூலங்களை வழங்கியதாக தகவல் அவ்வப்போது ஊடகங்களில்வெளிவந்தன. ஆனால்வளர்ச்சிஅல்லது அபிவிருத்தி என்பது குறித்துத் திருப்திப்பட முடியவில்லை.

இந்தியா, தான் வட பகுதியில் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதாக அடிக்கடி பீற்றிக் கொள்ளும். ஆனால் இதுவரை அமைக்கப்பட்டவை சொற்பமே! இதே போன்று, உலக வங்கியின் உதவியுடன் யாழ். நகரம் விரிவுபடுத்தப்படும்; அழகுபடுத்தப்படும்எனச்செய்திகள் வந்து வருடக் கணக்கில் ஆகிவிட்டன. (ஒரு வேளை வருடக்கணக்கில் திட்டம் தீட்டுகிறார்கள் போலும். அப்படி நீண்ண்ண்ட..... திட்டம் தீட்டுகிறார்கள் எனக் கொண்டால் சிங்கப்பூர், லண்டன், கனடா நாடுகளை விட சிறந்த அபிவிருத்தி இடம்பெறப்போகிறது போலும்.)

### அரசியல்வாதிகளது வெத்துவேட்டு வாக்குறுதிகள்

பட்டுவேட்டிக் கனவால், இருந்த இடுப்புக் கச்சையையும் பறிகொடுத்த வரலாறே தமிழ் மக்களுக்கு மீண்டும் மிச்சமாகியுள்ளது. ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் குட்டிச் சிங்கப்பூர் போல யாழ்ப்பாணம் மாறும்என்றுகனவுகாட்டியவர்கள், கடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் உச்சி குளிர வாக்குறுதிகளும், வரைபடங்களும்காட்டி படங்காட்டிச் சென்றுள்ளனர். வழக்கம் போல இலவுப்பழத்துக்காகக் காத்திருப்போம்!என்ன, ஒன்றுயாழ்.நகருக்கு வரும் மக்கள்“அடக்கமாட்டாமல்”படும்பாடுதான் பெரும்பாடு!சிங்கப்பூர்வேண்டாம்ஐயா... சிறுநீர் கழிக்கப் போதுமான, சுத்தமான, அடிக்கடி “ பழுது காரணமாகப் பூட்டப்பட்டுள்ளது ” என்ற அறிவிப்பில்லாத மலசல கூட வசதிகளையாவது “அவசரமாக ஏற்படுத்தித் தாருங்கள்” என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர். நகர மத்தியிலுள்ள பேருந்து நிலைய வளாகத்தில் பகல் வேளையில்மலசலகூடம்நிரம்பிவழிந்து துர்நாற்றம்வீசுவதை, மூக்கைப்பொத்திய படிமக்கள் கோபத்தையும்“அடக்கமாட்டாமல்”தமக்குள் திட்டித்தீர்க்கின்றனர்.

இவற்றோடுஒப்பிடுகையில், கிழக்குமாகாணம், நாடாளுமன்றஉறுப்பினர்சரவணபவன் கூறியதுபோல, வீதிகள்விசாலமாகவும், அழகாகவும் (கிழக்கில் வீதி விபத்துக்கள்குறைவாகஉள்ளமைக்குஇதுவும்ஒரு காரணம்.) பராமரிக்கப்படுகின்றன, தொழிற்சாலைகள் பல உருவாக்கப்பட்டு பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன. மற்றும் பல விடயங்களிலும் வடக்கைவிட கிழக்கு கொடுத்து வைத்தது என்றே கூறவேண்டும். இவற்றுக்கு அரசின் பாராமுகம், மாற்றாந்தாய் மனப்பான்மைஎன்பனவோடு, எமதுதலைமைகளின் தூரநோக்கற்ற, மந்தமான போக்கும், இலங்கைக்கு அப்பால் இந்திய, மேற்குலக நாடுகளின் நேரடி அபிவிருத்தியைக் கோரிப்பெறாமல், சரியான திட்ட மிடல்களை வழங்கி, நிதி உதவி கோராமல் எழுந்தமானமாக நிதியுதவி செய்யுமாறு கேட்டால்எவர்தான்உதவமுன்வரப்போகிறார்கள்? புலம்பெயர்தமிழ்அமைப்புக்கள், நிதிவழங்க மனம்கொண்டுள்ள எம்மவர் கூட வடக்கு அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. பாா்ப்போம்;உள்ளூராட்சி“மன்னர்கள்”மாற்றங்களை ஏற்படுத்துகிறார்களா என்று...



## ஆசிரியருக்கான கடிதம்

### பாடசாலை மட்ட துடுப்பாட்டப் போட்டிகளும் இளையோரின் நலனும்

தற்போது பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. விளையாட்டுக்கள் சமூக நலனை மேம்படுத்துவதற்கு இன்றியமையாதவை. விளையாட்டுக்களில்ஏற்படும்வெற்றிதோல்விகள் வாழ்க்கையில்ஏற்படும்வெற்றிதோல்விகளை உறுதியுடன் எதிர்கொள்வதற்கு வழிவகுக்கும்.

தற்போதைய வேகமான உலக இயக்கத்தில், நோய்கள் ஏற்படுவதைத்தடுப்பதற்கு விளையாட்டுக்கள் இன்றிமையாதவை. இவற்றுக்காகநாம் விளையாட்டுநிகழ்வுகளுக்குப்பூரண ஊக்கமும்ஒத்துழைப்பும்வழங்கல்வேண்டும். ஆனால்அண்மையநாள்களில்கல்லூரிகளுக்குஇடையே நடைபெறும்துடுப்பாட்டப்போட்டிகளைஅவதானிக்கும்போது மாணவசமூகம்சம்பந்தப்படும்பலவன்முறைச்சம்பவங்கள்பதிவாகிஉள்ளதாக அறிய வந்துள்ளது. மாணவர்கள்மதுபோதையில் தகராறுகளில் ஈடுபட்டுள்ளனர். நகரங்களில் ஆபத்தான விதத்தில் அவர்கள் வாகனங்களில் வலம் வந்தமை அவதானிக்கப்பட்டு உள்ளது.

எனவே இவற்றைத் தவிர்க்கப் பாடசாலை நிர்வாகமும், பழைய மாணவர் சங்கங்களும், பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விளையாட்டு நடைபெறும் நாள்களில் பாடசாலைச் சமூகம் மதுப்பாவனையுடன் கூடிய கேளிக்கைகளில் ஈடுபடக் கூடாது. அத்தகைய நிகழ்வுகளை ஊக்குவிக்கக் கூடாது. பாடசாலைக் கொடியுடன் பாடசாலை வளாகங்களுக்கு அப்பால் மாணவர்கள் நகர வீதிகளில் உலாவருதல் தடை செய்யப்படல் வேண்டும்.

‘ஒருபானைசோற்றுக்குஒருசோறுபதம்’என்பதுபோல், போர்வன்முறைகள்நனவிலிமனதில்இருந்துமதுபோதையில்ஒருசிலரது மனங்களில் வக்கிர உணர்வைத் தூண்ட வல்லவை. எனவே பாடசாலைச் சமூகம் எமது எதிர்கால சமூகத்தின் உளநலத்தைக் கருத்தில் கொண்டு இது விடயத்தில் காத்திரமான முடிவுகளை எடுத்தல் அவசியம்.

மருத்துவர் சி.யமுனாநந்தா
யாழ்.போதனா வைத்தியசாலை.

### வீடுகளில் சேரும் குப்பைகள் அகற்றப்படுமா?

நாணாட்டான் பிரதேச சபையின் கீழ் வரும் முருங்கன்பிட்டிப் பகுதியில் வீடுகளில் சேரும்குப்பைகளைஅகற்றநடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டும், பணியாளர்களால் குப்பைகள்அகற்றப்படுவதில்லை. வாரத்தில் ஒரு தடவையாவது குப்பைகளை அகற்றபிரதேசசபை உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும்எனமக்கள்கோருகின்றனர். குறித்த குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

ஏ.டி.தேவதாசன்,
முருங்கன்.

# காயத்ரி மந்திரத்தின் மகிமையும் சிறப்பும்

இரா. நிசாந்தன்

மானிடர்களாகிய நாம் இறைவன்மீது பக்தி கொண்டு வழிபாடியற்றி வருகின்றோம். இறை வழிபாட்டிலே மந்திரங்களும் முதன்மைபெறுகின்றன. இறைவனை எமது திருவாயினால் நாமங்கள் கூறி, போற்றித் துதிப்பதற்கு மந்திரங்கள் துணை புரிகின்றன. அத்தகு மந்திரங்களில் அடிப்படையான மந்திரம், அனைத்து மந்திரங்களுக்கும் ஆதாரமான மந்திரம், அதுவே காயத்ரி மந்திரமாகும். சாவித்ரி எனும் காயத்ரி தேவியை வணங்கும் தெய்வீக மந்திரம் இதுவாகும். ஆகவேதான் காயத்ரியைப்போல் சிறந்த மந்திரம் இல்லை என்பது முன்னோர் வாக்காகும். அது மட்டுமன்றி பகவான் கிருஸ்ணர் பகவத் கீதையில் மந்திரங்களில் நான் காயத்ரி என மொழிகின்றார். இத்தகு சிறப்பு மிகுந்த காயத்ரி மந்திரத்தை விஸ்வாமித்திர முனிவர் அருளிச் செய்தார்.

"ஓம் பூர் புவ ஸ்வக, தத் ச விதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ ந ப்ரசோதயாத்"என்பதே காயத்ரி மந்திரமாகும். இதன் பொருளாக, மூன்று உலகங்களையும் படைக்கக் காரணமாக இருந்த ஒளி பொருந்திய பரம்பொருளை நாம் தியானிக்கின்றோம். எம் அறியாமை எனும் இருளைப் போக்கி அந்தப் பரம் பொருள் எம் அறிவை ஊக்குவிக்கட்டும் என்பதாகும். பார்வைக்கு காயத்ரி மந்திரம் சிறிதாயினும், அதன் மகிமையும், சக்தியும் மிகப் பெரியதாகும்.

நான்கு வேதங்களுக்கும் ஆதாரமாக காயத்ரி மந்திரமே திகழ்கின்றது. மேலும் காயத்ரி மந்திரத்தின் அதிபதியாக காயத்ரி தேவி ஐந்து முகங்கள் கொண்டவராக திகழ்கின்றார். பஞ்ச புதங்களும் இந்த ஐந்து முகங்களில் அடக்கம் என்பதையே அது உணர்த்துகின்றது. தாமரை மலர் ஆசனத்தில் கைகளில் பல வகையான ஆயுதங்கள் ஏந்தியவாறு காட்சியளிப்பாள்.

காலைப் பொழுதில் காயத்ரி தேவி குழந்தை வடிவில் காட்சி அளிப்பாள், மதியப் பொழுதில் நடுத்தர வயதுப் பெண் போல காட்சி கொடுப்பாள், பின் மாலைப் பொழுதில் வயது முதிர்ந்த பெண் போல காயத்ரி காட்சியளிப்பாள். ஆகவேதான் எந்த மந்திரம் சொல்வதாயினும் காயத்ரி மந்திரம் சொன்னதன் பின்பே அவை சொல்ல வேண்டும் என்பது நியதியாகும்.

**காயத்ரி மந்திரத்தை உச்சரிக்கும் முறை**

காயத்ரி மந்திரத்தை தினமும் காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலே, அல்லது தினம் ஒரு வேளையிலே வீட்டின் பூஜை அறை அல்லது ஆலயங்கள், மற்றும் தியான மண்டபம், அமைதியான இடங்களில் அமர்ந்திருந்து உச்சாடனம் செய்யலாம். நாம் இம் மந்திரத்தை, மான்தோல், அல்லது புற்களால் ஆன பாய், முதலியவற்றின் மேல் அமர்ந்திருந்து உச்சரிப்பது நன்மை தரும். மேலும் கிழக்கு மற்றும் வடக்கு திசை நோக்கியவாறு பத்மாசனம் அல்லது சித்தாசனம் ஆகிய நிலையில் அமர்ந்திருப்பது சாலச் சிறந்தது. ஆகவே எங்கும் எப்போதும், எவரும் பக்தியுடன் காயத்ரி மந்திரத்தை உச்சரிக்க முடியும்.

காயத்ரி மந்திரத்தை எப்போது சொல்லத் தொடங்கினாலும் 27 தடவை சொல்வது மிகவும் நல்லது. தினமும் காயத்ரி மந்திரம் சொல்லி வருபவர்களுக்கு "ஆத்மசுத்தி" கிடைக்கும். ஆலயத்தின் எந்த பகுதியில் நின்றும் காயத்ரி மந்திரத்தை உச்சரிக்கலாம். ஆனால் மனம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம். ஆலயத்துக்கு செல்லும் போதும் காயத்ரி மந்திரத்தை உச்சரித்தால் நல்ல பலன்கள் உங்களைத் தேடிவரும்

**காயத்ரி மந்திரம் உச்சரிப்பதன் நன்மைகள்**

இவ்வாறு முறையாக காயத்ரி மந்திரத்தை உச்சரித்து வருவதனால் ஏகப்பட்ட நன்மைகள் கிடைக்கின்றன. தினமும் காயத்ரி மந்திரம் உச்சரிப்பதால்

"காயத்ரி மந்திரத்தை எப்போது சொல்லத் தொடங்கினாலும் 27 தடவை சொல்வது மிகவும் நல்லது. தினமும் காயத்ரி மந்திரம் சொல்லி வருபவர்களுக்கு "ஆத்மசுத்தி" கிடைக்கும். ஆலயத்தின் எந்த பகுதியில் நின்றும் காயத்ரி மந்திரத்தை உச்சரிக்கலாம். ஆனால் மனம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம். ஆலயத்துக்கு செல்லும் போதும் காயத்ரி மந்திரத்தை உச்சரித்தால் நல்ல பலன்கள் உங்களைத் தேடிவரும்

எம் உடலில் உள்ள அணுக்கள், நரம்புகள் புத்துணர்ச்சி பெறுகின்றன. மேலும், புத்திக் கூர்மை, மன அடக்கம், உடல் வலிமை போன்ற விருத்தியடையும். இது மட்டுமன்றி இறை பக்தியில் உறுதியுடன் ஈடுபடவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. தீய செயல்களை தவிர்த்து நற்செயல்களை செய்வதற்கு துணையாக அமைகின்றது.

**காயத்ரி மந்திரத்தால் நன்மை பெற்றவர்கள்**

சத்தியவான் உயிரை காப்பாற்ற சாவித்திரி தேவிக்கு காயத்ரி மந்திரமே உதவியது. முனிவரின் சாபத்துக்கு எதிராக காலகதியையே ஸ்தம்பிக்க வைத்த நளாயினிக்கு உதவியது காயத்ரி மந்திரமே. மும்மூர்த்திகளின் சோதனையை அனுசுயா தேவி அறிந்து கொள்ள காயத்ரி மந்திரமே உதவியாக இருந்தது. 14 ஆண்டுகள் வனவாசம் சென்ற ராமர்லட்சுமணர் இருவருக்கும் சோர்வு ஏற்படாமல் இருக்க காயத்ரி மந்திரமே உதவியாக இருந்தது

வழிபாடியற்றும் அனைத்து கடவுளர்களுக்கும் தனித்தனியே காயத்ரி மந்திரங்கள் காணப்படுகின்றன. அத்தகைய சில கடவுளர்களுக்குரிய காயத்ரி மந்திரங்களை காணுறுவோம்.



**சிவன் காயத்ரி**
ஓம் மகாதேவாய வித்மஹே ருத்ரரூபாய தீமஹி
தந்நஸ் சிவப் ப்ரசோதயாத்

**விநாயகர் காயத்ரி**
ஓம் தத் புருசாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி
தந்நோ தந்திப் ப்ரசோதயாத்

**ஸ்ரீ துர்க்கை காயத்ரி**
ஓம் காத்யாயநாய வித்மஹே கன்யகுமாரி தீமஹி
தந்நோ துர்கிப் ப்ரசோதயாத்

**ஸ்ரீ விஸ்ணு காயத்ரி**
ஓம் நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹி
தந்நோ விஸ்ணுப் பிரசோதயாத்

**ஸ்ரீ முருகன் காயத்ரி**
ஓம் கார்த்திகேயாய வித்மஹே சக்திஹஸ்தாய தீமஹி
தந்நேப ஸ்கந்தப் ப்ரசோதயாத்

**ஸ்ரீ மகாலட்சுமி காயத்ரி**
ஓம் மகாலட்சுமிச வித்மஹே விஸ்ணுபத்னீச தீமஹி
தந்நோ லட்சுமி ப்ரசோதயாத்

**ஸ்ரீ ஆஞ்சநேயர் காயத்ரி**
ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே வாயுபுத்ராய தீமஹி
தந்நோ ஹனுமப் ப்ரசோதயாத்

**ஸ்ரீ சரஸ்வதி காயத்ரி**
ஓம் வாக்தேவ்யை வித்மஹே காமராக்ஞை தீமஹி
தந்நோ தேவீ ப்ரசோதயாத்

**ஸ்ரீ ஹயக்ரீவர் காயத்ரி**
ஓம் வாகிஸ்வராய வித்மகே ஹயக்ரீவாய தீமஹி
தந்நோ ஹம்ச ப்ரசோதயாத்

**ஸ்ரீ ஐயப்பன் காயத்ரி**
ஓம் புதநாதாய வித்மஹே பவபுத்ராய தீமஹி
தந்நோ சாஸ்தா ப்ரசோதயாத்

ஆகவே, இத்தகைய சிறப்புக்கள் ஊடுறும் மகிமை மிகுந்த காயத்ரி மந்திரம் தனை நாமும் தூய்மையான பக்தியுடன் கூறி வர வேண்டும். தினமும் இயலாது விடினும், வாரம் ஒரு தடவையாயினும் இந்த மந்திரத்தைக் கூறி வரவேண்டும். காயத்ரி மந்திரம் கூறி வரும் போது எமது உள்ளம் இறை பக்தியில் நிலை பெற்று நல்ல சிந்தனைகள் ஊற்றெடுக்கும். ஆகவே காயத்ரி மந்திரம் அதை பக்தியுடன் கூறுவோம் இறைவன் அவன் திருவருள் பெற்று எல்லையில்லா பரமானந்தம் அடைவோம்.

## வரலாற்றில் இன்றைய தினம் 16.03.2018

1962 - மேற்கு பசுபிக் சமுத்திரத்தில் 107 பேருடன் பறந்த 'பிளையிங் டைகர்' வானூர்தி மாயமானது. அதிலிருந்த அனைவரும் இறந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
1968 - வியட்நாம் போரில் மைலாய் கிராமத்தில் சுமார் 500 பேர் உயிரிழந்தனர்.
1969 - 'டக்ளஸ் டிஸி9' வானூர்தி விபத்துக்குள்ளாகியதில் 155 பேர் உயிரிழந்தனர்.
1989 - எகிப்தின் சியோப்ஸ் பிரமிட்டுக்கு அருகில் 4 ஆயிரத்து 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்து 'மம்மி' கண்டுபிடிக்கப்பட்டது.
1988 - யாழ். நகர் இந்தியப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

**நாளை**
**17.03.2018**
சனிக்கிழமை
**பங்குனி 03**

திதி: அமாவாசை மு.இ. 07.07 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ. 08.04 வரை
சுபநேரம்: 03.19–04.49 வரை
ராகுகாலம்: 09.19–10.49 வரை

2008 - காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இலங்கையில் மிகவும் அதிகம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை எச்சரித்தது.

## மரண அறிவித்தல்



### மரிசலின் நிக்கலஸ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வவுனியா குட்செட் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மரிசலின் நிக்கலஸ் 14.03.2018 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்கொலஸ்ரிகாவின் (நேசம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை - மரிசலின் சவினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அல்பிரட் - அன்னபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கரோலின், நிதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூபாலசிங்கம், மதிவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிஷாந், லக்ஷிகா (வவுனியா, புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயம்), ரம்மியா, ரயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.03.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

குட்செட் வீதி,
வவுனியா.

(0029)(1)

**024 222 0072**

---

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

---

## வரணி சிட்டி வேரம் கண்ணகை அம்மன் ஆலயம்

### பொதுக்கூட்டம் - 2018

இடம் : ஆலயமுன்றல் (கலாச்சார மண்டபம்)
காலம் : 01.04.2018 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மு.ப. 10.00 மணி

மேற்படி ஆலயத்தில் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதால் சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலய வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பரிபாலன சபையினர்,**
**சிட்டிவேரம் கண்ணகை அம்மன், வரணி.**

(CS 14786/15)

---

## நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயம்

### பங்குனித் திங்கள் - 2018

பங்குனித் திங்களை முன்னிட்டு நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் **19.03.2018, 26.03.2018, 02.04.2018, 09.04.2018 ஆகிய தினங்களில் அம்பாளுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேகம், பூசை நடைபெற உள்ளன.**

மேற்படி தினங்களில் **முற்பகல் 10.30 மணிக்கு அபிஷேகமும் நண்பகல் 12.00 மணிக்கு பூஜையும்** நடைபெறும் என்பதை சகல அம்பாள் அடியவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

15.03.2018 (akn. 398) (13.17) **ஆலய அறங்காவலர்கள்**

---

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. (7 அறைகளுடன் பெரிய வீடு)

**077 187 7754** (CS/14770)(11)

---

## பசு கன்றுடன் விற்பனைக்குண்டு

நல்ல இன கறவை J.C (கன்னி) பசு கன்றுடன் விற்பனைக்குண்டு.

**077 948 2799** (CS/14771)(11)

S.சிவா, 70, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

---

## வான் தேவை

நல்ல நிலையில் உள்ள
**டொல்பின் ரக வான்**
கொள்வனவு செய்ய உள்ளோம்.

**077 373 4136, 075 653 2510**

---


## தேவை

**யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான இந்திய சீன உணவகத்திற்கு சமையலாளர், சமையலுதவியாளர் தேவை.**
உணவு, தங்குமிடம் இலவம்.

(cs. 14780)(13.17)

**077 464 9297, 021 222 7100**

---




---

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
# குடிசார் வேலைகளுக்கான கேள்விஅறிவித்தல்

**கிளிநொச்சிமாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்டகுடிசார் வேலைகளுக்குகேள்விகள் கோரப்படுகின்றன.**

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தபெயர் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTADதரம்/ பதிவு | கேள்விப் பிணைப் பணம்,செல்லு படியாகும் காலம் | மீளளிக் கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/11/Con/VP/Kac/714 | கிளிநொச்சிமாவட்டச் செயலகத்திற்கானவாகனத் தரிப்பிடம் நிர்மாணம் | 5.304மில்லியன் (வரிநீங்கலாக) | C7 Building | ரூபா53,500.00 வங்கிப் பிணை 17/07/2018வரை | ரூபா 2000.00 |
| 2 | KN/EB/11/Con/R.room/Kar/711 | கரைச்சிபிரதேசசெயலகபதி வேட்டறைநிர்மாணம். | 2.559 மில்லியன் (வரிநீங்கலாக) | C8 Building | ரூபா26,000.00 வங்கிப் பிணை 03/07/2018வரை | ரூபா 2,000.00 |
| 3 | KN/EB/11/Con/B.W/DSQ/707 | பூநகரிப் பிரதேசசெயலாளர் விடுதிக்கானசுற்றுமதில் நிர்மாணம். | 1.260மில்லியன் (வரிநீங்கலாக) | C9 Building | ரூபா 13,000.00 வங்கிப் பிணை 19/06/2018வரை | 500.00 |
| 4 | KN/EB/11/Con/Can/Pny/705 | பூநகரிப் பிரதேசசெயலகசிற்றுண்டிச் சாலைநிர்மாணம். | 4.200மில்லியன் (வரிநீங்கலாக) | C8 Building | ரூபா 42,000.00 வங்கிப் பிணை 03/07/2018வரை | ரூபா 2,000.00 |
| 5 | KN/EB/11/Con/Mbp/706 | பூநகரிப் பிரதேசசெயலகவாகனத் தரிப்பிடம் நிர்மாணம். | 2.100மில்லியன் (வரிநீங்கலாக) | C8 Building | ரூபா 21,000.00 வங்கிப் பிணை 03/07/2018வரை | ரூபா 2,000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாணஒப்பந்ததாரரை பதிவுசெய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதியநிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிகதகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285357,பக்ஸ் இல:-0212283966)

3. கேள்வி ஆவணங்களை 16.03.2018 ஆம் திகதியிலிருந்து 29.03.2018 ஆம் திகதிவரை முற்பகல் 9.00மணி முதல் பிற்பகல் 3.00மணிவரை வேலைநாள்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

4. இரு அரக்குமுத்திரை இடப்பட்டஉறைகளில் (மூலப்பிரதி,பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும்,கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "KN/EB/Con/…." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,மாவட்டச் செயலகம், கிளிநொச்சி** எனும் விலாசத்திற்கு 03.04.2018 ஆம் திகதி பிற்பகல் 02.00மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

6. கேள்விகள் தயாரிப்புஅல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக மாட்டார்.

7. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் (Pre bid meeting) 23.03.2018ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்குமாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

8. தாமதமாககிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர், கிளிநொச்சிமாவட்டம்.**

(CS/14764)(11,17)

---



## நீங்கா நினைவில்

2ஆம் ஆண்டு



எட்டு வருடங்கள் ஆனதம்மா –எம்
மகளே உமைப் பிரிந்து
அப்பாவையும் உன்னுடனே
அரவணைத்துக் கொண்டாயம்மா
இப்பிறவியில் இருவரையும் – இனி
எப்போது காண்போமம்மா
ஆறவில்லை எம் சோகம்
ஆற்ற யாரும் இல்லையம்மா
ஆத்மா சாந்தி பெற்றிடவே
அனுதினமும் வேண்டுகின்றோம்.

8ஆம் ஆண்டு



**அமரர் ச.சுப்பிரமணியம்**
மலர்வு:- 10.01.1934 உதிர்வு:- 18.06.2016
103/23, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

திதி:- சதுர்த்தசி
16.03.2018

077 466 1045

**அமரர் பி.பிறேமலோஜினி**
மலர்ந்த மலராக :- 30.08.1982
கருகிய பூவாக :- 13.04.2010
உங்கள் நினைவால் வாடும்
குடும்பத்தினர்.

(CS/14731)(11.17)



## அதிபர் பதவி வெற்றிடம்

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலை அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. தற்போது அதிபர் பதவி வெற்றிடமாக உள்ள பாடசாலை

- யா/ஊர்காவற்துறை றோ.க. ஆண்கள் பாடசாலை

விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

- வகை III பாடசாலை என்பதால் அதிபர் சேவை தரம் 3 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. இலங்கை அதிபர் சேவை 3 ஐச் சேர்ந்த விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் மூன்று (03) வருட சேவையை முழுமையாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

அ. பொருத்தமான அதிபர் தரமுடைய பாடசாலையை சேவை நிலையமாக கொண்டிராதவர்களுக்கு இந் நிபந்தனை பொருத்தமற்றது.
ஆ. பிரதி / உப அதிபராக, பகுதித் தலைவராக மற்றும் பொறுப்புக்கள் வழங்கப்படாதுள்ள இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு இந் நிபந்தனை பொருத்தமற்றது.

- வலயக் கல்வி அலுவலக நேர்முகத் தெரிவுச்சபையின் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு:**

- மேற்படி பதவிக்கு தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 02.04.2018 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஆ. இளங்கோ.**
**வலயக்கல்விப் பணிப்பாளர், தீவகம்.** (C 33173/15/17) **15.03.2018**



## உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம்.

### 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் ஆகிய என்னால் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(இ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கான முதல்வர்/ தவிசாளர். பிரதிமுதல்வர்/ உபதவிசாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதலாவது கூட்டம் அட்டவணையில் குறிப்பிட்ட திகதி மற்றும் நேர அட்டவணையின் பிரகாரம் குறிக்கப்பட்ட இடங்களில் கூட்டப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

| தொ. இல. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | திகதி | நேரம் | கூட்டப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாண மாநகர சபை. | 26.03.2018 | மு.ப. 9.00 | யாழ்ப்பாண மாநகர சபை சபா மண்டபம். |
| 2. | சாவகச்சேரி நகர சபை. | 26.03.2018 | பி.ப. 2.00 | சாவகச்சேரி நகர சபை சபா மண்டபம். |
| 3. | பருத்தித்துறை நகர சபை. | 27.03.2018 | மு.ப. 9.00 | பருத்தித்துறை நகர சபை சபா மண்டபம். |
| 4. | வல்வெட்டித்துறை நகர சபை. | 27.03.2018 | பி.ப. 2.00 | வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபம். |
| 5. | காரைநகர் பிரதேச சபை. | 28.03.2018 | மு.ப. 9.00 | காரைநகர் பிரதேச சபை சபா மண்டபம். |
| 6. | வலிகாமம் மேற்கு பிரதேச சபை. | 28.03.2018 | பி.ப. 2.00 | வலிகாமம் மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 7. | வேலணை பிரதேச சபை. | 29.03.2018 | மு.ப. 9.00 | வேலணை பிரதேச சபை சபா மண்டபம். |
| 8. | வலிகாமம் தெற்கு பிரதேச சபை. | 29.03.2018 | பி.ப. 2.00 | வலிகாமம் தெற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 9. | வலிகாமம் வடக்கு பிரதேச சபை. | 02.04.2018 | மு.ப. 9.00 | வலிகாமம் வடக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 10. | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை. | 02.04.2018 | பி.ப. 2.00 | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 11. | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை. | 03.04.2018 | மு.ப. 9.00 | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 12. | பருத்தித்துறை பிரதேச சபை. | 03.04.2018 | பி.ப. 2.00 | பருத்தித்துறை பிரதேச சபை சபா மண்டபம். |
| 13. | நல்லூர் பிரதேச சபை. | 04.04.2018 | மு.ப. 9.00 | நல்லூர் பிரதேச சபை சபா மண்டபம். |
| 14. | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. | 04.04.2018 | பி.ப. 2.00 | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 15. | சாவகச்சேரி பிரதேச சபை. | 05.04.2018 | மு.ப. 9.00 | சாவகச்சேரி பிரதேச சபை சபா மண்டபம். |
| 16. | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை. | 05.04.2018 | பி.ப. 2.00 | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை-சபா மண்டபம். |
| 17. | நெடுந்தீவு பிரதேச சபை. | 06.04.2018 | மு.ப. 11.00 | நெடுந்தீவு பிரதேச சபை சபா மண்டபம். |
| 18. | கரைச்சிப் பிரதேச சபை. | 09.04.2018 | மு.ப. 9.00 | கரைச்சிப் பிரதேச சபை சபா மண்டபம். |
| 19. | கரைத்துறைப்பற்று பிரதேச சபை. | 09.04.2018 | பி.ப. 2.00 | கரைத்துறைப்பற்று பிரதேச சபை சபா மண்டபம். |
| 20. | மன்னார் நகர சபை. | 10.04.2018 | மு.ப. 10.00 | மன்னார் நகர சபை சபா மண்டபம். |
| 21. | மன்னார் பிரதேச சபை. | 10.04.2018 | பி.ப. 2.30 | மன்னார் பிரதேச சபை சபா மண்டபம். |
| 22. | நானாட்டான் பிரதேச சபை. | 11.04.2018 | மு.ப. 10.00 | நானாட்டான் பிரதேச சபை சபா மண்டபம். |
| 23. | முசலி பிரதேச சபை. | 11.04.2018 | பி.ப. 2.30 | முசலி பிரதேச சபை சபா மண்டபம். |
| 24. | மாந்தை மேற்கு பிரதேச சபை. | 12.04.2018 | மு.ப. 10.00 | மாந்தை மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 25. | வவுனியா நகர சபை. | 16.04.2018 | மு.ப. 10.00 | வவுனியா நகர சபை சபா மண்டபம். |
| 26. | வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை. | 16.04.2018 | பி.ப. 2.30 | வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை சபா மண்டபம். |
| 27. | வவுனியா வடக்கு பிரதேச சபை. | 17.04.2018 | மு.ப. 10.00 | வவுனியா வடக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 28. | வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. | 17.04.2018 | பி.ப. 2.30 | வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை சபா மண்டபம். |
| 29. | மாந்தை கிழக்கு பிரதேச சபை. | 18.04.2018 | மு.ப. 10.00 | மாந்தை கிழக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 30. | துணுக்காய் பிரதேச சபை. | 18.04.2018 | பி.ப. 2.30 | துணுக்காய் பிரதேச சபை சபா மண்டபம். |

**உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம்.**
**முதியோர் இல்ல வளாகம், A9 வீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம். 2018 மார்ச் 15.**

(C 31905/15)

**ம.பற்றிக் டிறஞ்சன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு மாகாணம்.**



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 . 11 . 1939



மறைவு
08 . 04 . 2013

**திருமதி தனேஸ்வரி சபாரத்தினம்**
*திதி: 16.03.2018*

ஆறாத துயரில் எம்மையெல்லாம் ஆழ்த்தி விட்டு
ஆண்டவன் பாதத்தில் நீங்கள் சேர்ந்து
ஆண்டுகள் ஐந்து ஆகிவிட்டன......
ஆனாலும் மாறவில்லை அம்மா!
உங்கள் மீது நாங்கள் கொண்ட நேசம்.

அம்மன் கோயிலடி,
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.
**குடும்பத்தினர்.**



## ஐந்தாம் ஆண்டு நினைந்துருகல் அஞ்சலி

மனிதநேயம் மண்ணில் மரணிப்பதில்லை



**திதி:16.3.2018**

## Lion மார்கண்டு–கிரிதரன்

அகில இலங்கை சமாதான நீதவான்
விமாகி உரிமையாளர்

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள்
ஆறாத் துயர் எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே!
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகை பூத்தமுகம் தோன்ற
கண்கள் நிறைகிறது கண்ணீர் சொரிகிறது
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எம்முள்ளே நீங்கள் எந்நாளும் உயிர்வாழ்கிறீர்கள்
இனிய நினைவுகளும் இழந்தவலியும் வேதனையும்
இறுதிமூச்சுவரை எம்முள் சுமப்போம் அப்பா!!!

**உயிரோட்டமான உங்கள் நீங்கா நினைவலைகளுடன்**

Tel
0777 701523

அன்பு மனைவி-றோகினி-கிரிதரன்
ஆசை மகள் -கிரிதரன்-அம்ரிஷா




# மிஷ்கினின் அடுத்த படத்தில் இரு நாயகிகள்

விஷால் நடித்த 'துப்பறிவாளன்' படத்தையடுத்து மற்றொரு படத்துக்குத் தற்போது தயாராகிவிட்டார் மிஷ்கின். அவருடைய அடுத்த படத்தின் நாயகன் சாந்தனு பாக்யராஜ் என்ற தகவல் வெளிவந்த நிலையில் தற்போது இந்த படத்தின் நாயகிகள் குறித்த தகவல் வெளிவந்துள்ளது. மிஷ்கினின் அடுத்த படத்தில் 'மெர்சல்' நாயகிகளில் ஒருவரான நித்யாமேனன் நாயகியாக நடிக்கவுள்ளார். அதுமட்டுமின்றி இந்த படத்தின் இன்னொரு முக்கிய கதாபாத்திரத்தில் சாய்பல்லவியும் நடிக்கவுள்ளார். நித்யாமேனன் மற்றும் சாய்பல்லவி இணைந்து நடிக்கும் முதல் தமிழ்ப்படம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்புட்டு நாளா ஊரை விட்டு ஒதுக்கி வைச்சிருந்த மூஞ்சி புத்தகத்தை மறுபடியும் ஊருக்குள்ள சேர்த்திருக்காங்களாம்......மயக்க நிலையில் இருந்த பேஸ்புக்குக்கு நாடு நாடாக அலைந்து திரிந்து உணவும் தண்ணீரும் கொடுத்து வாழ வைத்த VPN பாவனையாளர்கள் அனைவருக்கும் மார்க் மாமா நன்றி சொல்கிறார்.
மீண்டும் நாட்டாமை தீர்ப்பை மாற்றாதபடி அனைவரும் ஒற்றுமையுடனும் ஐக்கியத்துடனும் வாழணும்ன்னு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.....




ஒரு பொசிசனில்
நிற்பதற்குள்



போட்டு புரட்டி எடுத்து
விடுகிறது வாழ்க்கை

கிரிக்கெட் எமக்கு சோறு
போடாது...



இருந்தாலும் சோறு சாப்பிட்டுகிட்டே
கிரிக்கெட் பார்க்க வேண்டியதுதான்

பேசுவதற்கு கண்டுபிடிக்கப்பட்ட
அலைபேசி



எல்லோரையும்
ஊமையாக்கிவிட்டது
என்பதே யதார்த்தம்

கோபத்தில் எந்த முடிவையும்
எடுக்காதீர்கள்!!

அது உங்களுக்கான முடிவாகவே
பெரும்பாலும் இருக்கும்!!!

## twitter

- சட்டென வண்டியின் குறுக்கே வந்திடும் நாய் போதும், அன்றாட வாழ்க்கையைப் புரட்டி போட...
- தூண்டிலில் சிக்கிய மீனுக்கு உயிர் பிரிவதைவிட கடலை பிரிவதுதான் அதிகமாய் வலித்திருக்கும்.
- இன்னொருவருடன் ஒப்பிடும்போது தான் அவை குறைகள் அதுவரை அவை என்னுடைய தனித்துவமான இயல்புகள்!
- பெற்றோர்களால் பொத்திப் பொத்தி வளர்க்கப்படும் குழந்தைகளை விட, தன் போக்குக்கு வளரும் குழந்தைகளுக்கே தன்னம்பிக்கை அதிகமாக இருக்கிறது ...
- ஒரு சில சமயங்களில் நடுத்தரவர்க்கத்து வாழ்க்கை உயிருடன் மணலுக்குள் புதைந்தது போன்றதொரு உணர்வை தந்துவிடுகிறது!!!




**மேடம்:** வாழ்வில் இருந்த தடை, குறுக்கீடு விலகும். தொழில் வியாபார வளர்ச்சி பெற தகுந்த பணிகளில் புரிவீர்கள். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** பேச்சில் வசீகரம், மங்கலம் நிறைந்திருக்கும். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிச் செல்வர். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்.

**மிதுனம்:** எதிர்வரும் சிரமங்களை தாமதமின்றி சரி செய்யவும். நல்லவர்களின் ஆலோசனை நன்மைக்கு வழி வகுக்கும். தாராள பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** முக்கிய பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். அடுத்தவர் பார்வையில் அதிக பணம் செலவழிக்க வேண்டாம்.

**சிங்கம்:** நீண்டநாள் முயற்சி வெற்றி பெற எளிதான வழி பிறக்கும். நண்பர் தேவையான உதவியை மனமுவந்து வழங்குவர். தொழில்வியாபாரத்தில்நல்லமுன்னேற்றம்ஏற்படும்.

**கன்னி:** சாந்த குணத்துடன் பிறருடன் பழகுவீர்கள். செயல்களில் வெற்றி பெற தேவையான அனுகூலம் கிடைக்கும். தாராள பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** இஷ்ட தெய்வ வழிபாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்படச் சமாளிப்பர்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் தேவையறிந்து செயற்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது நல்லது.

**தனுசு:** கலை உணர்வுடன் நண்பரிடம் பேசி மகிழ்வீர்கள். வாழ்வில்எதிர்கொண்டசிரமங்களைதிறம்படச்சமாளிப்பீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்காக கடினமாக உழைப்பீர்கள்.

**மகரம்:** சிலர் தவறான ஆலோசனை சொல்லலாம் கவனம். அவப்பெயர் வராத வகையில் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

**கும்பம்:** பணிகளில் தன்னம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலை அதிகரிக்கும். உபரி வருமானம் கிடைக்கும். மகிழ்ச்சியும் நிலைக்கும்.

**மீனம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.



அரசுக்கு கோவம் யார் மேல சார்



பிரச்சினை பண்றவங்க மேலையா இல்ல
பேஸ்புக் யூஸ் பண்றவங்க மேலையா



கடைசியா ஒருக்கா விபிஎன் பாவிச்சிட்டு வந்திடட்டா?



# சுனாமி



சுனாமி ஒரு இயற்கை அனர்த்தமாகும்.

சுனாமி என்பது ஜப்பானியச் சொல்லாகும்

சுனாமியைத் தமிழில் கடல் கோள் என்று கூறுவர்.

ஜப்பானில் இந்த கடல்கோள்களின் தாக்கம் அதிகமாக ஏற்படுகிறது.

கடல்கோள்களினால் உருவாகும் அலைகள் துறை முகங்களைத் தாக்குகின்றன.

துறைமுகங்களைத் தாக்கும் பேரலைகளைச் சுனாமி என ஜப்பானியர் அழைத்தார்கள்.

2004 டிசெம்பர் 26ஆம் திகதி பெரியதொரு கடற்கோள் உலகைத் தாக்கியது.

அன்றிலிருந்து சுனாமி என்ற ஜப்பானியச் சொல் பன்னாட்டு அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது.

இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் நாடுகளைத் தாக்கியது.

பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காவு கொண்டது.

கோடிக் கணக்கான சொத்துக்கள் அழிந்தன.

மக்கள் இன்னலில் சிக்கித் தவித்தனர்.

இலங்கையில் சுமார் முப்பதாயிரம் பேர் உயிரிழந்தனர்.

இலங்கையில் கடற்கரைப் பிரதேசம் அழிவுக்குள்ளானது.

இயற்கைக் காரணிகளால் ஏற்படும் சுனாமியைத் தடுக்க முடியாது.

ஆனால் எச்சரிக்கையாக இருந்தால் அழிவுகளைக் குறைக்கலாம்.

சுனாமி போன்ற பாதிப்புக்களில் இருந்து அழிவுகளைக் குறைக்கும் திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது.

சுனாமி தந்த வடு படிப்படியாக மாறி வருகிறது.

# தந்திரம் பலிக்காத வெளவால்



காட்டில் வாழும் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் இடையே அங்குள்ள வசதிகளையும் வளங்களையும் பகிர்ந்து கொள்வதில் போட்டிகள் ஏற்பட்டு காலப்போக்கில் அது சண்டையாக மாற்றடைந்தது. பறவைகள் அனைத்தும் ஓர் அணியிலும் மிருகங்கள் அனைத்தும் ஓர் அணியிலுமாகப் பிரிந்து நின்றன. சிங்கத்தின் தலைமையில் மிருகங்களும் கழுகின் தலைமையில் பறவைகளும் அணி திரண்டன. தகவல்களின் அடிப்படையில் குறித்த தினத்தன்று மிருகங்களும் பறவைகளும் பெரும் சமவெளி ஒன்றில் திரண்டன. இரு அணிகளும் தத்தமது பிரதிநிதிகள் காட்டின் அமைதி மற்றும் நலன்களைப் பேணும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சிதோல்வியில் முடிந்தது. இரு அணிகளும் போர் புரிவதன் மூலமே முடிவு காண முற்பட்டன. எவ்வளவு திமிர் இந்தப் பறவைகளுக்கு இவர்களை மேலெழவிடக் கூடாது. அடியோடு அழித்து விட வேண்டும் என குள்ளநரி விலங்களுக்குத் தூபமிட்டது. பறவைகளை உண்ணும் நப்பாசையில் இதே யோசனையை வலுக்குறைந்த மிருகங்களும் ஆமோதித்தன.

பறவைகள் பக்கத்திலோ காகங்கள் அங்குமிங்கும் பறந்து பறந்து மிருகங்களை அழித்தே ஆக வேண்டும் என்று அவற்றைத் தூண்டிவிட்டன. இறந்த விலங்குகளின் அழுகும் உடல்களை உண்ணும் கெட்ட ஆசையில் பறவைகளும் சேர்ந்து ஆர்ப்பரித்தன.

இவற்றுக்கிடையில் வெளவால் மட்டும்தான் எந்த அணியில் சேர்வது என்று தெரியாமல் திண்டாடிக்கொண்டிருந்தது. உண்மையைச் சொல்லப் போனால் நடித்துக்கொண்டிருந்தது. தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நப்பாசையில் அது இவ்வாறு நாடகமாடியது.

" எங்களைப் போல பறந்து திரிகிறாய். மரங்களின் உச்சியில் உள்ள பழங்களைப் பறித்தே சாப்பிடுகிறாய். நீ எம் இனம் தான். இந்தப் பக்கம் வா" என்றன பறவைகள். "சீச்சீ நீ எங்கள் இனம்தான். ஏனெனில் நீ எங்களைப் போல் குட்டி ஈனுகிறாய். குட்டிகளுக்குப் பாலூட்டுகிறாய். எனவே இந்தப் பக்கம் வா" என்றன மிருகங்கள்.

"எனக்குத் தெரியும். நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போங்கள்"என்றது வெளவால். போர் ஆரம்பமானது இரண்டு அணிகளும் பலமாக மோதிக்கொண்டன. முதல்நாள் போரில் மிருகங்கள் வெல்வது போல் இருந்தது. அந்த அணியிடம் சென்ற வெளவால் "நான் மிருகம்தானே! உங்களுடனே இருக்கிறேன் என்றது. மிருகங்களும் அதனை ஆமோதித்து தமது அணியில் வெளவாலை இணைத்துக்கொண்டன. மறுநாள் போரில் பறவைகள் வெற்றி பெறுவது போல் இருக்கவே வெளவால் பறவைகள் பக்கம் பறந்து போய் "ஐயோ நான் நேற்று தெரியாமல் அந்தப் பக்கம் போய் விட்டேன். நான் பறப்பதால் பறவைதானே"என்றது பறவைகளும் போனால் போகிறது என்று இருந்துவிட்டன. இப்படியாக தினமும் கட்சி மாறிக்கொண்டிருந்த வெளவாலின் தந்திரம் இரு அணியினருக்கும் புரிந்துவிடவே அவை வெளவாலை அடித்தும் கொத்தியும் விரட்டின. இரண்டு அணியாலும் ஒதுக்கி விடப்பட்டதனால் தான் வெளவால்கள் குகைகளிலும் மற்றும் இருளான பாழடைந்த இடங்களிலும் தலைகீழாகத் தொங்கியபடி இருந்துவிட்டு இரவில் மட்டும் வெளி வருகின்றதோ?



## 'தும்மல்' நகைச்சுவை

ஒருசமயம் அக்பர் அரசரின் அரசவையில் பல அரசியல் பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடந்துகொண்டிருந்தது. அப்போது அக்பர் ஒரு முக்கிய பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு ஆலோசனை பெறுவதற்காக தனது மந்திரியான பீர்பாலை அழைத்து அவருடைய கருத்தைக் கூறுமாறு கேட்டார்.

பீர்பாலும் அந்தப் பிரச்சினை குறித்து தம்முடைய கருத்தைக் கூறிக்கொண்டிருக்கும் போதே தும்மல் வந்து விட்டது. இத்தனை பேர் கூடியுள்ள அவையில் அரசரும் தன் அருகே இருக்க தும்முவது கேவலமானது என நினைத்தவர் தன் தும்மலை அடக்க முயன்று பார்த்தார் முடியவில்லை தும்மி விட்டார்.

உடனே அரசன் அக்பருக்கு கோபம் வந்து விட்டது. "பீர்பால் நீ முழுமுட்டாள். இப்படித்தான் நாகரிகமில்லாமல் நடந்துகொள்வதா?" எனக் கண்டித்தார்.

உடனே பீர்பால் சபையில் மன்னிப்புக் கேட்பதற்காக எழுந்தார். அதற்குள் அக்பருக்கும் தும்மல் வந்துவிட்டது. பீர்பால் தும்மியதைக் கண்டித்து விட்டு, இப்போது தாமே தும்முவது அவமானமாயிற்றே என்று அக்பரும் தமது தும்மலை அடக்க முயற்சி செய்தவர் முடியாமல் தும்மி விட்டார்.

உடனே பீர்பால் "அரசே! நான் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேன்" என்றார். என்ன தவறு செய்தாய்?" என்றார் அக்பர். "முழு முட்டாள் பட்டத்தைப் பெறுவதில்நான்முந்திக்கொண்டு விட்டேனே! மன்னரான தங்களுக்கு இரண்டாவது இடம் தானே கிடைத்தது. இது எவ்வளவுபெரியதவறு. இனிமேல்மன்னரான தங்களுக்குகே முதலிடம் கிடைக்க வேண்டி முதலில் நீங்கள் தும்மிய பின்பே நான் தும்முவேன்" என்றார். இதைக் கேட்ட அக்பர் புன்னகை செய்தார்.

## இரு படங்களுக்கும் இடையே 7 வேறுபாடுகள் உள்ளன; கண்டுபிடியுங்கள்



# வெள்ளைப்புலி



சில விலங்கினங்கள் மறைந்து போகின்றன. அவற்றில் ஒன்று வெள்ளைப்புலி. காடுகளில் இயற்கைச் சூழலில் வாழும் வெள்ளைப்புலி இனம் இன்று அரிதாகிவிட்டது. இன்று உலகில் சில மிருகக்காட்சிச்சாலைகளில் மட்டுமே இவை பிழைத்து வாழ்வதற்கு பாதுகாப்பும் விஞ்ஞான முறையில் இனப்பெருக்க வழியும் உள்ளது.

இன்று உலகில் எண்பது வரையிலேயே வெள்ளைப்புலிகள் உள்ளன. இவை 1951ஆம் ஆண்டு இந்தியாவின் மத்திய பிரதேசத்தின் ஹேவா பகுதி காடுகளில் காணப்பட்ட மோகன் என்ற ஒரு ஆண்புலியின் வாரிசுகள் ஹேவா மகாராஜா அந்தக் காட்டில் ஒன்பது மாத வெள்ளைப் புலி ஒன்றைக் கைப்பற்றினார். மோகனுடன் காணப்பட்ட ஏனைய மூன்று குட்டிகளும் வழமையான ஒரேஞ் சிறந்தவை. இந்த மோகன் என்ற வெள்ளை புலி, பேகம் என்ற பெண் புலியுடன் இணைந்ததால் 1955ஆம் ஆண்டில் நான்கு வெள்ளைக் குட்டிகள் பிறந்தன. மேலும் நான்கு ஈற்றுகளில் பதின்னான்கு குட்டிகளை ஈன்றன. அவற்றுள் பதினொன்று வெள்ளைக்குட்டிகள்.

1963ஆம் ஆண்டு ஹேவா மகாராஜா இந்திய அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து நான்கு வெள்ளைப்புலிகளையும் இரண்டு சாதாரண புலிகளையும் டெல்லியில் உள்ள விலங்கியல் பூங்காவுக்கு அன்பளிப்புச் செய்தார். பிறக்கும் குட்டிகள் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும் என்பது ஒப்பந்தம். இந்த மோகனின் சந்ததி இந்தியா அடங்கலும் உள்ள மிருகக் காட்சிச்சாலைகளில் பரந்துள்ளன. பன்னாட்டு எல்லைகளைக் கடந்து செழிப்படைகின்றன.

அமெரிக்கா, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள சேர்கஸ்களிலும் வெள்ளைப்புலிகளைக் காணலாம். அமெரிக்கா இலினோய்ஸ் ஹத்தோன சேர்கஸில் 28 வெள்ளைப்புலிகள் உள்ளன. இந்தியாவில் புவனேஸ்வரில் நந்தன் கானன் உயிரியல் பூங்காவில் வெள்ளைப் புலிகள் உள்ளன. மோகன் காலத்திலிருந்து வெள்ளைப்புலியின் வரலாறு மிருகக்காட்சிச்சாலையிலும் சேர்கஸ்களிலும் அடங்கியுள்ளது. அவற்றில் டெல்கி மிருக்காட்சிசாலை முன்னணி வகிக்கிறது.

## இலங்கை...

குழுவுக்கு உத்தரவிட்டார்.

இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

அரச தலைவரின் செயலர் ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கும் முகநூல் நிறுவன அதிகாரிகளுக்குமிடையில் நேற்று முற்பகல் அரச தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் தீர்மானங்கள் மற்றும் உடன்பாடுகள் குறித்து தற்போது ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால கேட்டறிந்ததன் பின்னர் தடையை நீக்கும் பணிப்புரையை விடுத்துள்ளார்.

கடந்த சில நாள்களாக தேசிய ஐக்கியத்துக்கும், மக்கள் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படும் விதத்தில் கலவர சூழ்நிலை பரவுவதை தவிர்க்கும் வகையில் சில சமூக ஊடகங்களுக்கு பிரவேசிப்பதற்கு தற்காலிகமாகத் தடைவிதிக்க அரசு நடவடிக்கை எடுத்தது. நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு இந்த நடவடிக்கை காரணமாக அமைந்ததுடன், மக்கள் பாதுகாப்பு குறித்து உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு சமூக வலைத்தளங்களுக்கு மீண்டும் பிரவேசிப்பதற்கான வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அரச தலைவரின் பணிப்புரைக்கேற்ப அரச தலைவரின் செயலர் ஒஸ்டின் பெர்னாண்டோவினால் முகநூல் சமூக வலையமைப்பின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது. சமூக ஊடக வலையமைப்பை பிழையாகப் பயன்படுத்தி இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி மக்களின் வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்துதல், மக்களின் வாழ்க்கையை சீர்குலைத்தல் மற்றும் சில அடிப்படை வாதிகளினால் சமூக ஊடக வலையமைப்பு துஷ்பிரயோகம் செய்யப்படுவது குறித்தும் இதன்போது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

அந்தவகையில் இனவாத, மதவாத வெறுப்புப் பேச்சுக்கள் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக முறைமைகளையும் நிறுவனக் கட்டமைப்பையும் ஏற்படுத்துவதற்கு முகநூல் அதிகாரிகள் உடன்பட்டனர். இதன்போது அரசு, சிவில் குடிமக்கள் அல்லது குற்றவிசாரணை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் விடயங்கள் தொடர்பில் உடனடியாக பதிலளிக்கவும் செயற்படவும் உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.

முகநூல் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தி வெறுப்புப் பேச்சுக்களை பரப்புவது இலங்கைச் சட்டத்தின் கீழ் குற்றமாகும் என்பதுடன், அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக முகநூல் சமூக உடன்படிக்கைக்கேற்ப செயற்பட அந்த நிறுவனம் இணக்கம் தெரிவித்தது.

இந்த உடன்பாடு குறித்து முன்னேற்ற மீளாய்வொன்றை உரிய கால இடைவெளியில் இருதரப்புக்கும் இடையில் மேற்கொள்வதற்கும் அதற்கேற்ப மிகவும் வினைத்திறனான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டவகையில் எதிர்காலத்தில் செயற்படவும் இருதரப்புக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது.

இந்தத் தற்காலிக சமூக ஊடகத் தடை காரணமாக சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து அரசு கவலை தெரிவித்துள்ளது என்றுள்ளது. (5)

## எல்லை...

கொழும்பு, மார்ச் 16
ஐ.நா. மனித உரிமைகள் சபையானது இலங்கையின் இறையாண்மையை மீறும் வகையில் உள்நாட்டு விவகாரங்களில் தொடர்ந்தும் தலையிட்டு வருகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கையிலுள்ள சட்டத்துக்கு மேலானதல்ல.

இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சரும் முன்னாள் கடற்படை அதிகாரியுமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆதரவு அணி சார்பில் சரத் வீரசேகர தலைமையிலான குழு பங்குபற்றி வருகின்றது. மனித உரிமைகள் சபையில் நேற்று நடைபெற்ற உபகுழுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

30/1. தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்தும் விதம் பற்றி மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் தனது வாய்மூல அறிக்கையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கை இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்பட்ட மனித உரிமைகள் சபை ஆணையாளரின் அறிக்கைக்கு எதிராக நான் இரண்டு அறிக்கைகளை 2014ஆம் ஆண்டு மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்திருந்தேன். அதில் அனைத்து விடயங்களும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்திருந்த 30/1 கீழ் தீர்மானத்துக்கு இலங்கை அயலுறவுத்துறை அமைச்சு இணை அனுசரணை வழங்கியிருந்தது. இதற்கு அரச தலைவரின் அனுமதி பெறப்படவில்லை. இலங்கை நாடாளுமன்றின் அனுமதியும் பெறப்படவில்லை.

இணக்கப்பாடற்ற அறிக்கையைத் தொடர்ந்து செயற்படுத்துவது மனித உரிமைகள் சபையின் சட்டங்களை மீறுவதாகும். அனைத்து இலங்கையர்களின் மனித உரிமைகளையும் மீறும் செயற்பாடாகும் - என்றார். (5)

## வடக்கில்...

பிரதேச சபை, முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு பிரதே சபை, வவுனியாவில் வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை என்பனவே 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

பூநகரி, புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஊர்காவற்றுறைப் பிரதே சபையில் ஈ.பி.டி.பியும், வவுனியா தெற்கு சிங்களப் பிரதே சபையில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் ஆட்சி அமைக்கவுள்ளன. மேற்படி அரசியல் கட்சிகள் குறித்த சபைகளின் மொத்த ஆசனங்களில் 50 வீதம் அல்லது அதற்கு மேலதிகமாகப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சபைகளின் முதலாவது அமர்வு, மேற்படி கட்சிகளின் செயலர்களால் பெயர் குறிக்கப்பட்ட தவிசாளர் தலைமையில் இடம்பெறும். (5)







## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா தியாகராசா



பொன்னாலை, கிருஸ்ணன் கோயலிடியைப் பிறப்பிடமாகவும், இல.03, கண்ணாபுரம், கொட்டடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா தியாகராசா நேற்று (15.03.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லர் தியாகராசாவின் அன்புமனைவியும் சதீஸ்வரன் (யாழ்.மாநகரசபை), அனிஸ்குமார், டர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும் டொமினிக்கா, றோகினி, விஜிகுமார் ஆகியோரின் அன்புமாமியும் கிஷாந்தினி, சுஷாந்தினி, கபிசனா, தேனுஜா, பவிஜித் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2018) வெள்ளிக்கிழமை மு.ப.9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 3, கண்ணாபுரம் கொட்டடி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி லூர்த்தம்மா அருளானந்தம்



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் பலாலி,வளலாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூர்த்தம்மா அருளானந்தம் கடந்த (14.03.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தத்தின் அன்பு மனைவியும் மரியராணி, மேரி யோசேப், லில்லிபுஸ்பம், அன்ரன் ஞானரட்ணம், மேரி புஸ்பராணி, அன்ரன் ஜெயராசா (கனடா), காலஞ்சென்ற அன்ரன் ஜெயக்குமார் மற்றும் மேரி ஜெமிலா, அன்ரன் ஜெயசீலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் செல்வரட்ணம், ராணி, காலஞ்சென்ற பிலோமிநாதர் மற்றும் சாந்தி, றஞ்சன், இன்பம், யோசேப் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.03.2018) சனிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பலாலி, அன்ரனிபுரம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பலாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்: குடும்பத்தினர்.**

**வளலாய், பலாலி.** (CS 14790/15) **0770782855**

## மரண அறிவித்தல்

### இரத்தினராசா பென்சமின் இராஜரட்ணம்

*(முன்னாள் பத்திரிகை ஆசிரியர்)*



கொழும்பைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பத்திரிகை ஆசிரியர் இரத்தினராசா பென்சமின் இராஜரட்ணம் 13.03.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினராசா மற்றும் ஞானமணி தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் பொன்னம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை - யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி) பாசமிகு கணவரும் லாவண்யா (நியூசிலாந்து), ரவிவர்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தலிங்கம் சனந்தனின் அன்பு மாமனும் அபினனின் அன்புப் பேரனும் ஜோன் செல்வரட்ணம் (பிரான்ஸ்), கனகரட்ணம், நவரட்ணம் (பிரான்ஸ்), ஜீவராணி, பேள்றஞ்சினி (பிரான்ஸ்), சாள்ஸ் குணரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவமணி, றமணி, குமாரி, செல்வா, மோகன், சாந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 14795/15)

### சண்முகசேகரம் சிவஞானசேகரம்

*(ஓய்வூதிய வருமானவரி உத்தியோகத்தர் - யாழ்.மாநகரசபை)*



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் அத்தியடி மற்றும் நாவலர் வீதியை வசிப்பிடமாக கொண்ட சண்முகசேகரம் சிவஞானசேகரம் நேற்று (15.03.2018) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகசேகரம் - பூரணி அம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா (விதானையார்) - அருந்ததிநாயகி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் அட்டமங்களலஷ்மியின் பாசமிகு கணவரும் சற்குணானந்தம், சண்முகநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரனும் சிவலக்ஷ்மி (சித்த மருத்துவ அதிகாரி - நல்லூர் பிரதேச சபை), சிவலக்ஷ்மன் (U.K.), ஜெயலக்ஷ்மி (தொலைத்தொடர்பு அலுவலகர் - SLT) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிசாந்தன் (கிராம சேவையாளர்), ஜானகி (U.K.), Dr. மதிவதனன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமை மாமனும் முருகதாசனின் (U.K.) மைத்துனரும் அனுஷா ராமசந்திரனின் பெரியதந்தையும் ரதுஷன், அனுக்சனா, அக்சரன், அச்சுதா, விதுசியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**533/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.
0212219406**

## மாயமாகியுள்ள...

படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்றுப் பிடியாணை பிறப்பித்துள்ளார்.
சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்னவினால் இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனைக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுவதற்கு காலக்கெடு வழங்கப்பட்ட போதிலும் அவர் முன்னிலையாகாமையால் பிடியாணை பிறப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோத்தாகொட நீதிவானிடம் கோரிக்கை விடுத்தார்.
இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கோட்டை நீதிவான் அர்ஜுன மகேந்திரனைக் கைதுசெய்யுமாறு பிடியாணை பிறப்பித்துள்ளார். (5)

## சிவாஜிலிங்கம்...

வழங்கியிருந்ததால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த 22 ஆம் திகதி வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தப்பட்டது. அதன்போது அரச சொத்துக்களைச் சேதமாக்கியமை உட்படப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சிவாஜிலிங்கத்துக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸார் முறைப்பாடு பதிவு செய்தனர்.
கடந்த 27 ஆம் திகதி அது பற்றிய விசாரணைக்கு வருமாறு பொலிஸார் அழைத்திருந்தனர். அன்று வடக்கு மாகாண சபை அமர்வு காரணமாக பொலிஸ் நிலையத்துக்குச் சிவாஜிலிங்கம் செல்லவில்லை.
அவர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்பட்ட சட்டத்தரணிகள் முன்பிணை விண்ணப்பம் செய்தனர். விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்று அது பற்றிய விசாரணைக்காக வழக்கைக் கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்திருந்தது.
6ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வந்தது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஜெனிவா சென்றிருந்தார். அவர் சார்பாக முற்பட்ட சட்டத்தரணிகளான எஸ்.எச்.எம். மனாறுதீன், ஆ.முகம்மது பாறுக் ஜனாப் ஹறீஸ் ஆகியோர் முன்பிணை தொடர்பில் வாதிட்டனர்.
"என் சார்பாக மன்றில் முற்பட்ட சட்டத்தரணிகள் இந்திய உச்சநீதிமன்றின் பிரபல சட்டத்தரணி ராம்கெத்மலானி, தமிழக மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு முன்பிணை கோரி வாதாடியபோது முன்வைக்கப்பட்ட வாதங்களைச் சுட்டிக்காட்டியதோடு, இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஸவுக்கு முன்பிணைகோரிய போது முன்வைத்த விடயங்களையும் சுட்டிக்காட்டினர். அதனையடுத்து முன்பிணை நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது" என்று மாகாண சபை உறுப்பினர் சிவாஜி லிங்கம் தெரிவித்தார்.
அதனையடுத்து தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இருவரது ஆள்பிணையில் செல்ல முன்பிணை வழங்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு சிவாஜிலிங்கம் நேற்றுச் சென்றிருந்தார்.
"சிவாஜிலிங்கத்தைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியிருந்தோம். பிணையாளிகளை உறுதிப்படுத்திய பின்னர் விடுவித்தோம்" என்று பொலிஸர் தெரிவித்தனர்.
"என்னை சுமார் ஒன்றரை மணிநேரம் விசாரணைக்கு உட்படுத்தினர். இதுதான் தமது நடைமுறை என்று பொலிஸார் கூறினர். வடக்கு மாகாணத்திலே முதலாவது முன்பிணை எனக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சட்டத்தைநாடி முன்பிணை கோராவிட்டால் குறைந்தது ஆறு மாதங்கள் நான் வெளியில் வரமுடியாதவாறு சட்டப்பிரிவுகளின் கீழ் என்னைக் கைதுசெய்திருப்பார்கள். முன்பிணை வழங்கியிருந்ததன் காரணத்தால் நான் வெளியில் இருந்து கொண்டு இந்த வழக்கைச் சந்திக்கக் கூடியதாக உள்ளது" என்று சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.
ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் நீதிமன்றில் கையெழுத்திட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அவர் மீதான வழக்கை நீதிமன்று எதிர்வரும் 2ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.
ஆர்ப்பாட்டம் தொடர்பிலான இந்த வழக்கில் மொத்தமாக 7பேர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இன்னும் மூன்று பேரை தேடுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர்தான் வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,ரி3)

## உள்ளூராட்சி...

அறிவிக்கப்பட்டுள்ளது.
எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத, தொங்கு நிலையில் உள்ள சபைகளின் முதலாவது அமர்வில் தவிசாளர், உப தவிசாளர் தெரிவு செய்யப்படவேண்டும். உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையிலேயே இந்த நிகழ்வு நடைபெறவேண்டும்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 26ஆம் திகதி மு.ப. 9மணிக்கு மாநகர சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சாவகச்சேரி நகர சபையின் முதலாவது அமர்வு அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு நகர சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
பருத்தித்துறை நகர சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி மு.ப. 9மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வல்வெட்டித்துறை நகர சபையின் முதலாவது அமர்வு அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
காரைநகர் பிரதேச சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி மு.ப. 9மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முதலாவது அமர்வு அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
வேலணை பிரதேச சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 29ஆம் திகதி மு.ப. 9மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் முதலாவது அமர்வு பி.ப. 2மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 2ஆம் திகதி மு.ப. 9மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் முதலாவது அமர்வு அன்றை தினம் பி.ப. 2மணிக்கு சபையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 3ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பருத்தித்துறை பிரதேச சபையின் முதலாவது அமர்வு அன்றைய தினம் பி.ப. 2மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நல்லூர் பிரதேச சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 4ஆம் திகதி மு.ப. 9மணிக்கு சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முதலாவது அமர்வு அன்றைய தினம் பி.ப. 2மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சாவகச்சேரி பிரதேச சபையின் அமர்வு அடுத்த மாதம் 5ஆம் திகதி மு.ப. 9மணிக்கு சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

**கிளிநொச்சி**

இதற்கு அமைவாக, கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 5ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு பச்சிலைப் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கரைச்சி பிரதேச சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 9ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு சபையின் சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தில், கரைதுறைப்பற்று பிரதே சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 9 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு சபையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
மாந்தை கிழக்கு பிரதேச சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 18ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. துணுக்காய் பிரதேச சபையின் அமர்வு அடுத்த மாதம் 18ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**வவுனியா**

வவுனியா மாவட்டத்தில், வவுனியா நகர சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 16ஆம் திகதி பி.ப. 10 மணிக்கு சபையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபையின் அமர்வும் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு சபை சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வவுனியா வடக்கு பிரதேச சபையின் அமர்வு அடுத்த மாதம் 17ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு சபையின் சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் அமர்வு அடுத்த மாதம் 17ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில், மன்னார் நகர சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 10ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மன்னார் பிரதேச சபையின் முதலாவது அமர்வு அன்றைய தினம் பி.ப. 2.30மணிக்கு சபா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
நானாட்டான் பிரதேச சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 11ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முசலி பிரதேச சபையின் முதலாவது அமர்வு அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
மாந்தை மேற்கு பிரதேச சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 12ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (5,105)

## உறுப்பினர்களுக்கான...

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கிய அரசிதழ் 9ஆம் திகதியிடப்பட்டே வெளியிடப்படவுள்ளது. இதனால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான கடிதத்தை உடனடியாக அனுப்பி வைக்கவேண்டிய நிலமை உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு ஏற்பட்டுள்ளது.
உறுப்பினர்களுக்கு இன்றைய தினம் கடிதம் கிடைப்பதற்கு ஏதுவாக, நேற்று இரவிரவாக கடிதம் அனுப்பும் நடவடிக்கையில் உள்ளூராட்சித் திணைக்களம் ஈடுபட்டது. வடக்கில் தொங்கு நிலையில் உள்ள 30 சபைகளின் முதலாவது அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையிலேயே நடைபெறவேண்டும். இந்தச் சபைகளுக்குரிய உறுப்பினர்களுக்கே நேற்றைய தினம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (5)




## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் செகராஜசேகரம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் செகராஜசேகரம் (சேகர்) நேற்று (15.03.2018) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புமகனும் யோகலட்சுமியின் (வசந்தா) அன்புக் கணவரும் துஷியந்தன், சயந்தினி, சந்திராஜினி, ராஜ்சேகர் ஆகியோரின் அன்புத்தந்தையுமம் பரராஜசேகரம் (லண்டன்) காலஞ்சென்ற தவராஜசேகரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 0388 716

## மரண அறிவித்தல்



### ஜெயபாலு கிருஷாயினி

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபாலு கிருஷாயினி நேற்று (15.03.2018) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் ஜெயபாலு - பாலாம்பிகை (ஜெயாஸ் ரெக்ஸ் நெல்லியடி) தம்பதிகளின் அன்பு மகளும் அஞ்சனா, பர்ஷா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சிவக்கொழுந்து, சுப்பிரமணியம் (கராஜ் வைர முத்து) காலஞ்சென்ற பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பண்டித்தறை, நெல்லியடி, கரவெட்டி.** (CS 14793/15/17) **தகவல்: குடும்பத்தினர்.**

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன்
advt@uthayan.com
021 493 1111



கரைச்சி புளியம்பொக்கனை
நாகதம்பிரான் ஆலய
பங்குனி உத்தர பொங்கல் -
2018



## கடை ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 30.03.2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற வுள்ளது.

இப் பொங்கல் உற்சவத்தின்போது வாணிபம் செய்ய விரும்புகின்றவர்களுக்கான கடை ஏலம் விடும் நிகழ்வு எதிர்வரும் 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெற வுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏலத்தின்போது முழுத்தொகையும் உடனடியாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தலைவர்
வீ.இராமநாதன்

செயலாளர்
தி.பிரபாகரன்

(CS/9224/15/17)

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### நல்லம்மா செல்லத்துரை

கடந்த 14.02.2018 புதன்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி
நல்லம்மா செல்லத்துரை அவர்களின்
வீட்டுக்கிருத்திய கிரியைகள்
இன்று (16.03.2018) வெள்ளிக்கிழமை
முற்பகல் 10.00 மணியளவில் அவரது
இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம்
வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன
நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும்
ஏற்றுக்கொள்ளவும்

முதலாம் ஒழுங்கை,
கச்சாய் வீதி, கொடிகாமம்.

குடும்பத்தினர்

## 23 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
10.09.1903



மறைவு
27.03.1995

தோற்றம்
06.06.1908



மறைவு
03.04.1995

அமரர் க.குமரேசு
திதி:- பங்குனி அபரபக்க சதுர்த்தசி

அமரர் திருமதி கு.தங்கம்மா
திதி:- பங்குனி பூர்வபக்க சஷ்டி

ஆண்டுகள் எத்தனை ஆனாலும் ஆறவில்லை உங்கள் நினைவுகள்
இத்தனை ஆண்டுகள் கழிந்தும் ஓயாமல் எம் நெஞ்சில் உங்கள் முகம்
உங்கள் ஆத்மா இறைவன் பாதத்தில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

(ANE/421)(11)

குடும்பத்தினர்.

(ACH/335)(11,17)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 15.02.2018
வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்

அமரர்
### செல்லையா சதாசிவம் நவரத்தினராசா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (15.03.2018) வியாழக் கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (17.03.2018) சனிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை-பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அருந்திராதேவி (சித்திரா) சிவசுப்பிரமணியம்



தோற்றம் 04.04.1957
இறப்பு 15.03.2018

புத்தூர் கிழக்கு புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்திராதேவி சிவசுப்பிரமணியம் நேற்று (15.03.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு -ரோகினி தம்பதிகளின் இரண்டாவது புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்புமருமகளும், சிவசுப்பிரமணியத்தின் (பிரசித்த நொத்தாரிசு, ஓய்வு பெற்ற பதவிநிலை உதவியாளர், யாழ்.பல்கலைக்கழகம்) அன்பு மனைவியும், சஞ்சீவன் (மத்திய கலாசார நிதியம்), சாருகா (யாழ்.பல்கலைக்கழகம், விஞ்ஞான பீடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி, புஸ்பரட்ணம் (சிரேஷ்ட பேராசிரியர்,யாழ்.பல்கலைக்கழகம்), இரட்நேசன் (நோர்வே), காஞ்சனா, குகநேசன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சேதுப்பிள்ளை, சிவபாதம், சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, தியாகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் அந்திரானை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(CS/14776)(11)

குடும்பத்தினர்.

077 968 3964, 021 205 8980

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 15.02.2018
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்

அமரர்
### நாகேந்திரம் லோகநாதன்
(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (17.03.2018) சனிக்கிழமை காலை கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையிலும் பி.ப ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

சந்தை வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மத்தியின் விளையாட்டரங்குக்கு நா.எதிர்வீரசிங்கம் அரங்கு

### என்று பெயர் சூட்டப் பரிந்துரை

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்படும் விளையாட்டரங்குக்கு ஒலிம்பியன் நா.எதிர்வீரசிங்கம் எனப் பெயரிடுமாறு அந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடந்த மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற பழைய மாணவர்களின் கூட்டத்தில் வைத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ம-23)

## இலங்கைக்கு எதிராக களமிறங்குவார் சகிப்

காயம் காரணமாக கடந்த சிலவாரங்களாக அணியை விட்டு விலகியிருந்த சகிப் அல் ஹசன், இன்று இலங்கைக்கு எதிராக களமிறங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது.

முத்தரப்பு ரி-20 தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி இந்தியாவுடன் நாளைமறுதினம் இறுதியாட்டத்தில் மோதும். இதனால் இரண்டு அணிகளுக்கும் இன்றைய ஆட்டம் மிக முக்கியத்துவம் மிக்க ஆட்டமாக அமைந்துள்ளது. இந்த நிலையில் காயம் காரணமாக கடந்த சிலவாரங்களாக அணியை விட்டு விலகியிருந்த பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். அவர் இலங்கைக்கு எதிராக இன்று களமிறங்குவார் என்று கருதப்படுகிறது.

(ம)



## 3 வகைத் தொடருக்காக இலங்கையில் இங்கிலாந்து

மூன்று வகைத் தொடரிலும் விளையாடுவதற்காக இலங்கைக்கு வரவுள்ளது இங்கிலாந்து அணி. சுமார் ஆறு வருடங்களின் பின்னர் இலங்கைக்கு வருகிறது இங்கிலாந்து அணி.

ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும், மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும், ஒரு ரி-20 ஆட்டத்திலும் விளையாடுவதற்காகவே இலங்கைக்கு வருகிறது இங்கிலாந்து. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடர் முதலில் ஆரம்பமாகிறது. ஐந்து ஆட்டங்களும் முறையே ஒக்ரோபர் 10, 13, 17, 20, 22ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. ரி20 ஆட்டம் ஒக்ரோபர் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. டெஸ்ட் தொடரின் மூன்று ஆட்டங்களும் முறையே நவம்பர் 6, நவம்பர் 14, நவம்பர் 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

(ம)



# பதிலடி கொடுக்கப்படுமா பங்களாதேஷ் அணிக்கு?



முத்தரப்பு ரி-20 தொடரின் இறுதி லீக் ஆட்டத்தில், இலங்கை - பங்களாதேஷ் அணிகள் இன்று மோதவுள்ளன. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே இந்திய அணியுடன் இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதிபெறும். இதனால் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டு அணிகளும் இன்று களமிறங்குகின்றன.

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தத் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. தொடரின் லீக் ஆட்டங்களில் ஒவ்வொரு அணியும் தலா இரண்டு தடவைகள் எதிரணியுடன் மோத வேண்டும் என்பதே விதி. இந்திய அணி தனது லீக் ஆட்டங்களை நிறைவு செய்துள்ளது. அந்த அணி நான்கு ஆட்டங்களில் மூன்று வெற்றிகளுடன் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. இலங்கை, பங்களாதேஷ் அணிகள் தலா மூன்று ஆட்டங்களில் விளையாடியுள்ளன. அந்த அணிகளுக்கு இன்னும் ஓர் ஆட்டம் எஞ்சியுள்ளது. இரண்டும் ஒரு வெற்றியைப் பெற்றுள்ளன. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறும் என்ற நிலை உள்ளது.

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் சந்தித்த முதலாவது லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றது. இதனால் அந்த அணிக்கு பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயமும் தேவையும் இலங்கைக்கு உள்ளது.

பங்களாதேஷுக்கு எதிராக இறுதியாக நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இலங்கை அணி பந்துவீசுவதற்குத் தாமதமாகியதை அடுத்து இலங்கை அணியின் தலைவர் சந்திமலுக்கு இரண்டு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையின் பின்னர் இலங்கை எதிர்கொள்ளும் இரண்டாவது ஆட்டம் இன்றுதான். எனவே சந்திமல் இல்லாமல்தான் இன்றைய ஆட்டத்தை இலங்கை அணி எதிர்கொள்கிறது.

(ம)



## காலிறுதிக்கு கேலப் தகுதி

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடராகக் கருதப்படும் இன்டியன் வேல்ஸ் தொடரில், காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் கேலப்பை எதிர்த்து சீன வீராங்கனை . வாங் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 7:5, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் வெற்றியுடன் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் கேலப்.

(ம)

## காலிறுதியில் வீனஸ்

இன்டியன் வேல்ஸ் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து லத்விய வீராங்கனை அனட்சியா மோதினார். 7:6, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார் வீனஸ்.

(ம)

# அருணோதயக் கல்லூரி கரப்பந்தாட்டத்தில் மகுடம்



யாழ்ப்பாணம், மார்ச் 16

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி சம்பியனானது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய கல்லூரி அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரண்டு செற்களையும் முறையே 26:24, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி. (ம-422)

# நெல்லியடி மத்தி. மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், மார்ச் 16
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதிஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற் களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:7, 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது நெல்லியடி மத்திய கல்லூரி அணி.

(ம-108)





# உடுப்பிட்டி மகளிர் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் 17 வயதுப் பெண்கள் பிரிவில் சம்பியனாகியது உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:21, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி. மூன்றாம் இடத்தை வட இந்து மகளிர் கல்லூரி அணி பெற்றது. (ம-108)

# பயிற்சிமுகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
இலங்கைவலைப்பந்தாட்டச்சம்மேளனத்தால் யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாமொன்று எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சி முகாமில் பங்குகொள்ள விரும்பும் பயிற்றுநர்கள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ம-23)

# பீற்றர்ஸ் அபாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குடத்தனை பொற்பதி சென். பீற்றர்ஸ் அணி வெற்றிபெற்றது.
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில்குடத்தனைபொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் குடத்தனை பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# கொற்றாவத்தை அ.மி.த.க. கால்பந்தாட்டத்தில் மகுடம்



யாழ்ப்பாணம், மார்ச் 16
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில், 18 வயது ஆண்கள் பிரிவில் கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை அணி கிண்ணம் வென்றது.
கரணவாய் கொலின்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 10ஆவது, 18ஆவது நிமிடங்களில் றொபின்சன் கொற்றாவத்தையின் சார்பாகக் கோல்களைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை அணி. இரண்டாவது பாதியில் நெல்லியடியின் சார்பாகக் கோலொன்று பதிவானது. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை அணி.' (ம-108)

# கரப்பந்தாட்டத்தில் மகாஜன சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 16
வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயது பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ' அணியை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதியது. முதலாவது செற்றை 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது மகாஜனா. இரண்டாவதுசெற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது அருணோதயக் கல்லூரி. முதலிரு செற்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றிருந்தமையால் மூன்றாவது செற்றில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஃகைப்பற்றியதை அடுத்து 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது மகாஜன. (ம-422)



# செந்தமிழ் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 16
வடமராட்சி கிழக்கு கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில், உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 15ஆவது நிமிடத்தில் செந்தமிழ் அணியின் சார்பாக கோலொன்று பதிவாக முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# டயமன்ஸ், இமையாணன் மத்தி. அணிகளுக்குத் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 16

மைதானத்தில் மோதல் போக்கில் ஈடுபட்டமைக்காக வதிரி டயமன்ஸ் மற்றும் இமையாணன் மத்தி. அணிகளுக்கு ஆறு மாத காலத்துக்குத் தடை விதித்தது வடமராட்சி கால்பந்தாட்ட லீக். இரண்டு வீரர்களுக்கு ஒரு வருட காலத்துக்குத் தடைவிதிக்கப் பட்டது.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் கடந்த மூன்றாம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்தி அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் டயமன்ஸ் அணி ஓர் கோலைப் பதிவு செய்து முன்னிலை வகித்தது. அந்த அணி இரண்டாவது கோலைப் பதிவு செய்வதற்காக முயன்றபோது டயமன்ஸின் வீரர் பிறேம்குமாருக்கும் இமையாணன் மத்தியின் வீரருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது. இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்த வடமராட்சி கால்பந்தாட்ட லீக், இரண்டு அணிகளுக்கும் தலா ஆறு மாதங்கள் தடை விதித்தது. பிரச்சினைக்குக் காரணமாக அமைந்தவர்கள் என்று கருதப்படும் டயமன்ஸ் அணியின் பிறேம்குமார் மற்றும் இமையாணன் மத்திய அணியின் கலையமுதன் ஆகியோருக்கு தலா ஒரு வருடமும் தடை விதிக்கப்பட்டது. (ம-422)



## மன்செஸ்டர் வெளியேற்றம்

ஐரேப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் இருந்து இங்கிலாந்துக் கழகமான மன்செஸ்டர் சிற்றி வெளியேற்றப்பட்டது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்செஸ்டரை எதிர்த்து செவில்லா மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் செவில்லா வெற்றி பெற்றதை அடுத்து மன்செஸ்டர் சிற்றி வெளியேற்றப்பட்டது. (ம)

# மத்தி. - சென். ஜோன்ஸ் ஒருநாள் ஆட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான ஒருநாள் துடுப்பாட்டம் நாளை நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நாளை காலை 9 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் இதுவரை 16 ஒருநாள் ஆட்டங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் 8 ஆட்டங்களில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் 7 ஆட்டங்களில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் வெற்றிபெற்றன. ஓர் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற வடக்கின் போர் துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றிபெற்றது. இதனால் ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு உள்ளது. சென். ஜோன்ஸின் மைதானத்தில் ஆட்டம் நடைபெறுவது அந்த அணிக்கு கூடுதல் சாதகம். (ம)







## வோஸ்னி தோல்வி

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடராகக் கருதப்படும் இன்டியர் வேல்ஸ் தொடரில், காலிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேறினார் கரோலின் வோஸ்னியாக்கி.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ளவரான வோஸ்னியாக்கியை எதிர்த்து ரஷ்ய வீராங்கனை கஸட்கினா மோதினார். முதல் இரண்டு செற்களையும் முறை 4:6, 5:7 என்ற செற் கணக்கில் இழந்து 0:2 என்ற நேர் செற் கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார் வோஸ்னியாக்கி. தரப்படுத்தலில் முதல் 50 இடங்களுக்குள் இல்லாத கஸட்கினாவிடம் வோஸ்னியாக்கி தோல்வியடைந்தமை அதிர்ச்சித் தோல்வியாகக் கருதப்படுகிறது. (ம)

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
SLPS
OPEN/LIMITED
Sun - 9.00 - 2.00 pm
முகாமைத்துவ உதவியாளர்
பிரதி ஞாயிறு - 9.00 - 2.00pm
முன்பள்ளி ஆசிரியர்
பிரதி ஞாயிறு 9.00 - 2.00pm
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
T.P.
077 469 6695

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
முகாமைத்துவ உதவியாளர்
முன்பள்ளி ஆசிரியர்
சாரதி தெரிவு
திட்டமிடல்சேவை
சட்டமாணி நுழைவு
அனைத்து பரீட்சைகளுக்குமான வகுப்புக்கள் குறைந்த கட்டணத்துடன் பரீட்சை வரை வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு
076 688 3394
D.M.I யாழ்நகர்

# இலங்கை வீரர்களின் உடலில் ஜி.பி.எஸ்.

இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கான சிறந்த அணியைத் தயார் செய்யும் பொருட்டு இலங்கை கிரிக்கெட் வீரர்களின் உடலில் ஜி.பி.எஸ். பொருத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெய்னின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனா அணியின் வீரர்களுக்கு முன்பொரு தடவை செய்யப்பட்ட இந்த முறையை இலங்கை கிரிக்கெட் சபை தற்போது பின்பற்றியுள்ளது. இதற்காக இலங்கை மதிப்பில் சுமார் ஒரு கோடியே 25 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரிகளில் ஒருவரான ஆஸ்லே டி சில்வா தெரிவித்ததாவது: 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்கான அணியைத் தயார் செய்யும் பணியில், நாங்கள் ஏராளமான தொழில்நுட்பங்களையும், நவீன முறைகளையும் அணிக்குள் புகுத்தி வருகிறோம். கடந்த 1996ஆம் ஆண்டுக்குப்பின் நாங்கள் உலகக்கிண்ணத் தொடரை வெல்லவில்லை. ஹத்துருசிங்கவின் பயிற்சியின் கீழ் சில தோல்விகளும், வெற்றிகளும் கிடைத்துள்ளன. வீரர்களின் உடலில் தற்போது பொருத்தப்பட்டுள்ள ஜி.பி.எஸ். கருவி, ஒவ்வொரு வீரர்களின் திறனை சிறப்பாக வெளிப்படுத்தும் - என்றார்.

ஜிபிஎஸ் கருவி மூலம் வீரர்களின் மைதானச் செயற்பாடுகளையும் அவர்களின் வேகம் உள்ளிட்ட விடயங்களையும் ஓய்வறையில் இருந்தே பயிற்சியாளர் இலகுவாகக் கண்காணிக்க முடியும். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.